விலை ரூபா 25.00

பக்கம் 08 பக்கம் 09 பக்கம் 10 பக்கம் 23

பக்கங்கள் : 32

# உதயன்

சுடர் 27
கதிர் 228

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 27 புதன்கிழமை (11/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

www.onlineuthayan.com

## தென்பகுதி முதியவர் மயக்கமுற்று சாவு

கிளிநொச்சி, ஜூலை 11
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையில் கட்டட அனுமதி பெறவந்த தென் பகுதியைச் சேர்ந்த முதிய வர் திடீரென மயக்கமுற்று மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம் பெற்றுள்ளது. 04↘

## போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள பாலித ஐ.நா. பட்ஜெட் குழுவில்

### பொருத்தமான நியமனமா என இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி

கொழும்பு, ஜூலை 11
ஐக்கிய நாடுகள் சபைக் கான இலங்கையின் நிரந்த ரப் பிரதிநிதியும், நிபுணர் குழு அறிக்கையில் போர்க் குற்றம் தொடர்பில் குறிப் பிடப்பட்டுள்ளவருமான பாலித கோஹன்னவை, ஐக்கிய நாடுகள் சபையின் வரவு - செலவுத் திட்ட குழுமத்தில் இணைத்துக்கொள்ள பரிந்து ரைக்கப்பட்டுள்ளமை பொருத்தமானதா என இன் னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப் பியுள்ளது.

ஏற்கனவே 04↘

## விடுதலைப் புலிகளை ஆதரிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

### தமிழக அரசுக்கு இந்திய மத்திய அரசு உத்தரவு

புதுடில்லி, ஜூலை 11
இந்தியாவில் தடை செய் யப்பட்டுள்ள அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கத் துக்கு ஆதரவு தெரிவிப்பவர் கள் மீது, கடுமையான நட வடிக்கை எடுக்கப்பட வேண் டும் என்று தமிழக அரசுக்கு இந்திய மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டவிரோத நடவடிக்கை கள் தடுப்புச் சட்டத்தின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இந்த உத்தரவு குறித்த விவரங்களை, அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், தமி ழக பொலிஸ் ஆணையாளர் மற்றும் சேலம், சென்னை, கோவை, திருச்சி, மதுரை, திரு நெல்வேலி பிரதிப் பொலிஸ் ஆணையாளர்கள், கியூப் பிரிவு, குற்றப் புலனாய்வு, நுண்ணறி வுப் பிரிவுப் பொலிஸார் போன் றோருக்கு இந்திய மத்திய உள்துறை அமைச் சின் இணைச் செய 04↘

# துறைமுக, விமானத்தள விஸ்தரிப்புக்கு பலாலி, காங்கேசனில் காணிகள் பறிப்பு



## பிரிட்டன் தூதுவரிடம் திட்டவட்டமாகக் கூறினார் யாழ்.மாவட்ட படைத் தளபதி ஹத்துருசிங்க

யாழ்ப்பாணம், ஜூலை 11
பலாலி விமானப் படைத் தளம், காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றின் விஸ்தரிப்புக் கருதி அவற்றைச் சுற்றியுள்ள காணிகளை அரசு சுவீகரிக்கும் என யாழ். மாவட்டப் படைக ளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த பிரிட் டன் தூதுவர் ஜோன் ராப்கீனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே தளபதி ஹத்துருசிங்க இப்படிக் கூறியிருந்தார் என்று பலாலி பாதுகாப்பு இணையத்த ளம் தகவல் வெளியிட் 04↘

## தமிழர்களின் விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலுடன் முடியவில்லை

### திருமலையில் மாவை எம்.பி.



கொழும்பு, ஜூலை 11
''தமிழினத்தின் விடுத லைப் போராட்டம் முள்ளி வாய்க்காலுடன் முடிவ டைந்து விடவில்லை. அது கடல்தாண்டிய இராஜதந்தி ரப் போராட்டமாக உருவெ டுத்துள்ளது. அதாவது, தமி ழர்களின் போராட்டம் இன்று வல்லரசு நாடுகளுக்கிடை யிலான போராட்டமாக மாறி யுள்ளது. இது முள்ளிவாய்க் காலுடன் தமிழர் போராட் டம் முடிந்துவிட்டது எனக் கனவுகண்டவர்களுக்குப் பெரும் தலையிடியாக மாறி யுள்ளது.''

- இவ்வாறு திரு 04↘

## பொன்சேகாவின் வீரவசனத்தின் பின்னணியில் மேற்குலகம்

### தேசப்பற்று இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 11
சரத் பொன்சேகா வீர வசனங்களைப் பேசுவதன் பின்னணியில் மேற்குலகின் சூழ்ச்சி இருக்கின்றது எனத் தெரிவித்துள்ள தேசப்பற் றுள்ள தேசிய இயக்கம், பொன்சேகாவை பகடைக் காயாகப் பயன்படுத்தி எமது நாட்டுக்குள் சதி முயற்சி களை மேற்கொள்வதற்கும் அந்த நாடுகள் முயற்சிக்கின் றன என்று சுட்டிக்காட்டி யுள்ளது.

பிறந்த மண்ணைக் காட் டிக்கொடுக்கும் வகையில் கருத்துகளை வெளியிடுவது ஈனத்தனமான செயல் என் றும் அவ்வமைப்பின் தலை வர் கலாநிதி குணதாச அமர சேகர குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டன் ஊடகமொன் றுக்கு வழங்கிய செவ்வி யில் சரத் பொன்சேகா இலங்கை அரசை சர மாரியாக விமர்சித் 04↘

## குற்றச் செயல்கள் குறித்து ஜனாதிபதி கவலை வெளியிட்டு என்ன பயன்?

### கேட்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, ஜூலை 11
நாட்டில் குற்றச்செயல் கள் அதிகரித்து விட்டன என்று ஜனாதிபதி கவலை தெரிவிப்பதாலோ, பாது காப்புச் செயலாளர் பொலி ஸாருக்கு அதிகாரம் வழங்கி விட்டோம் என்று கூறுவ தாலோ சட்டவிரோத குற்றச் செயல்கள் தடுக்கப்படப் போவதில்லை.

சட்டவிரோத கும்பல்க ளுக்கு எதிராகக் கடுமை யான நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் சுதந்திரமும் பொலிஸாருக்கும் நீதித் துறையினருக்கும் வழங்கப் பட வேண்டும். ஏட்டுச் சுரைக் காய் கறிக்கு உதவாது என அரசைக் கண்டித்தார் ஐக் கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க.

எதிர்க்கட்சித் தலைவ ரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே இதனைத் தெரி 04↘

## இலங்கை அரசுக்கு எதிராக சென்னையில் ஆர்ப்பாட்டம்



சென்னை, ஜூலை 11
இலங்கையில் இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் மற் றும் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித் தும், மன்னார் ஆயர் இரா யப்பு ஜோசப்புக்கு அச்சு றுத்தல் விடுக்கப்பட்டுள்ள மைக்கு எதிர்ப்புத் தெரிவித் தும், அனைத்து மத தமிழ் மக்கள் மன்றம் சார் பில் சென்னை 04↘

## ஐ.நா.மனித உரிமைகள் சபைக்கு கைதிகள் நிலை குறித்து கடிதம்

கொழும்பு, ஜூலை 11
சிறைச்சாலைகளுக்குள் தங்களின் உறவுகள் எதிர் நோக்கும் அவலங்கள் குறித்து விளக்கியும்,

அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனக் கோரி தமிழ் அரசியல் கைதிகளின் உறவு கள் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபைக்கு விரை வில் கடிதமொன்றை அனுப்பி வைக்கவுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதி களை விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக் கையில் சிபார்சு செய்துள்ள போதிலும், இந்த விடயம் குறித்து அரசு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் முன் 04↘

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தீர்வுக்கான வாய்ப்பை முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவளித்து கெடுக்கக் கூடாது

## கூட்டமைப்பின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் மத்தியில் சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 11

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு நிலைத்து நிற்கக்கூடிய நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு சர்வதேச சமூகம் பொறுப்பேற்றுள்ள இந்தத் தருணத்தில் அந்த வாய்ப்பை சிதறடிப்பதற்கு அரசுக்கு வாய்ப்பை வழங்கக்கூடாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வலியுறுத்தியுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபையின் தேர்தல் தொடர்பாக திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பதவி வகிக்கும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் சந்திப்பொன்று நேற்று மாலை திருகோணமலையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:,

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை சர்வதேச மயமாக்கப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் சந்திக்கப் போகும் முதலாவது ஜனநாயக சோதனையாக கிழக்கு மாகாண சபை

> தீர்வு ஒன்றைக் காண்பதற்கு சர்வதேச சமூகம் பொறுப்பேற்றுள்ள இந்தத் தருணத்தில் அந்த வாய்ப்பை சிதறடிப்பதற்கு அரசுக்கு வாய்ப்பை வழங்கக்கூடாது.

தேர்தல் அமைந்துள்ளது.

இந்தச் சோதனையில் தமிழ் பேசும் மக்கள் வெற்றி பெற வேண்டும். அந்த வெற்றி தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சியில் இடம்பெறும் ஒரு தமிழ் வேட்பாளர் கூட வெற்றி பெற முடியாத நிலையை ஏற்படுத்த வேண்டும்.

வெற்றி பெறும் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களாக இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். தமிழ் மக்கள் இதனை தமது தலையாய கடமையாக எடுத்துக்கொண்டு செயற்பட வேண்டும் - என்றார். (10)




யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள கனேடியத் தூதரகத்தின் கவுன்சிலர் மார்க் ஹேனஸ், அரசியல் அதிகாரி இந்திராணி ஜெயவர்த்தன ஆகியோர் நேற்றுக் காலை உதயன் அலுவலகத்தில் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். (த)

# வன்னி ஆசிரியர்களின் இடமாற்றம் இழுத்தடிப்பு

## முறைப்பாடு குறித்த விசாரணை 17 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 11

வன்னிப் பகுதியில் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆசிரியர் இடமாற்றத்தில் இழுத்தடிப்புச் செய்யப்படுகிறது என இலங்கை ஆசிரியர் சங்கம் செய்த முறைப்பாடு தொடர்பான விசாரணை எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

வன்னிப் பகுதியில் ஆசிரியர் சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 104 ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்கும் விடயத்தில் இழுத்தடிப்பு மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டு, இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினால், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் கடந்த மாதம் 11ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டின் பிரதிவாதிகளாக வட மாகாண கல்விப் பணிப்பாளர், கல்வி

> கடந்த மாதம் 29 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் எடுத்துக் கொள்ளப் பட்டபோது பிரதிவாதிகள் சமுகமளிக்கவில்லை.

அமைச்சின் செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த முறைப்பாட்டு விசாரணை கடந்த மாதம் 29ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகள் சமுகமளிக்கவில்லை.

இந்த நிலையில் மேற்படி முறைப்பாட்டுக்கான விசாரணை எதிர்வரும் 17ஆம் திகதி மீண்டும் நடைபெறவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் மேலும் தெரிவித்தார். (த-5)

# தேர்தல் விதியை மீறுவோருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை

## ஆணையாளரிடம் ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 11

வடமத்திய மாகாண மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் என்ற போர்வையில் அரசு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடக்கூடாதென தேர்தல் ஆணையாளரிடம் ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மூன்று மாகாணசபைத் தேர்தல்களும் நீதியானதும், சுதந்திரமானதுமான முறையில் நடைபெறவேண்டும். தேர்தல் சட்டதிட்டங்களை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமது வாழ்வாதார விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது வடமத்திய மாகாண மக்கள் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசு இதுவரையில் முன்வரவில்லை. வடமத்திய மாகாணத்தில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. இந்நிலையில், அப்பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறி தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கக்கூடாது.

> வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் எமது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் யாவும் ஆரம்பிக்கப்படும்

அரசு அவ்வாறு செயற்படுமாயின், அது மாபெரும் குற்றமாகும். தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளாமல் அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

மூன்று மாகாணசபைகளின் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வது தொடர்பில் நாம் அவதானம் செலுத்திவருகின்றோம். நாளைமறுதினம் இந்த வேட்புமனுத் தாக்கல் தொடர்பில் மீண்டும் பரிசீலனை செய்யவுள்ளோம்.

ஒவ்வொரு மாகாணத்திலும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்காக ஆரம்பக்கட்டப் பணிகள் அந்தந்த மாகாண வேட்புமனுக் குழுவின் மூலம் இடம்பெற்றுவருகின்றன. எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் வேட்புமனுத் தாக்கல் தொடர்பான நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் யாவும் கிராம மட்டங்களிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் எமது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் யாவும் ஆரம்பிக்கப்படும் - என்றார்.

# காலி மாவட்ட சங்கநாயக்க தேரர் இடைநிறுத்தம்

காலி மாவட்ட பிரதம சங்கநாயக்க தேரர் பதவியை அஸ்கிரிய மஹா விகாரை இடைநிறுத்தம் செய்துள்ளது. முன்னாள் பிரதம சங்கநாயக்கரான வண. மிகேதுவத்த சுமித்த தேரர் கொள்ளைகளுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுத் திங்கள்கிழமை இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் நீதிமன்ற வழக்கு முடியும்வரை இந்தத் தீர்மானம் நடைமுறையில் இருக்கும் எனவும் அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் வண. ஆனமடுவ தம்மதாஸி தேரர் தெரிவித்தார்.

காலி மாவட்ட பிரதம சங்கநாயக்க தேரராக வண. மிகேதுவத்த சுமித்த தேரர் 21.09.2011 ஆம் திகதி நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பெரிய கொள்ளைச் சம்பவங்களுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் கைது செய்யப்பட்டார். (த)

# பெரும்பாலான தமிழ்க் கைதிகள் புனர்வாழ்வு பெற விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

இலங்கையிலுள்ள 10 சிறைச்சாலைகளில் 523 பேரும், பூஸா முகாமில் 280 பேருமாக மொத்தம் 803 தமிழ் அரசியல் கைதிகளில் பெரும்பாலானவர்கள் புனர்வாழ்வு பெற விண்ணப்பித்துள்ளதாகவும், அவர்கள் ஒரு வருடப் புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும், சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள 10 சிறைச்சாலைகளில் 523 தமிழ் அரசியல் கைதிகளும், பூஸாதடுப்பு முகாமில் 280 தமிழ் அரசியல் கைதிகளுமாக மொத்தம் 803 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எந்தவித வழக்குத் தாக்கல்களும் மேற்கொள்ளப்படாமல் மிக நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி கடந்த மே மாதம் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்

> சிறப்பு நீதிமன்றம் எதுவும் அமைக்கப்படாத போதும், தமிழ் அரசியல் கைதிகள் விரும்பினால் புனர்வாழ்வுக்கு விண்ணப்பித்து விடுதலையாகலாம் என்று அரசு கூறியிருந்தது.

கொண்டதைத் தொடர்ந்து, சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து ஒரு மாதகாலத்தில் விடுதலை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அரசு அறிவித்திருந்தது.

குறிக்கப்பட்ட ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் சிறப்பு நீதிமன்றம் எதுவும் அமைக்கப்படாத போதும், தமிழ் அரசியல் கைதிகள் விரும்பினால் புனர்வாழ்வுக்கு விண்ணப்பித்து அதன் பின்னர் விடுதலையாகலாம் என்று அரசு பின்னர் கூறியிருந்தது.

இதனடிப்படையில் பெருமளவிலான அரசியல் கைதிகள் [illegible] விண்ணப்பித்துள்ளனர். அவர்கள் ஒரு வருட புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் ஏனையவர்களை நீதிமன்றத்தினூடாக விடுதலை செய்வது அல்லது புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவது தொடர்பிலும் ஆராயப்படும். இதற்காகச் சிறப்பு நீதிமன்றங்கள் அநுராதபுரம், மன்னார், வவுனியா, வெலிக்கடை ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தில் இதற்கான தனிப் பிரிவு [illegible] வேலைகள் இடம் பெற்று வருகின்றன என்றார் அந்த அதிகாரி. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.கே.எஸ். வீதியின் அகலிப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக வீதியின் இரு மருங்கிலும் உள்ள கடைகளை உடைத்துப் பின்னகர்த்தும் பணிகள் தற்போது வேகமாக நடைபெற்றுவருகின்றன. (த-7)

# நெடுந்தீவுப் பங்குத் தந்தையின் பணிமனையில் பணம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 11

நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு அமலராஜ் மேற்குப் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றுக்குப் பூசைக்காகச் சென்றவேளை அவர் தங்கியிருக்கும் புனித யுவானியார் தேவாலய பங்குப் பணிமனையில் இருந்த கைத்தொலைபேசி, 25 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு புனித யுவானியார் தேவாலயத்தில் பூசைகளை முடித்துக்கொண்டு மேற்குப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்குப் பங்குத் தந்தை சென்றிருந்தார். யுவானியார் தேவாலயத்தில் உள்ள அவரது பங்குப் பணிமனைக் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கிருந்த கைத்தொலைபேசி 25 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளதாகவும் இது தொடர்பாக நெடுந்தீவுப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மேலுமொரு பல் வைத்தியர் தேவை

## சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 11

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மேலும் ஒரு பல் வைத்தியரை நியமிக்குமாறு மக்கள் மாகாண சுகாதார திணைக்களத்தினரைக் கோரியுள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் இயங்கும் பல் வைத்தியப் பிரிவில் தற்போது ஒரு வைத்திய நிபுணர் கடமையாற்றி வருகிறார். இந்தப் பிரிவுக்கு பூநகரி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு தென்மராட்சி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பெருமளவு மக்கள் வருகின்றனர். இங்கு காலையில் பல் பிடுங்குதல் உட்பட்ட சிகிச்சைகளும் மாலையில் பல் அடைத்தல், சுத்தம் செய்தல் போன்றவையும் இடம்பெறுவதால் குறிப்பிட்ட நோயாளர்களுக்கு மட்டும் தினமும் சிகிச்சையளிக்கப் படுகிறது. இந்த நிலையில் தூர இடங்களிலிருந்து வரும் பல் நோயாளர்கள் தமது தேவைக்காக பல நாள்கள் அலைய வேண்டியுள்ளது.

அத்துடன் பல் வைத்தியர் தனது சொந்த விடுமுறை மற்றும் கடமையின் நிமித்தம் செல்லும் வேளையில் பற் சிகிச்சைப் பிரிவு மூடப்படுகிறது. இதனால் பொது மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஏற்கனவே இந்த வைத்தியசாலை பற் சிகிச்சைப் பிரிவில் இரண்டு வைத்தியர்கள் பணி புரிந்ததால் மக்கள் சிரமங்களின்றி தமது பல் வைத்தியத் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். இவர்களில் ஒருவர் அண்மையில் இடமாற்றம் பெற்றச் சென்றுள்ளமையால் இந்தப் பிரிவுக்கு நிரந்தரமாக இரண்டு பல் வைத்திய நிபுணர்களை கடமையில் ஈடுபடுத்த சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரியுள்ளனர். (த-9)

> பல் வைத்தியர் தனது சொந்த விடுமுறை மற்றும் கடமையின் நிமித்தம் செல்லும் வேளையில் பற் சிகிச்சைப் பிரிவு மூடப்படுகிறது.

# வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் வேணுகா சண்முகரத்தினம்தான்

## உறுதிப்படுத்தியது அரச சேவைகள் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜூலை 11

*யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி வேணுகா சண்முகரத்தினம், அதிபர் தராதரத்திலிருந்து அரச சேவையைத் தொடர்ந்து செய்வதற்கு அனுமதி வழங்குவதாகவும், அதற்கு இடையூறாகச் செயற்படின், ஆணைக்குழுவின் கட்டளைகளை நிறைவேற்றத் தவறியமைக்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டுக் கல்லூரியின் பதில் அதிபர் திருமதி றாஜினி முத்துக்குமாரனுக்கு அரசசேவைகள் ஆணைக்குழு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.*

அமைச்சர் மற்றும் சில ஆசிரியர்கள் தனது பணிகளைத் தொடரவிடாமல் இடையூறு விளைவிப்பது குறித்து கல்வி அமைச்சரை நேரில் சந்தித்து முறைப்பாடு செய்வதற்காகப் புதிய அதிபர் வேணுகா சண்முகரத்தினம் நேற்றுமுன்தினம் கொழும்பு சென்றுவிட்டார்.

பதில் அதிபராக உள்ள றாஜினி முத்துக்குமாரன் தானே கல்லூரி அதிபர் என்று தெரிவித்துச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகக் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதனை ஆதரித்து டக்ளஸும் தொடர்ச்சியாக இந்த விடயத்தில் தலையிட்டு வருகிறார்.

இந்த நிலையிலேயே இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

02.07.2012 ஆம் திகதியிடப்பட்ட இந்தக் கடிதத்தை அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளர் ரி.எம்.எல்.சி.சேனாரத்ன வேம்படி மகளிர் கல்லூரியின் பதில் அதிபர் றாஜினி முத்துக்குமாரனுக்கு அனுப்பி வைத்துள்ளார். தகவலுக்காக அதன் பிரதி ஒன்று புதிய அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் இலங்கை அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்த வேணுகா சண்முகரத்தினம் அதிபர் தராதரத்தில் அரச சேவையைத் தொடர்ந்து செய்வதற்கான விதத்தில் அனுமதி வழங்குவதாகவும் அதற்கு இடையூறாகச் செயற்படின் அரசசேவை ஆணைக்குழுவின் கட்டளைகளை நிறைவேற்றத் தவறியமைக்காக உமக்கு எதிராக (பதில் அதிபர்) ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை ஆணைக்குழுவின் உத்தரவுப்படி தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் ஆணைக்குழுச் செயலாளர் சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தின் மூலம் வேம்படியின் அதிபர் வேணுகா சண்முகரத்தினம்தான் என்பதை அரசசேவைகள் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது. (த-4)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யாழிலும் நேற்றுப் புறக்கணிப்பு

## சக ஊழியர் கொலையைக் கண்டித்து

யாழ்ப்பாணம், ஜூலை 11

தம்பலகாமத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அடித்துப்படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பணி புறக்கணிப்புப் போராட்டத்துக்கு ஆதரவாக வடபகுதிப் பொது சுகாதார பரிசோதகர்களும் போராட்டத்தில் குதித்தனர்.

இதனால் வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச ரீதியான அவர்களது பணிகள் ஸ்தம்பித நிலையை அடைந்தன.

பாடசாலைகளில் மருந்து சுகாதாரப் பரிசோதனைகள், சுற்றுச் சூழல் பரிசோதனைகள், தொற்று நோய் தடுப்புப் பணிகள், கொல்களப் பரிசோதனைகள், உணவு கையாளும் நிலையப் பரிசோதனைகள், கட்டட விண்ணப்பங்களுக்கேற்ப முன்னெடுக்கப்படும் ஆய்வுப் பணிகள் என அனைத்துப் பணிகளும் நேற்று ஸ்தம்பிதம் அடைந்தன.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் ஒவ்வொரு பணிகள் சுழற்சி முறையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவது வழமை. அவை பற்றிய விவரங்கள் முன்னரே திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். இந்த நிலையில் நேற்று முன்னெடுக்கப்படவிருந்த பணிகளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் புறக்கணித்து தமது சக ஊழியரின் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

டெங்கு ஒழிப்புக்காக வீடு ஒன்றைப் பரிசோதிப்பதற்குச் சென்ற திருமலை சிராஜ் நகர் பிரிவைச் சேர்ந்த முகம்மட் பளீஸ் என்பவரே நேற்று முன்தினம் இவ்வாறு அடித்துப்படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக தம்பலகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-4)

# கிராம அலுவலர்களுடன் பட்டதாரிப் பயிலுநர்கள்

## தரவுகள் திரட்டும் பணியில்

தென்மராட்சி, ஜூலை 11

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு நியமனம் பெற்ற பட்டதாரிப் பயிலுநர்கள் இன்று புதன்கிழமை தொடக்கம் பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர்களுடன் இணைந்து திட்டங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபடவுள்ளனர்.

பிரதேசத்தில் இணைந்துள்ள பட்டதாரி பயிலுநர்களை பிரிவுகளின் சனத்தொகை அடிப்படையில் இரண்டுக்கு குறையாத அளவில் பகிர்ந்தளிக்கப்பட்டு கடிதங்கள் பிரதேச செயலகத்தினால் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

இந்தப் பட்டதாரிகள் பட்டம் பெற்ற காலப்பகுதியைக் கொண்டு வகைப்படுத்தப்படவுள்ளனர். 2009 இற்கு முன்னர் 2009இற்குப் பின்னர் என வகைப்படுத்தி யாழ். செயலகத்துக்கு அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-9)

# நான்கு வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், ஜுலை 11

யாழ். நகரப் பகுதியில் வீட்டில் தனித்திருந்த 4 வயது சிறுமி ஒருவரை 40 வயது மதிக்கத்தக்க நபரொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுமியின் தாயார் வீட்டிலிருந்து வெளியே சென்றிருந்த சமயம், அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க நபரொருவர் சிறுமியின் வீட்டினுள் புகுந்து தனித்திருந்த சிறுமியை பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனத் தெரியவருகிறது.

வெளியில் சென்றிருந்த தாயார் வீடு திரும்பிய பின்னர் குறித்த சிறுமி விடயத்தை வெளிப்படுத்தவே, சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். குறித்த சந்தேக நபர் நேற்று மாலை வரையில் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# தென்மராட்சி பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஜூலை 11

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் தென்மராட்சி [illegible] செய்யப்பட்டுள்ளது.

கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலைக்கு தளபாடக் கொள்வனவுக்கு 48 ஆயிரத்து 500 ரூபாவும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மின் பிறப்பாக்கி கொள்வனவுக்கு 2 லட்சத்து 42 ஆயிரத்து [illegible] ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# சட்ட விரோதமாக மணல் ஏற்றியவருக்கு 50,000 அபராதம்

வடமராட்சி, ஜூலை 11

வல்லிபுரம் பகுதியிலிருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த லொறி உரிமையாளர் ஒருவருக்குப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட லொறி உரிமையாளர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது குறித்த நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து லொறி உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப் புலிகளை...

01 லர் தர்மேந்திர சர்மா, அனுப்பி உள்ளார்.

தமிழருக்கு எனத் தாய் நாட்டை (தமிழீழம்) உருவாக்கும் நோக்கம், இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்பதால், சட்ட விரோத நடவடிக்கை வரம்புக்குள் வருகிறது.

எனவே, 1967ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை, சட்ட விரோத அமைப்பாக அறிவித்து, இந்த அறிக்கை வெளியிடப்பட்டதும், உடனடியாகச் செயலுக்கு வரும்- இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.(த)

## தென்பகுதி...

01 இவர் கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் இயங்கி வரும் வெதுப்பகம் ஒன்றில் பணியாற்றி வந்தவர் எனக் கூறப்படுகிறது.

எனினும் இதுவரை குறித்த நபர் யாரென அடையாளம் காணப்படாத நிலையில் இவரது சடலம் கிளிநொச்சி வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மயக்கமடைந்த இவரை வைத்தியசாலைக்குப் கொண்டு செல்லும் வழியிலேயே இவர் இறந்துள்ளார். கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-16-6)

## போர்க்குற்றம்...

01 இறுதி யுத்தம் குறித்த குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ள சவேந்திர சில்வா, ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படைக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக ஆசிய பிரதிநிதிகள் குழுவால் நியமிக்கப்பட்டார். இதன் பின்னணியில் அரேபிய நாடுகள் இருந்தன எனக் கூறப்படுகிறது. இதேபோன்று தற்போது இதே ஆசிய பிரதிநிதிகள் குழுவால், பாலித கோஹன்னவை ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்தாவது குழு என அழைக்கப்படும் வரவு - செலவுத் திட்ட குழுமத்தில் இணைத்துக் கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவினரால் வெளியிடப்பட்ட யுத்தக் குற்றம் குறித்த அறிக்கையில், பாலித கோஹன்னவும் போர்க்குற்றவாளியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்த அறிக்கைக்கு அவர் எதிர்ப்பை வெளியிட்டதுடன், தொடர்ச்சியாக பலதடவைகள் ஐக்கிய நாடுகள் மற்றும் பிரிட்டனுக்கு எதிராக கருத்துகளை வெளியிட்டவராக பாலித கோஹன்ன உள்ளார். இந்த நிலையில் அவர் ஐக்கிய நாடுகள் சபையின் வரவு - செலவுத்திட்ட குழுமத்தில் உள்வாங்கப்படுவதற்கு பொருத்தமானவரா என இன்னர் சிட்டி பிரஸ் கேள்வி எழுப்பியுள்ளர். இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் ஐக்கிய நாடுகள் சபை யின் பேச்சாளரிடம் வினவப்பட்ட போதும், அவர் இதுகுறித்த பதில்களை வழங்கியிருக்கவில்லை.

## பொன்சேகாவின்...

01 துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது நாட்டுக்குள் பிரச்சினையிருந்தால் அது இங்குதான் - அதாவது எமது நாட்டு எல்லைக்குள்தான் தீர்க்கப்பட வேண்டும். அதை சர்வதேசமயப்படுத்தக்கூடாது.

முன்னாள் இராணுவத் தளபதிக்கும் கருத்து வெளியிடும் சுதந்திரமுண்டு. ஆனால், அவர் அந்தச் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தப் பார்க்கின்றார்.

சரத் பொன்சேகா தற்போது மேற்குலகின் தாளத்திற்கேற்பவே அரசியல் ஆட்டம் போடுகின்றார். அவர் வீரவசனங்களைப் பேசுவதன் பின்னணியில் மேற்குலகின் சூழ்ச்சியிருக்கின்றது என நாம் சந்தேகிக்கின்றோம். பொன்சேகா ஊடாக நாட்டில் சதித் திட்டங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கு இன்று மேற்குலகம் முயற்சிக்கின்றது. இந்த விடயத்தை பொன்சேகா புரிந்து கொள்ளவேண்டும். இல்லையேல் அது நாட்டுக்கு ஆபத் தாக அமையும் - என்றார்.

## துறைமுக...

01 டுள்ளது.பலாலி விமானப் படைத்தளத் தைச் சுற்றியுள்ள 17 கிராம அலுவலர் பிரிவுகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் இலங்கை ராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையில் யாழ். மாவட்டப் படைத்தளபதி பிரிட்டன் தூதுவரிடம் இப்படித் தெரிவித்துள்ளார்.

பலாலி விமானப் படைத்தளம், காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றைச் சுற்றி அரச காணிகள் எவையும் இல்லை என அரச அதிகாரிகள் ஏற்கனவே உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

இந்த நிலையில் மேற்படி பகுதிகளின் விஸ்தரிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தற்போது இந்த இரு இடங்களிலும் விஸ்தரிப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக இவற்றைச் சுற்றியுள்ள காணிகளைப் பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகம் சுவீகரிக்கும் என மஹிந்த ஹத்துருசிங்க பிரிட்டன் தூதுவரிடம் கூறியுள்ளார்.

தூதுவருடனான பேச்சின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். குடாநாட்டு மக்களின் காணிகளைச் சுவீகரித்து அவற்றில் இராணுவ முகாம்களை அமைக்கும் நோக்கம் எமக்கு இல்லை. போரின்போது தனியார் காணிகளில் முகாம்களை அமைத்த படையினர் தற்போது மீண்டும் அவற்றை உரியவர்களிடம் ஒப்படைத்து வருகின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றது. தற்போது இங்குள்ள படையினர் மக்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கே உதவியளித்து வருகின்றனர்.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களைப் போன்று தேசிய பாதுகாப்புக்கு படையினர் கட்டாயம் தேவை. அவ்வாறு தேவைப்படும் படையினரே இங்குள்ளனர். அவர்களும் எதிர்காலத்தில் குறைக்கப்படக்கூடும்.

எப்படியிருந்த போதிலும் 1980 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட நிலைமை மீண்டும் உருவாக இராணுவம் ஒருபோதும் இடமளிக்க மாட்டாது என்று கூறினார்.

கடந்த திங்கட்கிழமை காலை பலாலி படைத் தலைமையகத்தில் பிரிட்டன் தூதுவருக்கும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போது யாழ். மாவட்டத்தில் படையினரின் செயற்பாடுகள் குறித்து தூதுவர் இராணுவத் தளபதியிடம் விரிவாகக் கேட்டறிந்துள்ளார். இதன்போதே இந்தக் காணி சுவீகரிப்புத் திட்டம் குறித்து ஹத்துருசிங்க தூதுவரிடம் விளக்கியுள்ளார்.

இந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 30 வருட காலமாகச் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் உள்ளனர். தமது பகுதிகள் எப்போது விடுவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் மீள்குடியமர்வை எதிர்பார்த்து அவர்கள் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில் இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்திருக்கின்றமை அப்பகுதி மக்கள் சொந்த இடம் திரும்பமுடியாத நிலையையே உண்டுபண்ணும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-5)

## ஐ.நா.மனித...

01 னெடுக்கவில்லை எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்படவுள்ளது.

அத்துடன், தமிழ் அரசியல் கைதிகள் அண்மைக் காலமாக தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டுவரும் சம்பவங்கள் தொடர்பில் ஆதாரபூர்வமான தகவல்களை இந்தக் கடிதத்துடன் இணைக்கவுள்ள கைதிகளின் உறவுகள், தங்களின் உறவுகளின் விடுதலை விடயத்தில் சர்வதேசத்தினதும் மனித உரிமை அமைப்புகளினதும் தலையீடு இன்றியமையாத தேவை எனவும் கடிதத்தினூடாக வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வவுனியா சிறைச்சாலையில் சிறைச்சாலை அதிகாரிகள் மூவரைத் தமிழ்க் கைதிகள் சிறைப்பிடித்ததையடுத்து அங்கு பெரும் கலவரம் ஏற்பட்டது. தமிழ்க் கைதிகளைச் சிறைச்சாலை அதிகாரிகள் மிகவும் கொடூரமான முறையில் தாக்கி அவர்களின் கை, கால்களை முறித்துள்ளனர். இதனால் கைதிகளின்நிலைமை கவலைக்கிடமானது.

ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவசர சத்திரசிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தகணேசன் நிமலரூபன் என்ற தமிழ் அரசியல் கைதி கடந்த புதன்கிழமை உயிரிழந்தார்.

நிமலரூபனுக்கு நேர்ந்த கதி தங்களது உறவுகளுக்கு நேர்ந்து விடுமோ என்ற அச்ச நிலைமைஉருவாகியுள்ளதையடுத்தே தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறுகோரியும், விடுதலையை வலியுறுத்துமாறு குறிப்பிட்டும் தமிழ்க் கைதிகளின் உறவுகள் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபைக்குக் கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருவ தாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## தமிழர்களின்...

01 மலையில் வைத்து முழங்கினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

மேலும்,முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற போருடன் தமிழர் போராட்டம் முடிவடைந்து விட்டது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எண்ணுகின்றார். ஆனால், அது முடிவடைந்து விடவில்லை. இன்னமும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டில் அக்கட்சியின் தலைவர் சம்பந்தன் ஆற்றிய உரை அடங்கிய இறுவட்டு வெளியீட்டு விழா நேற்றுமாலை 4 மணியளவில் திருமலை சில்வெஸ்டர் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்துகொண்டு பேசியபோதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அஹிம்சைப் போர் என்பது இன்று நேற்று தொடர்ந்ததல்ல. 1961 இல் தந்தை செல்வாவின் வழிநடத்தலில் ஆரம்பிக்கப்பட்டது. தனிச்சிங்கள மொழிச் சட்டத்திற்கு எதிராகத் தமிழர்களுக்கும் உரிமை வேண்டி கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது சிங்களக் காடையர்களால் கல்லாலும் பொல்லாலும் தாக்கப்பட்டு - மண்டை பிளக்கப்பட்டு - கட்டுப்போட்டுக்கொண்டு நாடாளுமன்றம் சென்ற சம்பவங்கள் மறந்துபோக முடியாதவை. புல்வெளிகள் எல்லாம் இரத்தவெளிகளாக மாறியிருந்த கதை வரலாற்றில் மறந்துபோக முடியாதது.

2009 மே 18,19 ஆம் திகதிகளுடன் தமிழர்களின் போராட்டம் முடிந்து போனது, இனி அவர்களுக்கான எந்தப் போராட்டமும் கிடையாது என்று கூறியுள்ளார் ஜனாதிபதி. சிங்கள இனவாதிகளினதும் பௌத்த பிக்குகளினதும் களமாகிப் போயுள்ளது வடக்கும், கிழக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் எமது தலைவர் இரா. சம்பந்தன் பொறுமை காக்கச் சொல்வார்.

இன்று தமிழர்களின் உரிமையுடனான வாழ்க்கையை 24 நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. சர்வதேசம் உணரும் வரை பொறுமையாக இருங்கள் என்கிறார் எமது தலைவர். எங்கள் பிரதேசம் ஆக்கிரமிக்கப்படுகிறது. பௌத்தமயப்படுத்தல் தலைவிரித்தாடுகிறது. இந்த நாடு சிங்களமயமாகி, பௌத்தமயமாகி இறுதியில் இராணுவமயத்துடன் தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்வதே இவர்களின் திட்டமாகும்.

2009 இற்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் எனப் பல தேர்தல்களிலும் தமிழ் மக்கள் அரசுக்கெதிராக ஒருதாய்வயிற்றுப் பிள்ளைகள் என்பதை உணர்த்தியுள்ளார்கள். இந்தப் போராட்டம் முள்ளிவாய்க்காலுடன் முடிந்துவிடவில்லை. இன்று உலகம் முழுவதும் வாழும் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட எமது உறவுகள் ஈழமக்களுக்காகக் குரல் கொடுக்கிறார்கள்.

இன்று தமிழர் போராட்டம் நாடு தாண்டிய வல்லாண்மை நாடுகளுக்கிடையிலான போராட்டமாக மாறியுள்ளது. அவ்வாறான ஒரு போர்தான் தொடங்கியுள்ளது. முள்ளிவாய்க்காலுடன் முடிந்துபோகும் என்று கனவு கண்டவர்களுக்கு வல்லாண்மை நாடுகளுக்கு இடையிலான போர் பெரும் தலைவலியாக மாறியுள்ளது.

2013 மார்ச் மாதத்திற்குள் அரசு வகை கூறும் பொறுப்பில் இருந்து நழுவ முடியாது. இது அரசுக்கு அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று உலகத் தலைவர்களான நெல்சன் மண்டேலா, ஜிம்மி கார்டர் போன்றோர் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த அரசு தமிழர்களை ஏமாற்றுகிறது. முன்னைய அரசுகள் செய்ததை விடவும் பன்மடங்கு இந்த அரசு செய்கிறது. எனவே, பொறுமை காக்கச் சொல்லும் எமது தலைவரின் அரசியல் சாணக்கியத்தில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்'' - என்றார் அவர்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா. சம்பந்தன் (தமிழரசுக் கட்சித் தலைவர்), மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராஜா, அரியநேத்திரன், யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## இலங்கை அரசுக்கு...

01 நேற்றுப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

சென்னை மெமோரியல் மண்டபம் எதிரே நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்துக்கு சென்னை- மயிலை கத்தோலிக்கப் பேராயர் ஏ.எம்.சின்னப்பா தலைமை தாங்கினார்.நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரஸ்வதி, பாண்டிமாதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக மூத்த தலைவர் ஹைதர் அலி, தென்னிந்திய திருச்சபை பேராயர் தேவசகாயம், இந்திய சுயாதீன திருச்சபை பேராயர் டேவிட், இந்திய சுதந்திர திருச்சபை பேராயர் பிரகாஸ், தேசிய லீக் தலைவர் பசீர் அகமது, இந்திய தவ்கீத் ஜமாத் தலைவர் எஸ்.எம்.பாக்கர், முகமது முனீர், உளுந்தூர்பேட்டை அப்பர்சாமி மடத்தின் தலைவர் சிவஞான தேசிக சுவாமிகள், கிறிஸ்தவ கூட்டமைப்புத் தலைவர் போதகர் விக்டர் தர்மராஜ், இந்திய கிறிஸ்தவ மக்கள் கட்சித் தலைவர் நாதன், மற்றும் கிறிஸ்தவ மதகுருமார், கன்னியாஸ்திரிகளும், பல்வேறு அமைப்புகளை சேர்ந்த ஏராளமானோரும் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தின் போது இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை கண்டித்தும், மத உரிமையை பாதுகாக்கக் கோரியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.அத்துடன் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் உருவப்பொம்மையும் இழுத்து வரப்பட்டுத் தீவைக்கப்பட்டது.

போராட்டத்தில் பங்கேற்ற மதத் தலைவர்கள், இலங்கையை ஒரு மத, ஒரு இன, ஒருமொழி நாடாக மாற்ற அனைத்து முயற்சிகளையும் சிங்கள அரசு செய்து வருவதாகக் குற்றம் சாட்டினர்.

அத்துடன். ஈழத்தமிழர்களின் துயரத்தை ஐ.நா. சபைக்கு எடுத்துச் சென்று அவர்கள் உரிமை பெற இந் [illegible] தினர். (த)

## குற்றச் செயல்கள்...

01 வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பாலியல் வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், போதைப் பொருள் கடத்தல், ஆள்கடத்தல் ,கொலை, கொள்ளைகள் மலிந்து விட்டன என்று ஜனாதிபதி ராஜபக்ஷ கவலை தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இப்படியான சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் அவர்களின் நிழலில் இருந்து கொண்டே அவற்றைச் செயற்படுத்துகின்றனர்.

ஆளும்கட்சியில் பல பதவிகளில் இருக்கும் பல அரசியல்வாதிகள் நேரடியா[illegible] வன்முறை [illegible]துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தடுப்புக் காவலில் இருக்கும் இவர்களுக்குச் சிறைச்சாலைகளில் இராஜ மரியாதையும் சுகபோக வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. வெளியில் அனுபவித்த அனைத்தும் இவர்கள் சிறைச்சாலைக்குள்ளும் அனுபவிக்கிறார்கள். ஜனாதிபதியின் கவலை அதோடு நின்றுவிட்டது.

அதேபோன்று ஜனாதிபதியின் சகோதரர் பாதுகாப்புச் செயலாளர் பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று பிதற்றுகிறார்.

ஆனால் சட்டவிரோத கும்பல்களை மடக்கிப் பிடித்துக் கைது செய்ய முயலும் நேர்மையான பொலிஸ் அதிகாரிகளின் கைகள் கட்டப்படுகின்றன. மீறிக் கைது செய்துவிட்டால் அந்த அதிகாரிகளுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றன. பல உயர் பொலிஸ் அதிகாரிகள் பாதாள உலகக் கோஷ்டியினால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குப் பாதுகாப்பு இல்லை. இப்படியான நிலையில் பொலிஸாருக்குக் கூடுதலான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று கூறுவதில் பயன் ஏற்படப் போவதில்லை.

பொலிஸாரும் சட்டத் துறையினரும் சுதந்திரமாக செயற்படக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அரசியல் தலையீடும், பழிவாங்கல்களும் இருக்கும் வரை சட்டவிரோத குற்றங்களைத் தடுக்க முடியாது - என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வன்புணர்வுச் சம்பவங்கள் தொடர அனுமதிக்கலாமா?

அன்றாடம் வெளியாகும் ஒரு புதினப் பத்திரிகையை எடுத்து விரித்துப் பாருங்கள். முதல் பக்கத்தில் இல்லாவிட்டாலும் உள் பக்கத்திலாவது ஒரு செய்தி உங்கள் கண்பார்வையில் படாமல் போகாது. அது என்ன செய்தியாக இருக்க முடியும் என்று நீங்கள் உடனே ஊகித்துக்கொண்டு விடுவீர்கள்.

அதுதான் இந்த நாட்டில் மிக சாதாரணமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் சிறுவர் துஷ்பிரயோகம். குறிப்பாக சொல்வதானால் இளம் பெண்கள் மீதான வன்புணர்வு தொடர்பான செய்திகள். கடந்த வருடத்தை விட இந்த வருடம் குற்றச் செயல்களின் விகிதாசாரம் குறைவாக இருக்கிறது என்று பொலிஸ்துறைப் பேச்சாளர் அஜித் றோகண தெரிவித்துள்ள அதேநேரம் சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற குற்றச் செயல்களில் குறிப்பிடக்கூடிய அளவில் அதிகரிப்பு இருந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் இடம்பெற்றுள்ள 975 வன்புணர்வுகள் தொடர்பான வழக்குகளில் 775 வழக்குகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பானவை. 2011 ஆம் ஆண்டில் 1775 வன்புணர்வு வழக்குகள் பதிவாகியுள்ளன. இவைகளில் 1169 சம்பவங்கள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பானவை. இவைகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளில் பெரும்பாலானவர்களும் கைதுசெய்யப்பட்டு விட்டார்கள். ஆனால் பெற்றோர் தமது பிள்ளைகள் மீது மிகவும் விழிப்புடன் இருப்பது அவசியம். பொலிஸார் தனியாகவே இந்தச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. பெற்றோரும் எம்மோடு ஒத்துழைக்க வேண்டும் என்பது பொலிஸ் பேச்சாளர் விடுத்துள்ள கோரிக்கை.

ஆனால் பெரும்பாலான சிறுவர் வன்புணர்வுகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று குற்றஞ்சாட்டுகிறார் ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர. எதிர்க்கட்சியினர் நடத்திய கூட்டு பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்ட மங்கள சமரவீர கடந்த ஆறு மாத காலத்துக்குள் நடைபெற்றுள்ள 700 வன்புணர்வுச் சம்பவங்களுக்கும் அரசுதான் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்த மாதிரி இளம் பெண்கள் மீது நடத்தப்படும் வன்புணர்வுகள் பலவற்றுக்கும் ஆளும்கட்சி அரசியல் வாதிகளே பின்னணியாக இருந்துள்ளனர். கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இளம் பெண் ஒருவரை பலவந்தம் செய்தார் என்பதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். அவருக்குப் பாதுகாப்பு அமைச்சை கண்காணிப்பு செய்யும் பதவி வழங்கப்பட்டிருக்கின்றது. இதுதான் இந்த நாட்டின் தலைவிதியாக இருக்கிறது என்று குமைகிறார் மங்கள சமரவீர. அவர் மேலும் கூறுகையில் சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது போதைவஸ்து தொடர்பாகவோ எவரும் குற்றம் சுமத்தப்பட்டால் அப்படியானவர் அமைச்சர்களுக்கோ அரச அதிகாரிகளுக்கோ உறவினராக இருந்தால் தப்பித்து விடலாம் என்றார்.

நாட்டில் நடந்துள்ள-நடக்கின்ற சிலபல சம்பவங்களைக் கருத்தில் கொண்டே மங்கள சமரவீர இவ்வாறு கூறியிருக்கிறார். ஆனால் அவைகளை முழுக்கவும் ஓர் எதிர்க்கட்சி உறுப்பினரின் அப்பட்டமான குற்றச்சாட்டு என்று ஒதுக்கிவிட முடியாது.

மங்களவின் கருத்துக்கு நேர்மாறாக சிறுவர் மீதான துஷ்பிரயோகங்களுக்கு சிறுவர் மேம்பாடு மற்றும் பெண்கள் விவகாரம் தொடர்பான அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கூறியுள்ள கருத்தில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு தொலைக்காட்சி நாடகங்களே காரணமாக இருக்கின்றன என்று குறிப்பிட்டுள்ளார். துர்நடத்தைகளையும் குடும்ப வன்செயல்களையும் பரப்புகின்ற தொலைக்காட்சி நாடகங்களை இளைஞர்கள் பார்க்காமல் இருக்கும் வகையில் பெற்றோர் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார் அவர். வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வொன்றில் பேசிய அமைச்சர் அரசின் மீதும் அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டுக்களை சுமத்தாமல் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு எல்லோருமே முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

குற்றங்களைத் தடுப்பதற்கான திட்டங்களைத் தீட்டுவதும், அவைகளை அதற்காக இருக்கும் அமைப்புக்களைக் கொண்டு நிறைவேற்றுவதும் அரசின் கடமை என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் பல சந்தர்ப்பங்களிலும் வேலியே பயிரை மேயும் சம்பவங்கள் இடம்பெறுவதைக் காண்கின்றோம். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களை அரசும் அரசுத் தலைவர்களும் அப்படியே புறக்கணித்துவிட முடியாது. அவைகளில் புதைந்துகிடக்கக்கூடிய உண்மைகளைக் கண்டறிந்து களைய வேண்டும். சட்டத்தை நிறைவேற்ற வேண்டியவர்கள் அதைமீறிச் செயல்படுவதை அனுமதிக்கலாகாது.

நேற்றுமுன்தினம் கூட வெலிக்கந்த என்ற இடத்தில் பாடசாலை மாணவி ஒருவரை காட்டுப் பகுதியில் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்திய இராணுவச் சிப்பாய் ஒருவரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்ததாகச் செய்தி வந்திருக்கிறது.

இளம் பிள்ளைகள் மீதான வன்செயல்கள் தொடர்வதை சகல தரப்பினருமே சேர்ந்து தவிர்ப்பதற்கு முயல்வது அவசியம். இது ஒரு தேசிய பிரச்சினை என்பதால் அரசு ஓர் அறிஞர் குழுவை அமைத்து இதற்கான காரண காரியங்களை ஆழமாக ஆராய்ந்து தவிர்ப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்று நடைமுறைப்படுத்துவது பற்றி ஆலோசிப்பது நல்லது.

# 254,616 பாடசாலை மாணவர் வடமாகாணத்தில் கற்கின்றனர்

### இவர்களில் 1,866 பேர் விசேட தேவையுடையோர்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வடமாகாணத்தில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் 924 அரச பாடசாலைகளில் 2 லட்சத்து 54 ஆயிரத்து 616 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அதிகளவில் யாழ். வலயப் பாடசாலைகளில் 43 ஆயிரத்து 641 மாணவர்கள் பயில்கின்றனர். மிகக்குறைந்த அளவாக மடு வலயத்தில் 6 ஆயிரத்து 191 மாணவர்கள் பயில்கின்றனர் என கல்வித் திணைக்களத் தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

வடமாகாணத்திலுள்ள 12 வலயங்களிலும் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரை 97 ஆயிரத்து 490 மாணவர்கள் பயில்கின்றனர். தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 940 மாணவர்கள் பயில்கின்றனர். தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை 24 ஆயிரத்து 320 மாணவர்கள் பயில்கின்றனர். விசேட தேவையுடைய மாணவர்கள் ஆயிரத்து 866 பேர் கல்வி கற்கின்றனர்.

**யாழ்.வலயத்தில் கூடிய மாணவர்கள்**

யாழ்.வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 14 ஆயிரத்து 963 பேர், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 22 ஆயிரத்து 601 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை 5 ஆயிரத்து 714 பேரும் விசேட தேவையுடைய 363 பேருமாக 43 ஆயிரத்து 641 பேர் கல்வி கற்கின்றனர்.

வலிகாமம் வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 14 ஆயிரத்து 182 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 20 ஆயிரத்து 202 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை 4 ஆயிரத்து 40 பேரும், விசேட தேவையுடைய 786 பேருமாக 39 ஆயிரத்து 210 பேர் கற்கின்றனர்.

வடமராட்சி வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம்5 வரை 9 ஆயிரத்து 152 பேரும் தரம் 6 தொடக்கம் தரம்11 வரை 12 ஆயிரத்து 408 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை 2 ஆயிரத்து 530 பேரும் விசேட தேவையுடைய 66 பேருமாக 24 ஆயிரத்து 156 பேர் கற்கின்றனர்.

தென்மராட்சி வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 5 ஆயிரத்து 28 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 7 ஆயிரத்து 296 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை ஆயிரத்து 683 பேருமாக 14 ஆயிரத்து 7 பேர் கல்வி பயில்கின்றனர்.

தீவக வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 4 ஆயிரத்து 269 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 5 ஆயிரத்து 220 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை 548 பேருமாக 10 ஆயிரத்து 37 பேர் கல்வி கற்கின்றனர்.

வவுனியா தெற்கு வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 12 ஆயிரத்து 163 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 15 ஆயிரத்து 709 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை 2 ஆயிரத்து 860 பேரும், விசேட தேவையுடைய 75 பேருமாக 30 ஆயிரத்து 807 பேர் கல்வி கற்கின்றனர்.

வவுனியா வடக்கு வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 3 ஆயிரத்து 678 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 4 ஆயிரத்து 493 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை 713 பேரும், விசேட தேவையுடைய 2 பேருமாக 8 ஆயிரத்து 886 பேர் கல்வி கற்கின்றனர்.

கிளிநொச்சி வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 13 ஆயிரத்து 454 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 16 ஆயிரத்து 767 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை ஆயிரத்து 890 பேரும் விசேட தேவையுடைய 271 பேருமாக 32 ஆயிரத்து 382 பேர் கல்வி கற்கின்றனர்.

முல்லைத்தீவு வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 5 ஆயிரத்து 762 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 7 ஆயிரத்து 608 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை ஆயிரத்து 278 பேரும், விசேட தேவையுடைய 77 பேருமாக 14 ஆயிரத்து 725 பேர் கல்வி கற்கின்றனர்.

துணுக்காய் வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 3ஆயிரத்து 439 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 3 ஆயிரத்து 989 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை 458 பேரும், விசேட தேவையுடைய 97 பேருமாக 7 ஆயிரத்து 983 பேர் கல்வி கற்கின்றனர்.

மன்னார் வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 8 ஆயிரத்து 736 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 11 ஆயிரத்து 469 பேரும், தரம் 12 தொடக்கம் தரம் 13 வரை 2 ஆயிரத்து 373 பேரும், விசேட தேவையுடைய 13 பேருமாக 22 ஆயிரத்து 591 பேர் கல்வி கற்கின்றனர்.

மடு வலயத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை 2ஆயிரத்து 664 பேரும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை 3ஆயிரத்து 178 பேரும், தரம் 12 தொடக்கம் தரம்13 வரை 233 பேரும் விசேட தேவையுடைய 116 பேருமாக 6 ஆயிரத்து 191 பேர் கல்வி கற்கின்றனர்.- என்றுள்ளது. (த-4)

# புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியருக்கு 2 வருடங்களுக்கு இடமாற்றம் இல்லை

### வடக்கு ஆளுநர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேறிய ஆசிரியர்களுக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் தீவகம் ஆகிய பிரதேசங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆசிரியர்கள் இரண்டு வருட காலத்துக்கு இடமாற்றம் தொடர்பாக எந்தவிதமான கருத்துக்களையோ கடிதங்களையோ முன்வைக்கக் கூடாது என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேறி புதிதாக ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று வடமாகாண ஆளுநர் தலைமையில் யாழ்.இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதன்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் தீவகப் பகுதிகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. அத்துடன் அந்தப் பகுதி மாணவர்களின் கல்வித்தரமும் குறைவடைந்து காணப்படுகிறது. எங்கே அதிக தேவை உள்ளதோ அங்கே உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன.

ஒவ்வொரு தடவையும் ஆசிரிய நியமனங்கள் அல்லது வேறு வகையான அரச நியமனங்கள் வழங்கப்பட்டால் அடுத்த 6 மாத காலத்தில் இடமாற்றம் தொடர்பான கடிதங்கள், முறைப்பாடுகள் வந்த வண்ணம் இருக்கும். ஆனால் இந்தத் தடவை எந்த விதமான கருத்துக்களுக்கும் இடம் இல்லை- என்றார்.

இந்தநிகழ்வில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன் வடமாகாண கல்வி அமைச்சின் மேலதிக பிரதிச் செயலாளர் பி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-13)

# மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 90 ஆகியது

கொழும்பு, ஜூலை 11

மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 90 ஆக அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளின் தற்போதைய எண்ணிக்கை 75 ஆகும்.

2007 ஆம் ஆண்டில், அதுவரையில் 40 ஆக நிலவிய மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 60 ஆகவும் 2010 ஆம் ஆண்டில் அது 75 ஆகவும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

வழக்கு தாமதமாவதைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. (த-22)

# யாழ் – பருத்தித்துறை வீதிக்கு இரண்டாவது முறையும் காப்பெற்

யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதி கோப்பாயில் இருந்து வல்லை வரை இரண்டாவது தடவையாக மீள்புனரமைப்புச் செய்யப்பட்டு காப்பெற் போடப்பட்டு உயரமாக்கப்பட்டுள்ளது.

வீதி உயர்ந்திருப்பதால் உள்ளூர் வீதிகள்,ஒழுங்கைகள் வந்து பிரதான வீதியில் இணையும் இடங்களிலும் வீடுகளில் இருந்து வீதிக்கு ஏற முடியாமலும் பொதுமக்கள் பெரும் சிரமப்படுகின்றனர். இதனால் விபத்துக்குள்ளாகிச் சிலர் காயமடைந்தும் உள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் இருந்து வல்லை வரையான பகுதி கடந்த வருடம் முழுமையாகப் புனரமைப்புச் செய்து அகலமாக்கப்பட்டு இருவழிப்பாதையாகத் தார் போடப்பட்டது . குறித்த வீதி அமைப்பில் ஏற்பட்ட சில குறைபாடு காரணமாக மேற்படி பகுதி இரண்டாவது தடவையாக இந்த வருடம் கருங்கல் போடப்பட்டு கணிசமான அளவு உயர்த்தப்பட்டதோடு செப்பனிடப்பட்ட வீதிக்கு 'காப்பெற் ' கலவை இடப்பட்டு புனரமைப்பு செய்யப்படுகின்றது.

வீதி முழுமையாகச் செப்பனிடப்பட்டு 'காப்பெற்' இடப்பட்ட நிலையில் இரண்டு அடிவரையில் உயர்ந்துள்ளது. இந்த நிலையில் வீதியோரங்களில் உள்ள வீடுகளின் கேற் ஊடாக வீதியில் ஏறுவதும் பிரதான வீதியில் ஏனைய ஒழுங்கைகள், வீதிகள் இணையும் இடங்களில் திடீர் குத்துயரம் காணப்படுவதால் சாதாரணமாக இரண்டு சக்கர வாகனங்களை ஏற்றி இறக்குவதில் இடர்பட வேண்டி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் விபத்துக்களும் நிகழ்வதாகச் சுட்டிகாட்டப்பட்டுள்ளது. (த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமா நிலையில் இருக்கும் எனது மகன் ருக்ஸனை சங்கிலியால் பிணைத்து வைத்திருப்பது நியாயமா?

## காப்பாற்றி மீட்டுத் தாருங்கள் என்று கதறுகிறார் அவரது தாயார்

மன்னார்,ஜூலை11

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாகக் காணாமல் போன தனது மகனை விடுவித்து அவரைக் குணப்படுத்த ஆவன செய்யுமாறு சிறைச்சாலைத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து சுயநினைவற்ற (கோமா) நிலையில் ராகம வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் முத்துராசா டில்ருக்ஸனின் தாயார் கதறுகிறார்.

அண்மையில் மகர சிறைச்சாலையில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவத்தின் போது கடும் தாக்குதலுக்கு இலக்காகி ராகம வைத்தியசாலையில் சுயநினைவற்ற நிலையில் கால்களும், கைகளும் இரும்புச்சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வரும் முத்துராசா டில்ருக்ஸன் என்ற இளைஞன் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் காணாமற்போன தனது மகன் என மன்னார் இலுப்பைக்கடவையைச் சேர்ந்த முத்துராசா றீசா என்ற தாய் அடையாளம் காட்டியுள்ளார்.

இவர் தனது கணவர், பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் என சுமார் 12 பேருடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை மன்னாருக்கு வருகை தந்து மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோரைச் சந்தித்துத் தனது மகனின் உயிரை காப்பாற்றுமாறும் அவரின் விடுதலைக்கு ஆவன செய்யுமாறும் கதறிக் கண்ணீர் சிந்தியவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கட்டார் சென்றார்

குறித்த இளைஞன் காணாமல் போன சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை என்ற கிராமத்தைச் சேர்ந்த முத்துராசா டில் ருக்ஸன் என்ற குறித்த இளைஞன் 2006 ஆம் ஆண்டு தொழில் வாய்ப்பைத் தேடி மத்திய கிழக்கு நாடான கட்டாருக்குச் சென்றார்.

பின் அங்கிருந்தவாறு தனது பெற்றோருடன் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார். 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி நாடு திரும்பிய நிலையில் தனது பெற்றோரை பார்ப்பதற்காக மன்னார் இலுப்பைக்கடவைக்குச் சென்றார்.

### கடற்படையால் கைது

பின்னர் அங்கிருந்து கடல் மார்க்கமாகத் தலைமன்னார் பகுதிக்குப் படகில் சென்ற போது பேசாலைப் பகுதியில் வைத்துக் கடற்படையினர் குறித்த இளைஞனைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ருக்சன் மன்னார் முருங்கனில் இருந்த களிமோட்டை சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டார்.

இந்த வேளையில் இலுப்பைக்கடவையில் இருந்த தனது பெற்றோருடனும், சகோதரர்களுடனும் அடிக்கடி தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் வன்னியில் ஏற்பட்ட போர் காரணமாக இவரது குடும்பத்தினர் இடம்பெயர்ந்து சென்று இருட்டுமடு பகுதியில் வாழ்ந்த நிலையில் பின்னர் செட்டிகுளம் மெனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து டில்ருக்ஸனுக்கும் அவருடைய பெற்றோருக்கும் இடையில் ஏற்பட்டிருந்த தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது.

### ராகம ஆஸ்பத்திரியில்

இந்த நிலையில் இவரின் உறவினர்களினால் டில்ருக்ஸன் தொடர்பான விவரங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்கையில், கடந்த 5 ஆம் திகதி ஊடகங்களில் டில்ருக்ஸன் என்ற இளைஞன் கடுமையாகத்தாக்கப்பட்டுச் சுயநினைவற்ற நிலையில் ராகம வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அறிந்த அவரது தாயாரும் உறவினர்களும் பதறினர்.

அதை அடுத்து கடந்த 07 ஆம் திகதி சனிக்கிழமை மாலை அங்கு சென்ற தாயாரும் உறவினர்களும் ருக்ஸனை அடையாளம் கண்டு அழுது குழறினர்.

தனது மகன் ருக்ஸன் (வயது-29) படுமோசமான நிலையில் - சுயநினைவின்றி கட்டிலில் கை, கால்கள் பிணைக்கப்பட்ட நிலையில் கிடப்பதைக் கண்டு கதறினார் அவரது தாயார்.

மகனுக்கு நேர்ந்துள்ள கதியைப் பார்த்த தாயார் ''எனது மகன் ருக்ஸனைக் காப்பாற்றி மீட்டுத் தாருங்கள்; சுயநினைவின்றிக் கிடக்கும் என் பிள்ளையை இப்படி சங்கிலியால் பிணைத்து வைத்திருப்பது நியாயமா; இந்த அநியாயத்தைக் கேட்க எவருமில்லையா?'' என்று அந்தத் தாய் ஓலமிடுகிறார்.

(க-12)

## உயர்தர மாணவர்களுக்கு முல்லைத்தீவில் செயலமர்வு

முல்லைத்தீவு, ஜூலை11

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கான பௌதிகவியல் பாடச்செயலமர்வுகள் இன்றும், நாளையும் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வாராந்த செயலமர்வுகள் கடந்த மே மாதத்திலிருந்து இடம்பெற்று வருகின்றன. இதுவரையில் எட்டுத் தொகுதிகளாக வாராந்த செயலமர்வுகள் நடந்து முடிந்துள்ளன.

இதன் தொடர்ச்சியாக இன்றும், நாளையும் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் பௌதிகவியல் பாடத்துக்கான செயலமர்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இந்தச் செயலமர்வுகளுக்கு வளவாளர்களாக எஸ்.கனகசபை, எஸ்.பகீரதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் இந்தக் கருத்தரங்கில் கொழும்பிலுள்ள சிங்கள, தமிழ் மொழிமூல பாடசாலைகளின் இறுதித் தவணை மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களும் இடம்பெறவுள்ளன.

இறுதியாக ஜூலை 18,19 ஆம் திகதிகளில் உயிரியல் மற்றும் இணைந்த கணித ஆசிரியர்களினால், முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

யாழ். முன்னணி ஆசிரியர்களினால் இந்தச் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-5)




முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர்களுக்கு பாசிக் நிறுவனத்தால் 21 மில்லியன் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் பாசிக் நிறுவனத்தின் யாழ்.மாவட்டத் திட்ட இணைப்பாளர் மிக்சிகோ மசிமோறி மற்றும் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர். (13)

## விளையாட்டு மைதானம் புனரமைப்பு

வேப்பங்குளம் ஜூலை11

வவுனியா கல்நாட்டிய குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் சிறந்த வீரர்களைக் கொண்டது. ஆனால் இந்தக் கழகத்துக்குச் சொந்தமான விளையாட்டு மைதானம் சிலதிருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தது.

இதனைக் கருத்தில் கொண்டு இந்த மைதானத்தின் புனரமைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றதும் தமது விளையாட்டு நடவடிக்கைகள் சிறப்பாக இடம்பெறக் கூடியதாக இருக்குமெனக் கழக வீரர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (க-421)

## கழிவுகளை அகற்றுவதில் திரும்பவும் தாமதங்கள்

### மீண்டும் நாறுகிறது மன்னார் நகரம்

மன்னார், ஜூலை 11

மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுப் பொருள்களை அகற்றுவதில் மீண்டும் தாமதங்கள் ஏற்படுவதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முன்னர் நகரசபைத் தலைவரின் அதிரடி நடவடிக்கை காரணமாக ஓரளவு திருப்திகரமாக இடம்பெற்று வந்த இந்தச் செயற்பாடு தற்போது மீண்டும் பழைய நிலைக்கே திரும்பியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

நகரசபையின் சுத்திகரிப்புப் பணியாளர்கள் தமது கடமைகளை ஒழுங்காக மேற்கொள்ளாததால் இவர்களின் வருகையை எதிர்பார்த்து மக்கள் தமது வீடுகளுக்கு முன்பாக கழிவுப் பொருள்களை வைத்து ஏமாற்றமடைவதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் இவற்றால் பல்வேறு அசௌகரியங்களும் மக்களுக்கு ஏற்படுகின்றன.

ஆனால் மன்னார் பஸார் பகுதி உள்ளிட்ட தமக்குத் தேவையான சில இடங்களில் மட்டுமே பணியாளர்கள் தமது கடமையை ஒழுங்காக மேற்கொள்வதாகவும் தெரிய வருகின்றது. இதனால் ஏனைய பகுதிகள் பாதிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

எனவே மன்னார் நகரசபை நிர்வாகத்தினர் இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இல்லையேல் இந்தக் கழிவுகளை அகற்றும் பணிகளைத் தனியாரிடம் ஒப்படைக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-12)

## சிறுபோக விவசாயிகள் கடுமையான பாதிப்பில்

### தவறான செயற்பாடுகளாலேயே இந்த அவலம்

கிளிநொச்சி, ஜூலை11

கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் இந்த முறை கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள 23 உபதிட்டக் குழுக்களின் கீழ் நடப்பாண்டில் 7 ஆயிரத்து 964 முதல் 8 ஆயிரத்து 500 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் மாத்திரமே சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியுமெனத் தீர்மானிக்கப்பட்டு அதன் பிரகாரம் வயல் நிலங்கள் தெரிவு செய்யப்பட்டு பயிர்ச்செய்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் தற்போது ஆயிரத்து 500 தொடக்கம் 2 ஆயிரம் ஏக்கர் வரையில் மேலதிக விதைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் திட்டமிட்ட செய்கையை விட மேலதிக செய்கைக்கு அதிக நீர் பயன்படுத்தப்படுவதால் சட்ட ரீதியான விதைப்புக்களை மேற்கொண்ட விவசாயிகளின் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு திட்டக்குழுக்களின் கீழும் சுமார் இருபது வீதமான செய்கைகள் கைவிடப்பட்டுள்ளன. மழை பெய்யாதவிடத்து முழுமையான செய்கைகளும் கைவிடப்படும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அதிகாரிகளும் மேலதிக விதைப்புக்களை மேற் கொள்வதற்கு இடமளித்த உபதிட்டக் குழுக்களின் செயற்பாடுகளுமே காரணிகளாக அமைந்துள்ளன என விவசாயிகள் கூறுகின்றனர்.

போரால் இடம்பெயர்ந்து வங்கிகளில் கடன்களைப் பெற்று எதிர்கால வாழ்வைக் கருதிச் செய்கையை மேற்கொண்ட ஏழை விவசாயிகள் தற்போது பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளனர்.

இம்முறை சிறுபோக செய்கை அழிவடையும் நிலையொன்று தோன்றுமானால் கடன் பெற்றுத் தொழில் செய்த விவசாயிகள் வேறு வழியின்றித் தவிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று தெரிவித்துள்ளனர்.

(க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மிக உரை

யாழ்ப்பாணம், ஜூலை 11

சர்வதேச சத்திய சாயி சேவா நிறுவனங்களின் தலைவர் டாக்கடர் நரேந்திரநாத் ரெட்டியின் ஆன்மிக உரை நாளை பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (16)


GATEWAY CfiCT

VACANCIES

We are on the lookout for confident and committed individuals with the necessary qualifications for immediate recruitment

1. *English Lecturer (Full Time / Part Time)*
   *The ideal candidate should be competent graduate/trained teachers to teach the subject indicated. Experience in the field of studies at a reputed institution is considered essential. A Degree/Diploma in Education and/or Professional qualification/s will be an added advantage.*
2. *Computer Lecturers & Instructors (Full Time / Part Time)*
   *Ideal candidates should be confident and enthusiastic with an internationally recognized IT related Diploma. A Degree/Diploma in Education and/or Professional qualification/s and Previous teaching experience will be an added advantage*
3. *Computer Hardware Technician*
   *Ideal candidate should have a suitable hardware and networking qualifications and over two years experience in a similar capacity.. Willingness to travel is essential.*

Successful applicants could look forward to a rewarding career with excellent prospects including relevant training. Please send your complete CV to the following address indicating the position applied for, including names and contact details of two non - related referees.

Manager / HR
Gateway CFICT
347, Kasthuriyar Road, Jaffna

E - Mail : gatewayjfn@sltnet.lk


# UNIVERSITY OF JAFFNA
# BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.

| Work / Service Details | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum Grade |
|---|---|---|---|
| Repairs, Improvements and Painting at Student Centre, University of Jaffna | 243,000.00 | 750.00 | Minimum ICTAD Grade C6 (Civil) |
| Renovation of Animal House at Department of zoology, University of Jaffna | 97,000.00 | 750.00 | Minimum ICTAD Grade C8 (Civil) |
| Construction of Wash Room at Faculty of Medicine, University of Jaffna | 10,300.00 | 750.00 | Minimum ICTAD Grade C10 (Civil) |

Bid forms may be obtained from the ***Deputy Registrar / Capital Works & Planning Unit University of Jaffna*** upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till ***20.07.2012***.

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till ***2.30 p.m on 31.07.2012*** and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.
10.07.2012

Registrar
University of Jaffna

(C/1418)(2-6-22)

## கேலிச்சித்திரக் கலைஞர்களை ஜனாதிபதி சந்தித்தார்

ஊடகங்களில் கேலிச்சித்திரங்கள் வரையும் கலைஞர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ நேற்று அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார்.

கலைஞர்களால் வரையப்பட்ட ஜனாதிபதியின் கேலிச்சித்திரங்கள் இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ப.ப.ஜயசுந்தர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## ஆங்கில தினம்

யாழ்ப்பாணம்,ஜூலை11

அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஆங்கில தினவிழா இன்று பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் பி.அரசகேசரி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள ஆங்கில பாடத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சோமஸ்கந்தராஜா கலந்து கொள்கிறார். (16-11)

உதயன்
விளம்பரத்துக்கு
advt@uthayan.com
0215671111


**காணி விற்பனைக்குண்டு**

கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் கச்சாய் தோட்டம் மாரியான்காடு என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னை பயிரிடக்கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 5227107

(20227)(15-8)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஆசையர் கந்தையா



எமது பணிமனையில் கடமையாற்றும் க.இலங்கேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை. **ஆசையர் கந்தையா** அவர்கள் 09.07.2012 அன்று இறைபதம் அடைந்தார். அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(சி/1424)(5-6-22)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜீவமணி விஜயராஜசிங்கம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜீவமணி விஜயராஜசிங்கம் நேற்று (10.07.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஏணஸ்ற் சீவரத்தினம் விஜயராஜசிங்கம் (ஓய்வு பெற்ற கணித முதன்மை ஆசிரியர், மல்லாகம் மகாவித்தியாலயம்), அவர்களின் பாசமிகு மனைவியும், மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - ஞானமணி தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - சுகிர்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கனகமணி இராமநாதன், காலஞ்சென்ற தங்கமணி கதிர்காமலிங்கம், கனகலிங்கம், சிவலிங்கம், காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான விக்டர் துரைராஜசிங்கம், செல்வராஜசிங்கம், அரியராஜசிங்கம் மற்றும் சுகிர்தராஜசிங்கம் (கொழும்பு), தேவராஜசிங்கம், கருணேந்திரன் (கனடா), தேவமலர் பரமேஸ்வரநாதன், சத்தியதேவி, திவ்வியராணி சிதம்பரநாதன், தேவரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், யோகாம்பிகை(UK), ஞானாம்பிகை (மருந்துக் கலவையாளர் F.M.C.U, சுன்னாகம்), சாந்தி (கனடா) ஆகியோரின் சிறியதாயும், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் செல்வகுமார் (ஓய்வு பெற்ற உபஅதிபர், ஏழாலை ஸ்ரீ முருகன் மகாவித்தியாலயம்), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், கைலயங்குமரன் (UK), ஜெயகணேசன் (UK), தரணிதரன் (பொறியியலாளர், பேராதனை பல்கலைக்கழகம்), மாதங்கி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), ஆரணி (கனடா), ஐங்கரன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2012) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஞானபதி**
**நீதிமன்ற வீதி, மல்லாகம்**

**தகவல்:**
**விஜயராஜசிங்கம்(கணவர்),**
**செல்வகுமார் (மருமகன்).**

(20226)(6-22-8)

## சேவை நலன் பாராட்டு

### குமாரவேல் சரவணபவானந்தன்

கோட்டக் கல்விப் பணிப்பாளர் – வேலணை



எமது கல்வி வலயத்தில் வேலணை கோட்டக்
கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி தனது
சேவை காலத்தில் 37 வருட
சேவையை நிறைவு செய்து
10.07.2012 அன்று ஓய்வுபெற்ற குமாரவேல்
சரவணபவானந்தன் அவர்கள் ஓய்வுக்காலத்தில்
தனது குடும்பத்துடன் குதூகலமாகவும்
சுகபலத்துடனும் வாழ இறைவனைப்
பிரார்த்தித்து மனதார நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரி கழகம்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**தீவகம், வேலணை.**

(சி/1418)(45-6. 22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம் பதவி வெற்றிடம்

மேற்படி இல்லத்துக்கு கீழ்காணும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1) பாதுகாப்பு உத்தியோகத்தர்

*தகைமைகள்:*

1. ஆண் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத் தக்கது.
2. தொழில் அனுபவமுடையவராக இருத்தல்.
3. தொண்டுதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 25.07.2012

*தர்மகர்த்தா சபை*

*ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம். வதிரி,கரவெட்டி*

(சி/1428) (15-22)


# விபத்தில் இரு பெண்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார்சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு பெண்கள் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 3 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் உத்தமன் சிலையடியில் இடம்பெற்ற இந்த விபத்தில் நிலாவரை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கிருஸ்ணன் சாந்தினி (வயது-30), மயிலணியைச் சேர்ந்த ராமதாஸ் மைதிலி (வயது-34) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இதில் கிருஷ்ணன் சாந்தினி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். தெல்லிப்பழைப்பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16)


யாழ்.நகரில்........!
மல்டிமீடியா கல்வி
நேரடி ஸ்கொலர்ஷிப் கட்டணக்கழிவுடன்
65% வரை



கிராபிக்ஸ்
அனிமேஷன்
ஸ்பெஷல் எபெ.:க்ஸ்
மல்டிமீடியா

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

India's No.1 Animation Academy
JOB ASSISTANCE 100% CREATIVITY

Audio & Film Editing
Web Design & Development
Web & Cartoon Animation
Graphics Design
2D & 3D Animation
Digital Pre-Press
Mastering Multimedia

யாழ்.நகர் 2G, ஸ்ரான்லி வீதி, 021-2225677


# மரண அறிவித்தல்



## கனகசிங்கம் சின்னத்தங்கம்

*(முன்னாள் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்)*

மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் சின்னத்தங்கம் கடந்த (06.07.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைத்தி- நாகம்மா தம்பதியரின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி - அனுங்கி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நல்லையா, பூரணம், பழனி மற்றும் பொன்னையா, சூசைப்பிள்ளை நல்லம்மா, துரைசிங்கம் ஆகியோரின் சகோதரியும் மகாலிங்கம், அமிர்தலிங்கம், குணவதி (ஜேர்மனி), குணசிங்கம் (கனடா), சந்திரலேகா, ராசாத்தி (இந்தியா), ரட்ணசிங்கம்,திருச்செல்வம் (சுவிஸ்), கணேசலிங்கம் (சுவிஸ்), ஜோதி (ஜேர்மனி), அனுஷா (ஜேர்மனி) ஆகியோரின் தாயும் மனோவதனி, நிர்மலா, சிவபாலசிங்கம் (ஜேர்மனி), அற்புதா (கனடா), சந்திரகாந்தன், மனோகரன் (வாறின்), கேதீஸ்வரி, றஞ்சினி (சுவிஸ்), காயத்திரி (சுவிஸ்), விக்னேஸ்வரன் (ஜேர்மனி), சிவதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2012) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன், பூட்டிகள்

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (20229) (15-22)

# நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட கல்வி நூற்றாண்டை முன்னிட்டு விசேட கல்வி மன்றத்தால் நடத்தப்படுகின்ற நினைவுப் பேருரை பீடாதிபதி உயர்திரு எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நாளை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது. மூதறிஞரும் வித்துவானுமாகிய கலாநிதி க.சொக்கலிங்கம் ஞாபகார்த்த நினைவுப் பேருரையினை வைத்திய கலாநிதி மருத்துவர் சி.எஸ். யமுனானந்தா ''நில்லாத காலத்தில் கல்லான கல்வியும் கல்லாத கல்வியும்'' என்ற கருப்பொருளில் நிகழ்த்தவுள்ளார்.


COMPUTERS FOR SALE
Tel : 021-222 4459, 0772533390

Dell Branded, Intel Processor 3.0 GHz, Intel Mother Board, 1GB DDR-II Ram, 80GB Sata Hard Disk, DVD Writer, ATX Casing, 15" Dell LCD Monitor, Keyboard, Optical Mouse, Speaker, Webcam, இவை அனைத்தும் Rs.23,750/= மட்டுமே (1வருட உத்தரவாதம்)

COMPUTER ACCESSORIES FOR SALES

Huawei Multy Dongle : 7.2mbps From, 3550, 21.1 mbps 5250, Webcam from: 750, Kingston Pendrive: 4GB-1000, 8GB-1250, Casing-2550, DVD Writer 2850, ATX Power Supply-1350, Kaspersky In Security: 1550, Optical Mouse: 350, Keyboard-550, Woofer-1200, LCD Monitor from: 5400, Laptop Charger-1900.

(உங்கள் சகல விதமான கணினிகளையும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்)

North Lead Computer Sales & Services
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை *(நடராசா)*



புதுக்கலட்டி, அல்வாய் கிழக்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை நேற்று (10.07.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், கனகாம்பிகையின் அன்புக்கணவரும், வசந்தகுமாரி, புஸ்பநாதன் (ரவி - மாத்தளை), மல்லிகா, காலஞ்சென்ற யோகநாதன் (மோகன்), ஜெகநாதன் (கண்ணன்), கவிதா ஆகியோரின் அன்புத்தந்தையும், பத்மநாதன், இலங்காவதி (மாத்தளை), பிறேம்குமார் ஆகியோரின் அன்புமாமனும், பார்த்தீபன், தர்ஷிகா, தனுஜா, ராகினி, அபிராமி, துசி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுக்கலட்டி,**
**அல்வாய் கிழக்கு, அல்வாய்** (சி/1429)(22-8)

தகவல்:
குடும்பத்தினர்


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை (வ-து)
## பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரல்

*யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் கீழ்வரும் பதவிக்குத் தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.*

பதவி:- கல்விப் பயிற்சியளிப்பு உத்தியோகத்தர் தரம் 201/05
சம்பளத்திட்டம்:- 12450 - 190 × 10 - 210 × 10 - 16450
(கூவே.ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு அமைய இதர படிகள் வழங்கப்படும்)

கல்வித்தகைமை:-
(அ) கூட்டுறவு ஊழியர் 06 ஆவது சம்பளத்திட்ட பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 07 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம். அல்லது
(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமமான தகைமையொன்றுடன், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஒன்றில் கற்பித்தல் துறையில் 10 ஆண்டு கால அனுபவம். அல்லது
(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தர தராதரப்பத்திரம்/ க.பொ.த. உயர்தர பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஒன்றில் கற்பித்தல் துறையில் 12 ஆண்டு கால அனுபவம்

வயதெல்லை: - 25 - 45

அ) கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.
ஆ) நிறுவனங்களில் கடமைபுரிபவர்கள் நிறுவனத் தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.
இ) சகல தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்தல் வேண்டும்.
ஈ) கூட்டுறவுப் பயிற்சி, கணினி அறிவு, ஆங்கில அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
உ) தெரிவு செய்யப்படுபவர் சபையால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
ஊ) கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 26.07.2012

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,**
வீரசிங்கம் கட்டடத் தொகுதி, 2 ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1417) (2-6-22)



# கேள்வி அறிவித்தல்

## கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வடமாகாண கல்வி அமைச்சின் PSDG நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்வரும் நிர்மாண வேலைகளைச் செய்ய வலயக்கல்விப் பணிப்பாளரும் கேள்விச்சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.
2. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் உள்ளவராகவும், பதிவுப்புத்தகம் 2012 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
4. கேள்விப்பத்திரங்கள் வழங்கல் 12.07.2012 ஆம் திகதியிலிருந்து 20.07.2012 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 26.07.2012 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் எமது அலுவலகத்தில் முற்பகல் 11.30 மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
5. கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்கமுடியாத வைப்புப் பணங்களை தீவக கல்வி வலய அலுவலகத்தில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்களை பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும் மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளவும் முடியும்.

| பாடசாலையின் பெயரும் வேலையின் விவரமும் | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் | மீளளிக்கமுடியாத வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| (1) யா/யாழ்ற்றன் கல்லூரி (இருமாடிக்கட்டட மிகுதி வேலை 100 ' x 25 ') | 1200.00 | 42000.00 | M7/C8 |

6. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கை பத்திரங்களின் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதை இணைப்பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
7. கேள்வியாளர் பூரத்தி செய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறைகளும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்விப்பணிமனை, தீவகம் என விலாசமிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் தீவக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 26.07.2012 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் இடப்பட வேண்டும்.
8. மேற்படி வேலைகளுக்கான கேள்விகளில் பங்கெடுக்க விரும்புவோர் தமது இக்ராட் பதிவுப்புத்தகத்தை யாழ்ப்பாணம் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் சமர்பித்து பங்கெடுப்பதற்கான சிபார்சைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
9. குறித்த நேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

திரு.வ. இராதாகிருஸ்ணன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தீவகம், வேலணை

(C/1425)(6-8-22)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில்

# 4 ஆயிரத்து 840 குடும்பங்கள் இதுவரை மீளக்குடியமரவில்லை

### உரிய வசதிகள் ஏற்படுத்தப்படாமையே காரணம்

**இந்த மாதம் 9 ஆம் திகதியுடன் முடிவடைந்த குறிப்பிடப்பட்ட இருவாரகாலத்தில் 17 குடும்பங்கள் மாத்திரம் தமது சொந்த இடத்துக்கு திரும்பியுள்ளன.**

யாழ்ப்பாணம்,ஜூலை 11

இராணுவத்தினர் மக்களை மீள்குடியமர அனுமதித்த பிரதேசங்களில் மீளக் குடியமராமல் உள்ள 4 ஆயிரத்து 857 குடும்பங்களில் 17 குடும்பங்கள் மாத்திரமே கடந்த இருவார காலத்துக்குள் குடியமரவில்லை.

எஞ்சிய 4 ஆயிரத்து 840 குடும்பங்கள் இதுவரை குடியமரவில்லை. உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமையே குடியமர்வு தாமதமாகக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் 4 ஆயிரத்து 857 குடும்பங்கள் இதுவரையில் மீள்குடியமரவில்லை. இந்தக் குடும்பங்கள் மீள்குடியமராமைக்கான காரணங்களை இனங்கண்டு இருவார காலத்துக்குள் அவர்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்று கடந்த மாதம் 25 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி ஆகியோர் கூட்டாக நடத்திய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த மாதம் 9 ஆம் திகதியுடன் முடிவடைந்த குறிப்பிடப்பட்ட இருவாரகாலத்தில் 17 குடும்பங்கள் மாத்திரம் தமது சொந்த இடத்துக்கு திரும்பியுள்ளன. ஆயினும் அவர்களுக்கான உதவிகள் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. மாதகல் மாரீசன்கூடல் பகுதியில் கடற்படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த 19 வீடுகளில் 17 வீடுகளை, வீட்டு உரிமையாளர்களிடம் கையளித்திருந்தனர்.அந்தப் 17 குடும்பங்களும் குறித்த பகுதியில் உடனடியாக மீளக் குடியமர்வதற்குரிய வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மாத்திரம் 4 ஆயிரத்து 659 குடும்பங்கள் மீளக்குடியமராத நிலையில் உள்ளன.பெரும்பாலான மக்கள் மின்சார வசதி இன்மையாலேயே மீளக் குடியமரத் தாமதித்து வருவதாக தெல்லிப்பழைப் பிரதேச செயலரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் போது வடக்கின் வசந்தம் மின்சார வேலைத் திட்ட முகாமையாளர் எஸ்.குணசீலன் இன்னும் ஒருவார காலத்துக்குள் வித்தகபுரம் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். இருப்பினும் இதுவரையில் அந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கேட்டபோது, தெல்லிப்பழையில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்களுக்குரிய உதவிகள் வழங்குவதற்காக ஐ.நா முகவர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொண்டு நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருவதாகத் தெரிவித்தார். (த-5)

## சந்தைகள் அமைப்பதற்கு வேலணையில் காணிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 11

வேலணைப் பிரதேச சபையினால் இரண்டு சந்தைகளை அமைப்பதற்கு வேலணை பிரதேச செயலர் காணிகளை வழங்கியுள்ளார்.

'புறநெகும' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புங்குடுதீவு தெற்கு-முற்றவெளியில் சந்தை அமைப்பதற்கும், வேலணை துறையூரில் சந்தை அமைப்பதற்குமே பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் காணிகளை வழங்கியுள்ளார் என்று சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார். மேற்படி இரு காணிகளிலும் பொதுமக்களின் நீண்டகால தேவையாக சந்தைகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (த-41)

## இடம் விட்டு இடம்மாறும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

### மானிப்பாய் சந்தைக்கு வருவோர் சிரமம்

**தற்பொழுது மீண்டும் பழைய இடத்துக்கு மாற்றப்பட்டு நிரந்தரமாக இயங்கி வருகின்றது.**

வலி.தென்மேற்கு, ஜூலை 11

மானிப்பாய் மத்திய சந்தைக்கான சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மீண்டும் சந்தை வளாகத்துக்குள் பழைய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மாறிமாறி வெவ்வேறு இடங்களில் இயங்கி வருவதால் சந்தைக்கு வரும் பொதுமக்கள் வீண் அலைச்சலுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றார்கள்.

இட நெருக்கடிக்கு மத்தியில் மத்திய சந்தைப் பகுதி தெற்குப் பக்கமாக இயங்கி வந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையம், பொதுமக்களின் நலன்கருதி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சிவகுமார் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையைத் தொடர்ந்து, சந்தை விஸ்தரிப்புக்காக சபையினால் வாங்கப்பட்ட அருகிலுள்ள காணிக்கு மாற்றப்பட்டிருந்தது.

அந்த இடத்தில் சில தினங்கள் இயங்கி வந்த பாதுகாப்பு நிலையம் பிரதேச சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் மீறிப் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டது. பழைய இடத்தில் இரு தினங்கள் இயங்கிய பாதுகாப்பு நிலையம் மீண்டும் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டது.

தற்பொழுது மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டு நிரந்தரமாக இயங்கி வருகின்றது. பிரதேச சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் மீறி, சைக்கிள் நிலையம் இடநெருக்கடியான இடத்தில் இயங்குவது குறித்து சந்தைக்கு வரும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன் அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றார்கள். (த-111)

## கொலையாளி அடையாளம் காணப்படவில்லை

தென்மராட்சி, ஜூலை 11

எழுதுமட்டுவாழ் பகுதியில் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் சாட்சி கொலையாளியை அடையாளம் காண்பிக்கவில்லை.

இந்தக் கொலை தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கொண்டுவரப்பட்ட படையினரை அடையாளம் காண்பதற்காக சம்பவத்தின் போது அங்கு நின்ற இறந்தவரான கந்தையா ஜெயராஜா (வயது-45) என்பரின் மாமன் சாட்சியாக அழைக்கப்பட்டிருந்தார்.

சாவகச்சேரி நீதிமன்றில் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சாட்சி அங்கு நிறுத்தப்பட்டிருந்தவர்களில் கொலையாளியை அடையாளம் காட்டவில்லை. இது தொடர்பாக அறிக்கை பதில் நீதிவானால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. (த-9)

## மட்டுவில் பாடசாலைக்கு புதிய கட்டடம்

தென்மராட்சி, ஜூலை 11

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாடிக் கட்டடத்தின் மேல்மாடிப் பகுதி கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள தள கட்டடத்தில் பாடசாலை நூலகமும் கணினிசெயற்பாட்டு அறையும் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (த-9)

## வேம்பொடுகேணி பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

பளை, ஜூலை 11

பளைப் பிரதேசத்தின் வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையை விரைவில் ஆரம்பிக்குமாறு அந்தப் பகுதி பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒரு மாதத்திற்கு முன்னர் இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய பிரிவுகளின் ஒரு தொகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு பலர் அங்கு குடியமர்ந்துள்ள னர்.

முன்னர் கல்வி கற்ற பாடசாலைகளிலிருந்து விடுகைப் பத்திரம் பெற்று வந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் வீடுகளில் நிற்கின்றனர்.

இந்தப் பகுதிகளிலிருந்து சுமார் நான்கு கிலோ மீற்றருக்கு அப்பால் பளை மத்திய கல்லூரி இருப்பதால் ஆரம்பப் பிரிவு மாணவர்களை அங்கு கொண்டு செல்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றதால் விரைவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலையை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளை கோரியுள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்தனர். (த-9)

## சமூகக் கண்காணிப்பு குழு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 11

மண்டைதீவு - சுடலை வீதிக்கான சமூக கண்காணிப்புக் குழு நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தலைமையில் இடம்பெற்ற குழுத் தெரிவில் மண்டைதீவு மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் குழுவே 'நெல்சிப்' அபிவிருத்தியின் கீழ் நடைபெறவுள்ள சுடலை வீதிக்கான முழுக் கண்காணிப்பையும் மேற்கொள்ளவுள்ளது. (த-50)

## திரும்பிச் செல்லும் கடிதங்கள்

தென்மராட்சி, ஜூலை 11

எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு வரும் கடிதங்களை திருப்பி அனுப்பும் நிலை தொடர்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

அஞ்சல் அலுவலக பிரிவுக்குட்பட்ட முகமாலை, இந்திராபுரம், இத்தாவில் போன்ற கிராமங்களில் இன்னமும் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படாததால் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பழைய முகவரிக்கு கடிதங்கள் வந்த வண்ணமுள்ளன.

எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகத்தில் தற்காலிக முகவரி கையளித்தவர்களின் கடிதங்கள் தவிர்ந்த ஏனைய கடிதங்களின் உரிமையாளர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியாமல் அனுப்பியவரின் முகவரிக்கு கடிதங்கள் மீள அனுப்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை தமது தற்காலிக முகவரி அஞ்சல் அலுவலகத்தில் கையளிக்காத இந்தப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எழுதுமட்டுவாழில் இயங்கும் உப அஞ்சல் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## மேலதிக சிகிச்சைக்காக 10,934 பேர் 2011இல் போதனா வைத்தியசாலைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆதார மற்றும் பிரதேச வைத்தியசாலைகளிலிருந்து கடந்த ஆண்டு மேலதிக சிகிச்சைக்காக 10 ஆயிரத்து 934 நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக ஆயிரத்து 140 நோயாளர்கள் கொழும்பு வைத்தியசாலைகளுக்கும் மாற்றப்பட்டனர். இவ்வாறு மாதாந்தம் சராசரியாக 95 பேர் மாற்றப்பட்டுள்ளனர் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிமனை தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு 2 ஆயிரத்து 568 நோயாளர்கள் மாற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு மாதாந்தம் 214 பேர் மாற்றப்படுகின்றனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலிருந்து 2 ஆயிரத்து 48 பேர் மாற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு மாதாந்தம் சராசரியாக 171 பேர் மாற்றப்படுகின்றனர். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலிருந்து ஆயிரத்து [illegible] பேர் மாற்றப்பட்டுள்ளனர். மாதாந்தம் சராசரியாக 91 பேர் மாற்றப்படுகின்றனர். ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையிலிருந்து 798 பேர் மாற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு மாதாந்தம் சராசரியாக 67 பேர் மாற்றப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச வைத்தியசாலையிலிருந்து ஆயிரத்து 492 பேர் மாற்றப்பட்டுள்ளனர். மாதாந்தம் சராசரியாக 124 பேர் மாற்றப்பட்டுள்ளனர். வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையிலிருந்து 168 பேர் மாற்றப்பட்டனர். அங்கிருந்து மாதாந்தம் சராசரியாக 14 பேர் மாற்றப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையிலிருந்து 179 பேர் மாற்றப்பட்டனர். மாதாந்தம் சராசரியாக 15 பேர் மாற்றப்பட்டனர். அனலைதீவு பிரதேச வைத்தியசாலையிலிருந்து 34 பேர் மாற்றப்பட்டனர். இங்கிருந்து மாதாந்தம் சராசரியாக 3 பேர் மாற்றப்பட்டனர்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையிலிருந்து 573 பேர் மாற்றப்பட்டனர். மாதாந்தம் சராசரியாக 48 பேர் மாற்றப்பட்டனர். சங்கானை பிரதேச வைத்தியசாலையிலிருந்து 936 பேர் மாற்றப்பட்டனர். மாதாந்தம் சராசரியாக 78 பேர் மாற்றப்பட்டுள்ளனர்.

காரைநகர் பிரதேச வைத்தியசாலையிலிருந்து 199 பேர் மாற்றப்பட்டனர். மாதாந்தம் சராசரியாக 17 பேர் மாற்றப்பட்டனர். நயினாதீவு பிரதேச வைத்தியசாலையிலிருந்து 100 பேர் மாற்றப்பட்டனர். மாதாந்தம் சராசரியாக 3 பேர் மாற்றப்பட்டனர்.

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையிலிருந்து 158 பேர் மாற்றப்பட்டனர். மாதாந்தம் சராசரியாக 13 பேர் மாற்றப்பட்டனர். வட்டுக்கோட்டைப் பிரதேச வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக 164 பேர் மாற்றப்பட்டனர். மாதாந்தம் சராசரியாக 14 பேர் மாற்றப்பட்டனர். வேலணை பிரதேச வைத்தியசாலையிலிருந்து 275 பேர் மாற்றப்பட்டனர். மாதாந்தம் சராசரியாக 23 பேர் இவ்வாறு மாற்றப்பட்டனர்.

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையிலிருந்து 151 பேர் மாற்றப்பட்டனர். மாதாந்தம் சராசரியாக 13 பேர் இவ்வாறு மாற்றப்பட்டனர்.

கரவெட்டி மற்றும் அளவெட்டிப் பிரதேச வைத்தியசாலைகளிலிருந்து நோயாளர்கள் எவரும் கடந்த வருடம் மாற்றப்படவில்லை.

12 ஆயிரத்து 74 நோயாளர்கள் கடந்தவருடம் மேலதிக சிகிச்சைகளுக்காக பிற வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டனர். அதன் மாதாந்த சராசரித் தொகை ஆயிரத்து 6 என்றும் அந்தத் தரவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரணாப் கையெழுத்து போலி

## தடயவியல் அறிக்கையைச் சமர்ப்பித்தது சங்மா தரப்பு

டில்லி, ஜூலை11

இந்திய புள்ளியியல் நிறுவனத் தலைவர் பதவியிலிருந்து பிரணாப் ராஜினாமா செய்ததாகக் கொடுக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் போடப்பட்டிருக்கும் பிரணாப் கையெழுத்து போலியானதுதான் என்பதை உறுதிப்படுத்தும் தடயவியல் துறை அறிக்கையை சங்மா தரப்பு தேர்தல் நேற்று ஆணையத்திடம் தாக்கல் செய்தது.



ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு பரிசீலனையின்போது பிரணாப் முகர்ஜியை எதிர்த்துப் போட்டியிடும் சங்மா தரப்பு ஒரு ஆட்சேபனையை முன்வைத்தது. ஆதாயம் தரக்கூடிய பதவியில் இருந்து கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆனால் இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைவராக பிரணாப் நீடித்து வருகிறார் என்பதால் அவரது மனுவை நிராகரிக்க சங்மா தரப்பு வலியுறுத்தியது. இதனால் வேட்பு மனு பரிசீலனை ஒருநாள் ஒத்தி வைக்கப்பட்டு பிரணாப் முகர்ஜியிடம் விளக்கம் கோரப்பட்டது.

இதைத் தொடர்ந்து பிரணாப் முகர்ஜி வேட்புமனுத் தாக்கலுக்கு முன்பாகவே அந்த சர்ச்சைக்குரிய பதவியை ராஜினாமா செய்து விட்டார் என்றும் அதற்கான ஆதாரம் ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால் இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து பிரணாப் முகர்ஜி ராஜி னாமாச் செய்ததுபோல் போலியாக கடிதம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் பிரணாப் கையெழுத்து வேறு ஒருநபரால் போடப்பட்டிருப்பதாகவும் சங்மா தரப்பு மீண்டும் குற்றம்சாட்டியது. இது தொடர்பாக தேர்தல் ஆணையத்தையும் சந்தித்து முறைப்பாடு தெரிவித்தது.

இந்தநிலையில் பிரணாப் முகர்ஜியின் கையெழுத்து போலியானது என்பதை உறுதிப்படுத்தும் தடயவியல்துறையின் அறிக்கை நேற்று தேர்தல் ஆணையத்திடம் தாக்கல் செய்யப்பட்டது. மேலும் வேட்பு மனுவில் உள்ள கையெழுத்தும் ராஜினாமா கடிதத்தில் உள்ள கையெழுத்தும் வெவ்வேறானவை என்பதை நிரூபிக்கும் ஆவணங்களையும் சங்மா தரப்பு தாக்கல் செய்தது. பி.ஏ.சங்மா சார்பில் பா.ஜ.க. மூத்த தலைவர் சத்யபால் ஜெயின், பிஜு ஜனதாதளம் எம்.பி. பரத்ருஹரி மஹதாப், ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி ஆகியோர் தேர்தல் ஆணையத்திடம் இந்த ஆதாரத்தை தாக்கல் செய்தனர். தங்களது ஆட்சேபனையை தேர்தல் ஆணையம் நிராகரிக்கும் நிலையில் உச்ச நீதிமன்றத்தை நாடவும் சங்மா தரப்பு முடிவு செய்திருக்கிறது. (வ)

# ரூ.10 கோடி இழப்பீடு கேட்டு நித்தி வழக்கு

## நிராகரித்தது உயர்நீதிமன்றம்

பெங்களூர், ஜூலை 11



பெங்களூர் பிடதி ஆசிரமத்தில் கர்நாடக அரசு சோதனை நடத்தியபோது ஆசிரம சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதால் அதற்காக ரூ 10 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என்று நித்தியானந்தா தாக்கல் செய்த மனுவை கர்நாடக உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிடதி ஆசிரமம் சீலிடப்படாமல் நித்தியானந்தாவுக்கே திருப்பி அளிக்கப்பட்டதையடுத்து அவரது மனுவை நிராகரிப்புச் செய்வதாக நீதிபதி அஜித் குஞ்சால் தெரிவித்தார்.

நித்தியானந்தா சார்பில் மூத்த சட்டத்தரணி ரவி பி.நாயக் முன்னிலையானார். அவர் தாக்கல் செய்திருந்த மனுவில், கர்நாடக முதல்வர் சதானந்த கௌடா, ராம்நகர் மாவட்ட உதவி ஆணையாளர் மற்றும் செய்தித் தொலைக்காட்சி ஒன்று ஆகியவை ரூ 10 கோடி தர வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். (வ)

# ராசாவின் மனுவுக்கு பதிலளிக்க சி.பி.ஐக்கு அழைப்பாணை



2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் தன் மீதான வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று ஆ.ராசா டில்லி உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி, ராசா அளித்த மனுவுக்கு பதிலளிக்குமாறு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ரூ. 1.76 லட்சம் கோடி ஊழல் நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஊழல் தொடர்பாக தொலைத் தொடர்புத்துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் சரத்குமார் உள்பட 14 பேர் கைது செய்யப் பட்டனர்.

டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்ட 14 பேரில் முதல் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ஆ.ராசாவைத் தவிர ஏனைய 13 பேரும் ஒருவர் பின் ஒருவராக பிணையில் விடுதலையானார்கள். இதைத்தொடர்ந்து ஆ.ராசாவும் தன்னை பிணையில் விடுதலை செய்யக்கோரி டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார்.

இந்த மனு மீதான விசாரணை முடிந்ததும் ஆ.ராசாவுக்கு பிணை வழங்க நீதிபதி உத்தரவிட்டார். மேலும் தமிழகத்துக்கு நீதிமன்ற அனுமதியின்றிச் செல்லக் கூடாது எனவும் நிபந்தனை விதித்தார். ஆ.ராசாவுக்கு நீதிபதி ரூ.30 லட்சம் சொந்த உத்தரவாத அடிப்படையில் பிணை வழங்கி உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் தன் மீதான வழக்கை ரத்து செய்ய வேண்டும் என ஆ.ராசா டில்லி உயர் நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி, ராசா அளித்த மனுவுக்குப் பதிலளிக்குமாறு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளார். (வ)

# பிணை கோரி ஜெகன்மோகன் மனுத் தாக்கல்



சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி தன்னை பிணையில் விடுவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

முன்னதாக உயர் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்திருந்த பிணை மனு நிராகரிப்புச் செய்யப்பட்டதையடுத்து உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளார்.

# நித்தியின் அழைப்பாணையை பத்திரிகைகளில் வெளியிடுங்கள்

## மதுரை சிறப்பு நீதிமன்றம் உத்தரவு

நித்தியானந்தாவுக்கு பிறப்பித்த நீதிமன்ற சம்மனை பத்திரிக்கைகளில் விளம்பரமாக வெளியிட மதுரை மாவட்ட முதலாவது சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை இளைய ஆதீனமாக நித்தியானந்தாவை நியமித்தது செல்லாது, சைவ நெறிமுறைகளுக்குப் புறம்பாக இந்த நியமனம் இடம் பெற்றுள்ளது.

எனவே இதை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று கோரி மதுரை மாவட்ட முதலாவது சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதை விசாரித்த நீதிமன்றம், மதுரை ஆதீனம் மற்றும் நித்தியானந்தா ஆகிய இருவரும் நேரில் முன்னிலையாகி விளக்கம் அளிக்க உத்தரவிட்டது. இதுதொடர்பாக அழைப்பாணையும் அனுப்பப்பட்டது.

**அழைப்பாணையை மதுரை ஆதீனம் வாங்கிக் கொண்டார். ஆனால் நித்தியானந்தா பெற மறுத்து விட்டார். அழைப்பாணையை வாங்கிய ஆதீனமும் நீதிமன்றத்துக்கு வர மறுத்து வருகிறார்.**

அழைப்பாணையை மதுரை ஆதீனம் வாங்கிக் கொண்டார். ஆனால் நித்தியானந்தா பெற மறுத்து விட்டார். அழைப்பாணையை வாங்கிய ஆதீனமும் நீதிமன்றத்துக்கு வர மறுத்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு நீதிமன்றத்தில் வந்தபோது, மனுதாரர்கள் மணிவாசகம், தியாகராஜன் ஆகியோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், நித்தியானந்தா வேண்டும் என்றே நீதிமன்ற அழைப்பாணையைப் பெற மறுத்து வருவதாக குற்றஞ்சாட்டினர்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி ராஜசேகர், நித்தியானந்தா வேண்டும் என்றே அழைப்பாணையைப் பெற மறுத்து வருவதால் அவருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பத்திரிகைகளில் விளம்பரமாக வெளியிடுமாறு அதிரடி உத்தரவிட்டார்.

# இந்தியாவின் துயரங்களுக்கு காரணம் சோனியாவே

## சாடுகிறது பா.ஜ.க.

இந்தியா சந்தித்து வரும் அத்தனை துயரங்களுக்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திதான் பொறுப்பு என்று பா.ஜ.க. கடுமையாக சாடியுள்ளது.

இதுகுறித்து பாரதீய ஜனதாக்கட்சிச் செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்ததாவது:-

இதுவரை இருந்த மத்திய அரசுகளிலேயே மிகவும் மோசமானது மன்மோகன் சிங் தலைமையிலான அரசுதான்.

இந்தியா இன்று சந்தித்து வரும் அத்தனை கஷ்டங்கள், துயரங்களுக்கும் சோனியா காந்தியே காரணமாவார்.

இந்த மாபெரும் குற்றச்சாட்டிலிருந்து சோனியா காந்தியால் தப்பவே முடியாது. அவரது தவறான வழிகாட்டுதல் மற்றும் மத்திய அரசின் தவறான ஆட்சியால்தான் மக்கள் பெரும் துயரத்தில் மூழ்கியுள்ளனர்- என்றார்.

# 250 அடி ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த 4 வயது சிறுவன் மீட்பு

மகாராஷ்டிராவில் 250 அடி ஆழ ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த 4 வயது சிறுவனை 4 மணி நேர போராட்டத்துக்குப் பின்பு மீட்புக் குழுவினர் மீட்டனர்.

மகாராஷ்டிரா, அகமத் நகரின் ரகூரி கிராமத்தைச் சேர்ந்த மனோஜ் அனுஷா கோர்படே என்ற 4 வயது சிறுவன் நேற்றுமுன்தினம் மாலை தனது வீட்டருகே விளையாடிக் கொண்டிருந்தான்.

அப்போது அங்குள்ள 250 அடி ஆழ ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்து விட்டான். இதனை தற்செயலாகப் பார்த்த அவனது தாய் கூச்சலிட்டார்.

பின்னர் உடனடியாக கிராம மக்கள் ஒன்று கூடி, சிறுவனை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.




இதைத்தொடர்ந்து ஜெ.சி.பி. இயந்திரம் வரவழைக்கப்பட்டு, மீட்புக்குழுவினர் 4 மணி நேரம் போராடி மாலை 5.45 மணியளவில் மனோஜை உயிருடன் மீட்டனர்.

இதேவேளை கடந்த மாதம் அரியானாவில் மகி என்ற சிறுமி, ஆழ்துளை [illegible] பின்னர் இறந்த நிலையில் மீட்கப்பட்டார். ஆனால் நேற்றுமுன்தினம் நடந்த சம்பவத்தில் சரியான நேரத்தில் உள்ளூர் வாசிகள் செயற்பட்டதால் அவன் உயிருடன் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது அகமத் நகரில் உள்ள விவேகானந்தா மருத்துவமனையில் சிகிச்சைக்காக [illegible] கோர்படே அனுமதிக்கப்பட்டுள்ளான். (வ)

# இந்தியர்களின் கறுப்புப் பணம் 12,700 கோடி ரூபாவாம்

சுவிற்ஸர்லாந்து வங்கிகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்துள்ள கறுப்புப் பணத்தின் மதிப்பு ரூ.12,700 கோடி என தகவல் வெளியாகி உள்ளது.

இது சுவிஸ் வங்கிகளில் வெளி நாட்டினரின் மொத்த முதலீட்டில் 0.14% ஆகும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கறுப்புப் பணத்திற்கு எதிராக அந்தந்த நாட்டு அரசுகள் கடும் போராட்டத்தில் களமிறங்கியுள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரை பா.ஜ.க. உட்பட பிரதான அரசியல் கட்சிகளும் சில சமூக அமைப்புகளும் இந்தியர்கள் சுவிஸ் வங்கிகளில் பதுக்கியுள்ள கறுப்புப்பணத்தை மீட்க வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றன.

இது போன்ற நடவடிக்கைகள் ஒவ்வொரு நாடுகளிலும் நிலவி வருவதால் கடந்த 4 ஆண்டுகளில் சுவிஸ் வங்கிகளில் வெளிநாட்டினரின் முதலீடு ரூ. 20 லட்சம் கோடி குறைந்துள்ளது.

2011 ஆம் ஆண்டு இறுதியில் வெளிநாட்டினரின் மொத்த முதலீட்டில் 51 சத வீதம் குறைந்துள்ளது.

சுவிஸ் வங்கிகள் சங்கம் தெரிவித்துள்ள தகவல்படி, 2011ஆம் ஆண்டு இறுதியில் வங்கிகளில் உள்ள மொத்த சொத்து மதிப்பு ரூ. 302 லட்சம் கோடி. இதில் 51% வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பணம் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே தற்போது மிகப்பயங்கரமான தீவிரவாத அமைப்பு லஷ்கர் இ தொய்பா

## அமெரிக்கா தகவல்

வாஷிங்டன், ஜூலை 11

உலகிலேயே மிக ஆபத்தான தீவிரவாத அமைப்பு தற்போது பாகிஸ்தானின் ஆதரவோடு இயங்கும் லஷ்கர் இ தொய்பா தான் என்று அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏயின் முன்னாள் ஆலோசகர் புரூஸ் ரெய்டல் தெரிவித்தார். அல் குவைதாவை ஓரளவுக்குக் கட்டுப்படுத்திவிட்ட நிலையில், தற்போது இந்த அமைப்புதான் விஸ்வரூபம் எடுத்துள்ளது.



வாஷிங்டனில் உள்ள புரூக்ளின் வெளிநாட்டுக் கொள்கை ஆலோசனை அமைப்பின் மூத்த ஆய்வாளராக தற்போதுள்ள அவர் டெய்லி பீஸ்ட் பத்திரிகையில் இதுகுறித்து எழுதியிருப்பதாவது:-

நியூயோர்க்கில் நடந்த செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் உலகளவில் நடந்த பயங்கரமான தீவிரவாதத் தாக்குதல் லஷ்கர் இ தொய்பா நடத்திய மும்பை தாக்குதல்தான். பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த இந்திய எதிர்ப்புத் தீவிரவாத இயக்கமாக மட்டுமே இருந்த லஷ்கர் இ தொய்பா, இப்போது இந்துக்கள் வாழும் இந்தியா, யூதர்கள் வாழும் இஸ்ரேல் மற்றும் மேற்கு நாடுகளுக்கு எதிரான ஒரு தீவிரவாத இயக்கமாக உருவெடுத்துள்ளது. மும்பைத் தாக்குதலில் முக்கிய பங்கு வகித்த சயீத் சபியூதீன் அன்சாரி என்ற அபு ஜுண்டால் கைது செய்யப்பட்டது தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போரில் முக்கியமான நடவடிக்கையாகும்.

மும்பைத் தாக்குதலை நடத்திய லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகளை பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ. நேரடியாகக் கட்டுப்படுத்தியது குறித்து அபு ஜுண்டால் நிறையத் தகவல்களைத் தந்துள்ளான். அவன் சொல்வது உண்மையாக இருந்தால், அமெரிக்கர்களைக் கொல்ல ஐ.எஸ்.ஐ. நேரடியாகவே உத்தரவிட்டது உறுதியாகிறது.

ஐ.எஸ்.ஐக்கும் சவூதி உளவுப் பிரிவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அதேபோல சவூதி அரேபியாவின் நெருங்கிய நட்பு நாடாக பாகிஸ்தான் உள்ளது. ஆனாலும், அபு ஜுண்டாலைக் கைது செய்து இந்தியாவிடம் சவூதி அரேபியா ஒப்படைத்தது மிகப் பெரிய உதவியாகும்.

லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்புக்கு சவூதி அரேபியா மற்றும் வளைகுடா நாடுகளில் வசிக்கும் பாகிஸ்தானியர்களிடம் இருந்து தான் பெரும்பாலான நிதி உதவி வந்து கொண்டுள்ளது. தற்போது அந்த அமைப்புக்கு எதிராக சவூதி அரேபியா நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால் அந்த அமைப்புக்கு கிடைத்துவரும் நிதியுதவியும் பாதிக்கப்படும்.

ஆனால், பாகிஸ்தானில் அந்த நாட்டு இராணுவம் மற்றும் உளவுப் பிரிவின் உதவியோடு லஷ்கர் இ தொய்பா அமைப்பு மிகச் சுதந்திரமாகச் செயற்பட்டு வருகிறது. இந்த அமைப்பு தெற்காசியா, வளைகுடா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியாவிலும் கால் பதித்துவிட்டது.

அல் குவைதாவை ஓரளவுக்கு ஒடுக்கிவிட்ட நிலையில், பாகிஸ்தானின் ஆதரவோடு இயங்கும் லஷ்கர் இ தொய்பா தான் இப்போதைக்கு உலகிலேயே மிக ஆபத்தான தீவிரவாத அமைப்பாக உள்ளது -என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# குழந்தையை பையில் வைத்து விமானத்தில் கடத்திய பெற்றோர்



குழந்தைக்கு கடவுச்சீட்டு மற்றும் விசா இல்லாத காரணத்தால் பையில் மறைத்து எடுத்து வந்த தம்பதியரை, ஐக்கிய அரபு எமிரேட் விமானத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

எகிப்து நாட்டிலிருந்து ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ள ஷார்ஜாவுக்கு ஒரு தம்பதியர் விமானத்தில் வந்திறங்கினர். இவர்களது விசா மற்றும் கடவுச்சீட்டைச் சோதித்த அதிகாரிகள் அடுத்த கட்டமாக இவர்களது உடைமைகளைச் சோதித்தனர்.

அப்போது அவர்கள் வைத்திருந்த பையை ஸ்கான் செய்து பார்த்த போது, அதில் ஒரு குழந்தை இருப்பதைக் கண்டனர். இதையடுத்து, அவர்களை விமான நிலைய அதிகாரிகள் கைது செய்து விசாரித்தனர்.

குழந்தைக்கு கடவுச்சீட்டு, விசா இல்லாததால் பையில் மறைத்து எடுத்து வந்ததாக அவர்கள் கூறினர். இதனைத் தொடர்ந்து அவர்களிடம் மேலும் விசாரணை நடைபெற்று வருகின்றது. (வ)

# யசீர் அரபாத்தின் உடல் மீண்டும் சோதனைக்கு



நஞ்சு கொடுத்துக் கொல்லப்பட்டதாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்து, பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத்தின் உடலை மீண்டும் பிரேத பரிசோதனைக்காக தோண்டி எடுக்க, அதிபர் முகமது அப்பாஸ் அனுமதி அளித்துள்ளார்.

பலஸ்தீன விடுதலை இயக் கத்தின் தலைவரான யசீர் அரபாத், 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி உடல்நலக்குறைவால் இறந்தார். பிரான்ஸ் சென்றிருந்த போது உடல்நலக்குறைவால் அங்குள்ள இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அப்போது அவருக்கு பொலோனியம்-210 என்ற கொடிய நஞ்சு கலந்து கொடுக்கப்பட்டதாலேயே அவர் இறந்தார் என சுவிற்ஸர்லாந்து கதிர்வீச்சு இயற்பியல் ஆராய்ச்சி மையம் தகவல் வெளியிட்டது.

இதுதொடர்பாக அவரது உடலை மீண்டும் பிரேத பரிசோதனை செய்ய கோரிக்கை எழுந்தது. பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியான ரமல்லா நகரில் அரபாத்தின் உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து பலஸ்தீன அதிகாரபூர்வ அதிபர் முகமது அப்பாஸ், மீண்டும் பிரேத பரிசோதனை செய்வதற்காக அவரது உடலைத் தோண்டி எடுக்க அனுமதி அளித்துள்ளார். இது தொடர்பாக முகமது அப்பாஸின் உதவியாளர் சாயீப் இர்காத் கூறுகையில், அரபாத்தின் குடும்பத்தினர் , அவரது இயக்கம் சார்ந்த அமைப்பினர் சம்மதம் தெரிவித்ததன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக சுவிஸ் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் - என்றார். (வ)

# முதன்முறையாக நாடாளுமன்றத்தில் கால் பதித்தார் ஆங்சான் சூகி



ஆங்சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி 43 தொகுதிகளில் போட்டியிட்டு 40 தொகுதிகளில் வென்றது. சூசியும் வெற்றி பெற்றார்.


நேபியிடா, ஜூலை 11

மியன்மார் நாட்டில் ஜனநாயகத்துக்காக நீண்ட காலம் போராடிய ஆங்சான் சூகி, நாடாளுமன்ற உறுப்பினராகி, முதல் முறையாக நேற்று முன்தினம் நாடாளுமன்றத்துக்குள் காலடி வைத்துள்ளார்.

மியன்மார் நாட்டில் கடந்த 1962 ஆம் ஆண்டு முதல் இராணுவ ஆட்சி நடைபெற்று வந்தது. அங்கு ஜனநாயகத்துக்காகப் போராடிய பெண் தலைவர் ஆங்சான் சூகி, வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார். 21 ஆண்டு சிறைக் காவலில் வைக்கப்பட்டிருந்த அவர் 2010 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். அந்த ஆண்டில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெற்றது. எனினும், தேர்தலில் முறைகேடு நடைபெற்று இராணுவ ஆதரவு கட்சி வெற்றி பெற்றது.

அதன்பின், அந்த நாட்டில் பல்வேறு அரசியல் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. கடந்த ஏப்ரலில் அங்கு நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடந்தது. ஆங்சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி 43 தொகுதிகளில் போட்டியிட்டு 40 தொகுதிகளில் வென்றது. சூசியும் வெற்றி பெற்றார்.

இதனைத்தொடர்ந்து சூகிக்கு விதிக்கப்பட்ட தடைகள் விலக்கப்பட்டதால், அவர் ஐரோப்பிய நாடுகளுக்கு 17 நாள்கள் சுற்றுப்பயணம் சென்று விட்டு, நாடு திரும்பினார். இந்த நிலையில், மியன்மார் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியது. சூகி முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்தார். தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்திற்குச் சென்றார் சூகி. அதன் பின்னர் செய்தியாளர்களிடம், ''நாட்டுக்காக என்னால் முடிந்த அளவு உழைப்பேன்'' என்றார். (வ)



ஐக்கிய நாடுகள் சிறப்புத் தூதர் கொபி அனான், சிரியா அதிபர் [illegible] சிரியாவில் அமைதியை நிலைநிறுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினார்.

# மலேஷிய பிரதமர் அலுவலகத்துக்குள் வாளுடன் நுழைய முயன்ற நபர்

கோலாலம்பூர், ஜூலை 11

மலேஷியாவில் பிரதமர் நஜிப் ரசாக் அலுவலகத்துக்குள் வாளுடன் நுழைந்த மர்ம நபரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

நேற்றுமுன்தினம் மாலை தலைநகர் கோலாலம்பூர், புட்ராஜெயா நகரில் உள்ள மலேஷியப் பிரதமர் நஜிப் ரசாக்கின் தலைமை அலுவலகத்துக்குள், மர்ம நபரொருவர் பெண்ணொருவருடன் கூர்மையான வாளுடன் அத்துமீறி உள்ளே நுழைய முயன்றார்.



அப்போது அங்கு பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் அவரைத் தடுத்தனர். இருப்பினும் அலுவலக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் மற்றும் பொருள்களை அடித்துச் சேதப்படுத்தினார்.

இந்தச் சூழ்நிலையில் அந்த நபர் அளவுக்குமீறி போகவே, பொலிஸார் அவரை துப்பாக்கியால் சுட்டனர். இதில் படுகாயமடைந்த அந்த நபரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். எனினும் அவர் மரணமடைந்தார்.

இந்த விசாரணையில் அவர் வாள் தயாரிக்கும் தொழிலாளி எனத் தெரியவந்தது. இந்தச் சம்பவத்தின் போது உடன் வந்த பெண்ணின் கால்களில் குண்டுகளால் காயம் ஏற்பட்டது. அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற போது பிரதமர் நஜீப் ரசாக் அலுவலகத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனில் மாணவர் விசா கட்டுப்பாடுகள் நீக்கம்

பிரிட்டனில் வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்பதற்கான விசாக்களுக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனில் சீனா, இந்தியா, இலங்கை உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்கள் படித்து முடித்தவுடன் வேலை செய்ய வழங்கப்பட்டு வந்த விசா ரத்து செய்யப்பட்டது.

மேலும் மாணவர் விசாவுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனால் பிரிட்டன் பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கு இந்த ஆண்டு வெளிநாட்டு மாணவர்களின் விண்ணப்பங்கள் குறைந்துள்ளன.

ஆனால் ஜேர்மனியில் மாணவர் விசாவுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அறிவிப்பு வெளியாகி உள்ளது. மேலும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச தரமுள்ள கல்வி ஜேர்மனியில் வழங்கப்படுகிறது. இதனால் கடும் போட்டி நிலவுகிறது.

வெளிநாட்டு மாணவர்களின் வருகை குறைந்தால் பிரிட்டனுக்கு வருவாயும் குறைந்துவிடும் என்று பல்கலைக்கழகங்கள் சுட்டிக் காட்டின. இதையடுத்து மாணவர் விசாவுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்த பிரதமர் டேவிட் கமரூன் அரசு முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் வெளிநாட்டு மாணவர்கள் படித்து முடித்தவுடன் 2 ஆண்டு வேலை செய்வதற்கான விசா மீண்டும் வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லேடனுக்கு உதவிய இராணுவ அதிகாரி

## பாக். புலனாய்வு அமைப்பின் முன்னாள் தலைவர் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியால் பரபரப்பு



சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடனுக்கு, முன்னாள் ஜனாதிபதி முஷாரப் அனுமதியுடன் பாகிஸ் தான் இராணுவ அதிகாரி ஒருவர் உதவினார் என்று பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பான ஐ.எஸ்.ஐயின் முன்னாள் தலைவர் தெரிவித்தார்.

தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றின் போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடனை அமெரிக்கக் கடற்படையினர் கடந்தாண்டு மே மாதம் சுட்டுக் கொன்றனர். பாகிஸ்தானின் இராணுவப் பயிற்சி மையங்கள் அமைந்துள்ள அபோதாபாத் பகுதியில் ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்தது தங் களுக்குத் தெரியாது என்று பாகிஸ்தான் அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. ஆனால் இதை அமெரிக்கா நம்பத் தயாராக இல்லை.

இந்த நிலையில் இது குறித்து அவர் அளித்த பேட்டி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

ஒசாமா பின்லேடனை உலகம் முழுவதும் அமெரிக்கா தேடிக்கொண் டிருந்த சமயத்தில், பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்த அவருக்கு இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் இஜாஸ் ஷா தேவையான உதவிகளைச் செய்தார். இவை அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பின் முழு அனுமதியுடன் மேற்கொள் எப்பட்டன.

பர்வேஸ் முஷாரப் ஜனாதிபதியாக இருந்தபோது இஜாஸ் ஷா மிகவும் வலிமை பொருந்திய நபராகத் திகழ்ந்தார். அவர் தான் ஒசாமா பின் லேடனை மறைவிடத்தில் பதுங்கவைத்து தேவையான உதவிகளை வழங்கியுள்ளார்-என்றார்.

ஒசாமா பின்லேடன் பதுங்கியிருந்த வீடு, ஷா உத்தரவின் பேரில் கட்டப்பட்டது என்றும் பட் குற்றம் சாட்டினார். ஆனால் இத்தகைய குற்றச்சாட்டுகளை பிரிகேடியர் ஷா மறுத்துள்ளார்.

உலகில் எந்தப் பகுதியில் உள்ள பொறுப்பான பதவியிலிருந்து ஓய்வு பெற்ற எவருமே இத்தகைய குற்றச்சாட்டுகளை ஏற்கவேமாட்டார்கள்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில் இதுவரை உபயோகமான துப்பு எதுவும் கிடைக்கவில்லை. அவருக்கு தான் உதவி செய்திருந்தால் அந்தத் தகவல் வெளியாகாமலா இருந்திருக்கும். சர்வதேச ரீதியில் ஒரு நபரைத் தேடிக் கொண்டிருப்பது தெரிய வந்த நிலையில் அவருக்கு உதவி செய்ததற்கான ஆதாரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொல்லப்பட்ட பிறகு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி ஆஸ்திரேலியாவில் குடியேறி விட்டார் ஷா.

பயங்கரவாதிகளுடன் சேர்ந்து தன்னைக் கொல்ல ஷா சதி செய்வதாக பூட்டோ குற்றம் சாட்டியிருந்தார். அவர் எழுதியிருந்த கடிதத்தில் இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

# இறுதிச்சடங்கில் நடந்த அவலம் துப்பாக்கிச்சூட்டில் 52 பேர் சாவு



அபுஜா, ஜூலை 11

நைஜீரியாவில் கொல்லப்பட்ட 63 பேரின் இறுதிச் சடங்கில், மர்ம கும்பல் புகுந்து சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் மேலும் 52 பேர் உயிரிழந்தனர். இதனால் பதற்றம் அதிகரித்துள்ளது. நைஜீரியாவில் புலானி பழங்குடியினருக்கும் (முஸ்லிம்கள்) பெரோம்ஸ் பழங்குடி யினருக்கும் (கிறிஸ்தவர்கள்) இடையில் தொடர்ந்து இன மோதல் ஏற்பட்டு வருகிறது. மத்திய நைஜீரியாவில் உள்ள கர்குருக் கிராமத்துக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை புகுந்த புலானி பழங்குடியினர், சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 63 பேர் உயிரிழந்தனர். அவர்களுடைய இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அப்போது மீண்டும் புகுந்த கும்பல், இறுதிச் சடங்கில் பங்கேற்றவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது. மேலும் மட்சே கிராமத்தில் உள்ள மதபோதகர் வீட்டைத் தீ வைத்து எரித்தனர். அங்கு 50 பேரின் கருகிய உடல்கள் கிடந்தன. செனட்டர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் எப்படிக் கொல்லப்பட்டனர் என்று தெரியவில்லை.

இதுகுறித்து விசாரணை நடக்கிறது என்று உள்ளூர் நிர்வாகத் தலைவர் இமானுவேல் லோமங் தெரிவித்தார். இந்தத் தாக்குதலைக் கண்டித்து ஜோஸ் நகர் - அபுஜா செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் இளைஞர்கள் மறியலில் ஈடுபட்டனர். மேலும் அசம்பா விதம் நடப்பதைத் தடுக்க பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் நைஜீரியாவில் இன மோதல் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

# இந்தியச் சிறைகளில் 428 பாகிஸ்தானியர்

இஸ்லாமாபாத், ஜூலை 11

இந்தியாவில் உள்ள சிறைகளில் பாகிஸ்தானைச் சேர்ந்த 81 மீனவர்கள் உட்பட 428 பேர் அடைக்கப்பட்டுள்ளனர் என்று பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நாடாளுமன்றமான தேசிய பொதுக் கூட்டம் நடந்து வருகிறது.

இந்தக்கூட்டத்தின் போது பாகிஸ்தான் வெளிவிவகாரத்துறை இணை அமைச்சர் மாலிக் அகமது கான் தெரிவித்ததாவது:-

இந்தியா-பாகிஸ்தான் இடையே ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் இரு முறை இருநாட்டு கைதிகள் குறித்த விவரங்கள் வெளியிடப்படும். அந்த வகையில் இந்திய சிறைகளில் பாகிஸ்தானைச் சேர்ந்த 428 பேர் உள்ளனர். இவர்களில் 81 பேர் மீனவர்கள் ஆவர்.

மேலும் 18 பேர் தங்களது தண்டனைக் காலத்தை முடித்து விட்டு விடுதலையாகும் நிலையில் உள்ளனர்.

தற்போது இந்தியா-பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலர்கள் மட்டத்திலான பேச்சு நடைபெற்று வருகிறது. இதில் தண்டனைகாலம் முடிந்த பாகிஸ்தான் கைதிகள் குறித்த விவரங்கள் கேட்கப்பட்டுள்ளது. அவர்கள் முன்னரே விடுதலையாக வாய்ப்புள்ளது -என்றார்.

# மாபெரும் சரிவை எதிர் நோக்கி அமெரிக்கப் பொருளாதாரம்

## நிபுணர்கள் எச்சரிக்கை

அமெரிக்கப் பொருளாதாரம் மாபெரும் சரிவைச் சந்திக்க உள்ளது, அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்று அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக யூரோ பசிபிக் கேபிடல் நிதி ஆலோசனை நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியும், அமெரிக்க நிதித்துறை நிபுணருமான பீட்டர் ஸ்சீஃப் தெரிவித்ததாவது:-

அமெரிக்க பங்குச் சந்தையில் ஏற்பட இருக்கும் மிகப்பெரிய சரிவை எதிர்கொள்ள அமெரிக்க முதலீட்டாளர்கள் தயாராக இருக்க வேண்டும்.

இது 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சரிவைவிட மோசமானதாக இருக்கும். இனிமேல்தான் மிகக் கஷ்டமான பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க இருக்கிறோம். அமெரிக்காவில் வட்டி வீதம் மிகக் குறைவாக இருப்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே வட்டி வீதத்தை உயர்த்துவதன் மூலம் அதிக நெருக்கடி நிலையில் இருந்து மிகச் சிறியளவில் மீள முடியும்.

பொருளாதார வீழ்ச்சியின் உச்சம் எப்படி இருக்கும் என்பதை இனிமேல் தான் உணர இருக்கிறோம். வங்கிகள் வீழ்ச்சியடைவதையும் தடுக்க முடியாது.

நிலைமையைச் சமாளிக்க அரசு அதிக அளவு நாணயங்களை அச்சிட் டாலும் பிரச்சினை எளிதில் தீர்ந்து விடாது. பொருளாதாரம் உச்சத்தில் இருந்த போது அதனை மகிழ்ச்சியாக அனுபவித்தோம். இப்போது வீழ்ச்சி நிலை ஏற்படும்போது அதனையும் கஷ்டப்பட்டு சமாளித்துத்தான் ஆக வேண்டும்.

பொருளாதார வீழ்ச்சி காலகட்டத்தில் ஒவ்வொரு தனிநபரும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டி வரும். வட்டி வீத உயர்வு உள்ளிட்ட கசப்பு மருந்தை அனைவரும் சாப்பிடத்தான் வேண்டும்-என்றார்.


## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை. தொ.பே : 077 8996085

(20259)(6-7-8)



## மரண அறிவித்தல்



திருமதி கனகரட்ணம் தவேஸ்வரி

யாழ்ப்பாணம் - கச்சேரியடியை பிறப்பிடமாகவும், ஜேர்மனி, பிராங் பேட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரட்ணம் தவேஸ்வரி கடந்த (08.07.2012) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் கனகரட்ணத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சரஸ்வதி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், வரதராஜன், காலஞ்சென்ற பரதராஜன் மற்றும் மாலினி, காலஞ்சென்ற இரவீந்திரராஜன் மற்றும் சாந்தகுவேந்தினி, பிரபாகரன் ஆகியோரின் தாயும், சுலோஜனா, ஸ்ரீதரன், சந்திரமோகன், வாசுகி ஆகியோரின் மாமியும், வித்தியா, வினோத், லக்ஸ்மன், லக்ஷாயினி, பிருந்தன், அபிஷன், பிரகாஷன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற கணேசபிள்ளை மற்றும் சந்திரசேகரம் காலஞ்சென்ற வேதநாயகம் மற்றும் சீவரட்ணம், தங்கலட்சுமி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2012) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொ.பே. + 4915 2116 10005

(16910) (45.6.9)



## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், 3 ஆம் குறுக்குத்தெருவில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 0778737465

(20295) (2-6)



## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N. குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா ? வெளிநாடு செல்லத்தடையா ?, மன உளைச்சலா ? எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)

(PEOPLE INN)

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 072 6816681, 0726816691

(19603)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 * 07 * 1938

மறைவு 24 * 06 * 2011

திதி: அட்டமி

அமரர் முருகையா தவமணி

அன்புள்ள அம்மாவே!
கண் இமை போன்ற காவலரே!
எங்கள் இதயங்கள் அழும் ஓசை
உறங்கிய உங்கள்
செவிகளுக்கு கேட்டிடுதே!

கடந்த 24.06.2011 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை. 11.07. 2012 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயன்னா வீதி, சுன்னாகம்.

குடும்பத்தினர் த.யோகராசா

(2029)(5-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(23)

அமெரிக்க இந்தியர்கள் கடல் அமைதியாக உள்ளபோதும், அலைகளும் காற்றும் சாதகமாக உள்ள போதும் கப்பலைச் சேர வேண்டிய துறைமுகத்திற்கு நேராக ஓட்டிச் செல்வார்கள். சூறைக்காற்று வீசும் போதும் பனி மூடி உள்ள போதும் சமாளித்துக்கொண்டு தங்களது வழியைப் பின்பற்றிச் செல்வார்கள். அவர்கள் சேரவேண்டிய துறைமுகத்தை மட்டும் மனதில் நிறுத்திக்கொண்டு கப்பலைக் கடலில் நேர்வழியில் ஓட்டிச் செல்வார்கள். பருவநிலை எப்படி இருந்தாலும், அல்லது எந்தவித தடைகளைத் தாண்டிச் செல்லவேண்டி இருந்தாலும், அவர்கள் துறைமுகத்தில் சேருவதை சில மணி நேரத்துக்கு முன்னமே கணித்துவிட முடியும். பாஸ்டனுக்கு செல்ல வேண்டிய கப்பல் நியூயோர்க்கைச் சென்றடையாது.

இளைஞர்கள் ஒரு வெற்றிதரும் நோக்கத்துக்கு தனிப்பட்ட மன ஒருமைப்பாடுடனும், வேலை அல்லது தொழிலின் மீது கண்மூடித்தனமான ஒரு பிடிப்புடனும், தங்களை அர்ப்பணித்துக்கொள்ளக்கூடும். அது மற்ற எந்தத் தொழிலும் இதைவிட நலமானதாக இருக்கக்கூடும் என்பதைத் தற்காலிகமாக மறக்கடித்து விடும். நோக்கம் இல்லாதவர்கள், சிரத்தையற்றவர்கள், திறமையற்றவர்கள், அரைமன துடையவர்கள் ஆகியோரே வாழ்வில் தோல்வி காண்பவராவர். அவர்களது வேலை உறுதியான நோக்கத்தின் அடிப்படையில் செய்யப்படுவதில்லை. அதில் முயற்சிகளை ஒருங்கிணைத் துக்கொள்ளும் அறிகுறி தென்படுவதில்லை. அது அவர்களது வாழ்வுக்கு வழிகாட்டுதலையும் வாழ்வின் அர்த்தத்தையும் அளிப்பதில்லை. அனைத்தையும் இணைத்துக்கொள்ளும் நோக்கமுடைய ஒருவன் நமது பாராட்டைப் பெறுகிறான்; அவன் புரியும் ஒவ்வொரு செயலிலும் ஒழுக்கத்தின் மேன்மை உள்ளது; ஏனெனில், அதில்-அவனது செல்வாக்கின் கீழ் உள்ள அனைவரிடத்திலும் உருவாக்கக்கூடிய ஒரு லட்சியம், வழிகாட்டுதல், தெளிவு ஆகியன உள்ளன.

**ஒரு நிபுணராக மாறுங்கள்**

''வெற்றியும் புகழும் பெறுவதற்கு, நீங்கள் ஒரு தனிப்பட்ட சிறப்புப் பிரிவில் திறமை பெற்று, அதைப் பின்பற்றிச் செயல்பட வேண்டும்'' என்பதே ஜனாதிபதி ஹேயஸ்(**Hayes**) ஒஹியோ தொகுதி சட்டசபை அங்கத்தினர் மேஜர் வில்லியம் மெக்கன்லேவிற்கு கூறிய அறிவுரை ஆகும். ஜனாதிபதி அந்தச் சட்டசபை அங்கத்தினரிடம் சொன்னார், ''சட்டசபையில் கொண்டுவரப்படும் ஒவ்வொரு பிரேரணையின் மீது அல்லது அறிமுகப்படுத்தப்படும் ஒவ்வொரு மசோதாவின் மீது நீங்கள் உரையாற்றக்கூடாது. ஒரு குறிப்பிட்ட விடயத்தைப் பற்றிப் பேசுவதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். ஒரு திறமைசாலியாக அல்லது நிபுணராக மாறுங்கள். சட்டத்தின் ஏதாவது ஒரு பிரிவை எடுத்துக்கொண்டு, அதை விவரமாகக் கற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் சுங்கவரி விதிப்புப் பிரிவை எடுத்துக் கொள்ளலாமே. அது வருங்காலத்திலும் வரையறுத்து முடிவுசெய்ய முடியாத விடயம். அதில் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளமாக உள்ளன.''

இந்தச் சொற்கள் ஒஹியோ சட்டசபை அங்கத்தினரின் காதில் ஒலித்துக் கொண்டிருந்ததால், அவர் சுங்கவரி விதிகளைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். வெகு விரைவில், அந்தப் பிரிவின் முதன்மை வல்லுனர்களில் ஒருவராக மாறினார். அவர் தயாரித்த சுங்கவரி மசோதா சட்டசபையில் அங்கீகரிக்கப்பட்ட நேரம், அவரது அரசியல் வாழ்வின் மிக உயர்ந்த நேரமாக மாறியது.

ஓர் இலட்சியத்துக்காக தன்னையே முழுமையாக அர்ப்பணிக் கிறவன் ஏதாவது ஒன்றை உறுதியாகச் சாதித்து விடுவான். அவனுக்குத் திறமையும் பொது அறிவும் இருக்குமெனில், அவன் மிகச் சிறந்த வெற்றி பெறுவான்.

வாழ்க்கை நடத்தை முறையில், சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ளுதல் மிகவும் அத்தியாவசியமானதென நான் சொல்லியது உண்மையேயாகும். அதுபோல நீங்கள் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும், ''எல்லாம் அங்கே உள்ளன'' என்ற கதேயின் கூற்றும் உண்மையானதாகும். நீங்கள் அதற்காக சிந்திக்க வேண்டும். அதற்காக திட்டமிட வேண்டும்; அதற்காக வேலை செய்ய வேண்டும்; அதற்காக வாழ வேண்டும்-உங்கள் மனம், திறமை, பலம், உயிர் ஆகியவற்றை அதில் ஈடுபடச் செய்யுங்கள். வெற்றி உங்களுக்கு மகுடத்தைச் சூட்டும். இன்றைய வெற்றி வீரர்கள் ஒரு வல்லமை பெறும் எண்ணம், மற்றும் ஓர் ஆழ்ந்த நோக்கம் உடையவர்கள்.

இதை விளக்கிட ஜான்ஸ் ஹாப்கின்ஸின் வாழ்க்கையைப் பற்றிக் கூறுகிறேன். அவன் செல்வத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தைக் கடவுளிடமிருந்து கட்டளை யாகப் பெற்றதாக அறிவித்தான். மேலும், அவனது பணப்பெட்டிகளில் கொட்டும் பொன் அருவி, அவனிடம் கடன் வாங்க அல்லது பிச்சை எடுக்க வரும் நூற்றுக்கணக்கானவர் களுக்குச் சொந்தமானது இல்லை எனவும் அறிவித்தான். அவர்கள் அவனை ஒரு கிழட்டுக் கருமி, நீசன், கஞ்சன் என அழைத்தனர். ஆனால், அவை அனைத்தும் அவனுக்கு ஒன்றுதான். அவன் பல வருடங்களுக்கு பல மில்லியன்களைச் சேர்த்து வைக்கும் பெரும் நோக்கத்துடன் செயற்பட்டான்; அவன் சேர்த்து வைத்ததை எல்லாம் தாராளமாகத் தானம் செய்தான்- ஒரு மருத்துவ மனைக்கு நான்கு மில்லியன் டாலர்கள், மூன்று மில்லியன் டாலர்கள் ஒரு சிறந்த பல்கலைக்கழகத்துக்கும், கடைசியாக இந்த நிறுவனங்களுக்கும் மேலும் இரண்டு மில்லியன் டாலர்கள் கொடுத்தான்.

-ஒரிசன் ஸ்வெட் மார்டன்- (தொடரும்)

# எமது பாடசாலைகளை விருத்தியில் நாமே அக்கறை காட்டவேண்டும்

## ஆறு. திருமுருகன் உரை

பல ஏழை மாணவர்களின் வாழ்வை உயர்த்தி வைத்தது இந்தக் கல்லூரி என்றால் மிகையாகாது. பல புகழ்பூத்த கல்விமான்களையும், அறிஞர்களையும் உருவாக்கிய கல்லூரியின் பணி மகத்தானது.

அளவெட்டி,ஜூலை 11

எமது பாடசாலைகளை அரசாங்கம் அபிவிருத்தி செய்யும் என்று எதிர்பார்க்காது நாமே இதில் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும்.

கோயில்களைப் போல் பாடசாலைகளையும் பக்தியுடன் பராமரிக்க வேண்டும்.

இவ்வாறு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

இணுவில் மத்திய கல்லூரியின் பரிசளிப்புவிழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றும் போது அவர் தெரிவித்ததாவது:-

பல ஏழை மாணவர்களின் வாழ்வை உயர்த்தி வைத்தது இந்தக் கல்லூரி என்றால் மிகையாகாது. பல புகழ்பூத்த கல்விமான்களையும், அறிஞர்களையும் உருவாக்கிய கல்லூரியின் பணி மகத்தானது.

இந்தக் கல்லூரியால் வளர்க்கப்பட்டவர்கள் கல்வியாலும், செல்வத்தாலும் உயர்ந்து நிற்கிறார்கள்.

கல்லூரியின் பரிசளிப்பு விழாவுக்கு கனடா திருவூர் ஒன்றியம் பல லட்சம் ரூபாவை நிரந்தர வைப்பிலிட்டிருப்பது பெருமைதரும் செய்தியாகும். இந்தக் கல்லூரி இசை, நடன, நாடகத் துறையில் தேசியமட்டத்தில் வெற்றி பெற்றிருக்கிறது. இந்த வெற்றிக்கு காரணமான அதிபர், ஆசிரியர், மாணவர்களின் விடாமுயற்சி பாராட்டுக்குரியது.

இன்று இந்தக் கல்லூரியில் பரிசளிப்பு விழாவை நடத்தக் கூடிய ஒரு நல்ல மண்டபம் இல்லாதது கவலைக்குரியதாகும். இதற்கு பழைய மாணவர்கள் ஒன்றுபட்டு, விரைவில் ஒரு மண்டபத்தை உருவாக்கி பாடசாலைக்குக் கொடுக்க வேண்டும்.

அரசை எதிர்பார்ப்பதை விடுத்து கோயில்களை நாமே பராமரிப்பது போல் எங்கள் பாடசாலைகளையும் உரிமையோடு நாம் கட்டிக்காக்க வேண்டும்- என்றார்.

கல்லூரி அதிபர் எஸ்.சதானந்தன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-36)



சிறுவர் சேமிப்புக் கணக்குகளை மேம்படுத்துவதற்காக, வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் அண்மையில் சங்கானை மக்கள் வங்கியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, இளைப்பாறிய தேசிய இளைஞர் மன்றப் பணிப்பாளர் தி.சிவதட்சணாமூர்த்தி உரையாற்றுகிறார். வங்கி முகாமையாளர் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர். (எ-29)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 11

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதில் தலைவராக செ.செல்வராசா செயலாளராக ம.துவாரகன், உபதலைவர்களாக த.நிஷாந்தினி, செ.அனுஷா, உப செயலாளராக க.ரதீஷன், பொருளாளராக ச.செல்வராஜா, போஷகராக அதிபர் பி.சந்திரபாபு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிர்வாக உறுப்பினர்களாக ந.சந்திரகுமார், க.பேராணந்தம், து.விஜயகுமார், எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ)

# ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

காரைநகர், ஜூலை 11

காரைநகர் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**தரம்-7**

முதலாம் இடம்- கோபிகா யோகேஸ்வரன் (யாழ்ரன் கல்லூரி),இரண்டாம் இடம்- சஞ்சியா தவராசா (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம்- பிரியங்கா தங்கேஸ்வரன் (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.)

**தரம்-8**

முதலாம் இடம்- பிரியா கிருபாணந்தராசா (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- மனோசாலினி சோமசுந்தரம் (யாழ்ரன் கல்லூரி), மூன்றாம் இடம், மிக்னானபதி சரத்குமார் (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.)

**தரம்-9**

முதலாம் இடம்- விசாலினி [illegible] (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- கவிதா பாலேந்திரன் (யாழ்ரன் கல்லூரி), மூன்றாம் இடம், தியாகராஜா சயந்தன் (யாழ்ரன் கல்லூரி)

**தரம்-10**

முதலாம் இடம்- சோபனா கிருபானந்தராசா (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- மனோகரி சுப்பிரமணியம் (யாழ்ரன் கல்லூரி),மூன்றாம் இடம் - கஜவள்ளி சோமசுந்தரம் (யாழ்ரன் கல்லூரி)

**தரம்-11**

முதலாம் இடம்- சஜிதா பாலசிங்கம் (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.) இரண்டாம் இடம்- கஜவதனி லோகராஜன் (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம், திருலோகநாதன் செந்துரன் (யாழ்ரன் கல்லூரி)

**தரம்-12**

முதலாம் இடம்- குயிலினி பரனநாதன் (கலாநிதி.எ. தியாகர்ஜா ம.ம.வி.),இரண்டாம் இடம்- கிருசாந்தி தியாகராஜா (யாழ்ரன் கல்லூரி),மூன்றாம் இடம்- சுவஸ்திகா மகேந்திரம் (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.)

**தரம்-13**

முதலாம் இடம்- சிவனிரஞ்சம் கிருஸ்ணமூர்த்தி (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.),இரண்டாம் இடம்- கிருசா இராசநாயகம் (யாழ்ரன் கல்லூரி)

**தரம்-6**

முதலாம் இடம்- சிவரஜனி பாலேந்திரா (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.),இரண்டாம் இடம்- மிதுசாலினி உதயகுமார் (கலாநிதி. எ. தியாகராஜா ம.ம.வி.) மூன்றாம் இடம்- விவேகா அற்புதராஜா (யாழ்ரன் கல்லூரி)

**தரம்-7**

முதலாம் இடம்- கம்சிகா தேவராசா (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.),இரண்டாம் இடம், டிலக்சனா கணேசானந்தன் (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம்- ராஜரட்ணம் தயாரூபன் (யாழ்ரன் கல்லூரி)

**தரம் -8**

முதலாம் இடம்- குலமதி பாலேந்திரா (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- சுரேஸ்குமார் கஜந்தன் (யாழ்ரன் கல்லூரி), மூன்றாம் இடம்- உலககுருநாதன் குகதர்சன் (கலாநிதி.எ. தியாகராஜா ம.ம.வி.)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## தமிழர்களின் கைகளாலேயே அவர்கள் கண்ணைக் குத்துதல்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகளாக இருந்து அரசின் புனர்வாழ்வு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்து விடுவிக்கப்பட்டவர்கள், இனிவரும் காலத்தில் தேர்தல்களில் போட்டியிட முடியும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ராஜதந்திரிகளுக்கான வதிவிடச் செயலமர்வு ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான பரப்புரைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள புலம்பெயர் தமிழர்களின் நடவடிக்கையை முறியடிப்பதற்கும் உலக அரங்கில் சரிந்துவரும் இலங்கையின் மதிப்பை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்கும் என்ன செய்ய வேண்டும் என்பதை ராஜதந்திரிகளுக்கு விளக்குவதற்கான ஒரு கூட்டத்திலேயே கோத்தபாய இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இது மிக முக்கியமானது.

முன்னாள் போராளிகள் இலங்கையின் தேர்தல்களில் போட்டியிட முடியும், மாகாண மற்றும் தேசிய அரசியலில் மட்டுமல்லாது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களங்களிலும் அவர்கள் களமிறங்கக்கூடும் என்று கோத்தபாய தெரிவித்திருப்பது அரசின் எதிர்காலத் திட்டமிடல்களை எதிர்வுகூறும் கருத்து என்று எடுத்துக் கொள்ளலாம்.

விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களைத் தொடர்ந்தும் சந்தேகக் கண்கொண்டே நோக்கிவரும் அரசு, அவர்களில் பலரின் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் கண்காணித்துவரும் அரசு, இலங்கைக்குள் மீண்டும் பிரச்சினைகளை உண்டுபண்ண வெளிநாடுகளில் எஞ்சியிருக்கும் புலிகள் முயற்சிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டும் அரசு எப்படி முன்னாள் போராளிகளை தேர்தல்களில் போட்டியிட அனுமதிக்கப் போகிறது என்ற நியாயமான கேள்வி எழுகிறது.

இதற்கான ஒரே பதிலாக, அந்தப் போராளிகள் அனைவரும் அரசின் சார்பில், சுதந்திரக் கட்சியின் சார்பில் இனிவரும் காலங்களில் தேர்தல்களில் போட்டியிட வைக்கப்படுவார்கள் என்பதையே எடுத்துக் கொள்ளலாம்.

போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டபோதும், தனது வெளிப்படையான சிங்களத் தேசியவாதச் செயற்பாடுகளால் தமிழ் மக்களின் மனங்களைக் கவர முடியாத அரசு மறைமுகத் திட்டங்களை நாடத் தொடங்கியிருக்கிறது என்பதையே கோத்தபாயவின் பேச்சு சுட்டிக்காட்டுகிறது.

அதாவது, தனது சொந்த நலன்களுக்காகப் புலிவாலைப் பிடிக்கவும் மஹிந்த சகோதரர்கள் தயாராகிவிட்டார்கள் என்பதே அதன் அர்த்தம்.

முன்னாள் போராளிகள் திறந்தவெளிச் சிறையில் அடைக்கப்பட்டவர்களாக சமூகத்தில் நடமாடவிடப்பட்டுள்ள நிலையில் அரசை எதிர்த்து அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டால் கதி என்ன ஆகும் என்பது சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. அதேநேரத்தில் அரசுடன் சேர்ந்து போட்டியிடக்கூடிய முன்னாள் புலிகளின் நிலைமை எப்படி இருக்கும் என்பதையும் ''ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயகத்துக்குத் திரும்பிவிட்டவர்கள்'' என்போரின் நிலைமையைப் பார்க்கும்போதே தெரிகிறது.

இத்தகைய நிலையில் தமிழர்களின் கைகளைக் கொண்டே தமிழர்களின் கண்களைக் குத்துவதற்கு மீண்டும் கச்சிதமான திட்டத்துடன் அரசு தயாராகி வருவதாகவே தோன்றுகிறது.

# தனியாய் விழு! தலைவனாய்

■ செந்தூரி




ஜனநாயகத்தின் ஏனைய மூன்று தூண்களையும் சர்வாதிகாரம் ''பருத்த முருங்கினால்'' பிரதியீடு செய்கின்ற போது, தனித்த மிடுக்குடன் தாங்கிப் போற்றிய பெருமை உலக வரலாறுகளில், ஊடகங்களுக்கேயுண்டு. ''செய்தி சொல்லிகளின்'' செவிகள் கேட்பவற்றையும், கண்கள் காண்பவற்றையும் ஆழ்ந்தறிந்து மெய்யுணர்ந்து உண்மை கெடாமல் உரைப்பதே, ஊடக தர்மம்! உலக சாசனங்களின் எல்லா உரிமையாவணங்களையும் கெடுத்து வைத்துள்ள கெட்ட கூட்டங்களினால் முப்பொழுதும் சூழப்பட்ட இந்தத் தீவில் தகவல் அறியும் உரிமைகளுக்கு மட்டும் மாலை மரியாதையா கிடைக்கும்? எப்பொழுதும் போலவே ஒடுக்கப்பட்டவனின் கண்ணீரை, வீழ்ந்து கிடப்பவனின் மெய்நீரை, சாகத்துடிப்பவனின் செந்நீரை அடுத்தவனிடம் சேராமல் தடுத்தொடுக்கும் செய்கைகளுக்கு பஞ்சமா பாதங்களையும் வழித்துணையாகச் சேர்த்து இருட்டில் நடக்கத் தயங்காத கோழைகளை ஈழம் ஏலவே கண்டுள்ளது.

அச்சூடகங்களின் இரும்பியந்திரங்களை அடித்து நொறுக்குவதில் தொடங்கி, பேனாக்காரர்களின் வீடு புகுந்து உயிர் பறிப்பது வரை, பிணந்தின்னும் சாஸ்திரங்களை தன் பின்னால் திரிபவர்களிடம் போதித்துப் பெருமை கொண்டது பேயரசு. விற்பனைக்கான பிரதிகளை தீயிடுவது, பத்திரிகை அலுவலகங்களினுள் குண்டெறிவது, வானொலி ஒலிபரப்புக் கோபுரங்களை விமானத் தாக்குதல்களால் நிர்மூலமாக்குவது, கேபிள் ரீ.விகளில் குறிப்பிட்ட அலைவரிசைகளை நிறுத்தி வைப்பது என பல்லூடகங்கள் மீதிலும், தன் ஆலகாலப் பற்களை ஆழ்ப்பதித்த ஐக்கிய ஜனநாயக ஷோசலிசக் குடியரசின் வெற்றிப்பக்கங்கள் எண்ணிலடங்காதவை. அனைத்திலும் அற்பமாக, தனக்கு வேண்டாத உண்மைகளை வெளிவிடும் மூலங்கள் என்று இனங்கண்டு கொண்ட எழுதுமைப் போராளிகளை, அவர்களது குடும்பப் பின்னணிகளையோ, இனச்சூழலையோ, வாழ்வாதாரத்தையோ சற்றும் கணக்கில் கொள்ளாது, உயிர் பறிக்கும் உச்சக் கொடூரத்தையும் சலசலப்புகளுக்கு அஞ்சாத பனங்காட்டு நரியின் குடும்பத் தைரியத்தின்படி கையிலெடுக்கத் தவறவில்லை.

ஈழத் தமிழனது தேசவிடுதலைப் போராட்டம் உலகளாவியதாக உணர்த்தப்பட்டதில், தீவுக்கு வெளியேயான இயங்கு மையங்களைக் கொண்ட பல்லூடகங்களிடம் பெரிய கடமைப் பொறுப்பு கைவசமிருந்தது.

அன்றைய நாள்களின் பி.பி.ஸி, வெரித்தாஸ், ரி.பி.ஸி போன்றவைகளின் இரைச்சலுடன் கூடிய செய்திக்கணங்களை செவிமடுப்பதற்காக, கிளுவந்தடிகளில் கட்டிய கம்பி உணர்கொம்புகள், பெரும்பாலான வீடுகளில் மாறுவேடங்களில் மறைந்திருந்தன. 'புலிகளின் குரல்' ஒலிபரப்பினை வீதியில் ரோந்துபோன ஆமிக்காரனின் காதுகள் வரை கேட்கச் செய்தவர்களின் இரு செவித்துவாரங்களிலும் பேனாக்களை உட்செலுத்தி அடித்துச் செவிடாக்கியதான செய்திகளை ''கர்ணபரம்பரைக் கதைகளாக'' அறிந்து உடல் கூசியிருக்கின்றது. கூடவே கூடத்து வானொலியின் நெளிந்த மின்கலங்கள் திடீரென தானாகவும் போயிருக்கின்றன முன்னெச்சரிக்கையுடன்.

பாதுகாப்பு நிதிக்கு-அரச படைகளின் போராயுத உதவிகளுக்காக பரிசுத் தொகையை சமர்ப்பிப்பதாக கூறிய 'அர்ஜூன ரணதுங்க' தலைமையிலான இலங்கை அணியின் வெற்றித் தருணங்களை, தென்மராட்சியில் வைத்து, 'டைனமோ'வை சுற்றி சின்ன ரி.வியில் பார்த்துச் சிலாகித்திருக்கின்றோம். தலைமேலே விழும் குண்டுகளுக்கும், பாதிவழியில் உயிர் பறிக்கும் ஏவுகணைகளுக்கும் அனுசரணையாளர்கள் இவர்கள் என்று தெரிந்ததன் பின்னாலும் ஐந்து 'ஓவர்களுக்கு' ஒருமுறை ஆள்மாறி சைக்கிள் மிதித்து, இறுதிப் போட்டியில் எல்லைக்கோட்டைப் பந்து தொட்டபோது 'அப்படி' எழுந்திருக்க மாட்டேனோ என்னவோ, இப்படித் தோற்போமென்று தெரிந்திருந்தால்? ஆனாலும், அதேபோன்றதொரு இறுதிப் போட்டியில் இலங்கை அணி போராடிக் கொண்டிருந்த 2007 ஆம் ஆண்டின் இரவுப் பொழுதொன்றிலும் வான்படைத் தமிழ் வீரர்கள், கொழும்பின் பெருந்திரைகளின் முன்னால் கூடியிருந்த ரசிக வெறியர்களை ஒட்டுமொத்த மின்னொளியையும் அணைத்து, அலறியோடச் செய்ததையும், அடி வயிற்றில் புளி கரைத்து அபிஷேகித்ததையும் காலம் செய்த ஊழிப் பழிவாங்கலாக ஆரவாரித்ததில் தப்பேதுமில்லை. ''வாழ்க்கை ஒரு வட்டம்டா'' என்று இளைய தளபதி சொன்னதைப் போல, வாழ்க்கை மட்டுமல்ல, 'வளையல்', 'வட்டிலப்பம்', 'வடை' போன்றவைகளோடு வரலாறு கூட வட்டந்தான் என்பதை நெஞ்சுயர்த்தி நினைவூன்றிக் கொள்வோமாக. 'குன்றுகளிலேறி வென்று நின்றவர்கள் குனிந்து கவிழ்வதும், குறிகளின் கீழாய் குழைந்து தோற்றவர்கள் நிமிர்ந்து எழுவதும்' வெறுமனே சினிமாக் காட்சிகள் மட்டுமல்லாது காலப்பெருஞ்சில்லின் நிஜந்தொடும் புள்ளிகளே.

தொழில்நுட்ப யுகத்தின் தொகையான வளர்ச்சி மாற்றங்களினால் 'குறுகத்தறித்த' உலகினுள், இன அழிப்பின் இறுதி அறுவடை நாள்களின் விளைபலனை, பேரினவாதிகள் தமக்குச் சாதகமாக்க தலைமேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். வெறிதாகிப் போன செம்மொழித் தமிழினத்தின் ஆயுதபலத்தின் மேல் தமக்கிருந்த வலிதான காழ்ப்புணர்ச்சியை, நடைபிணங்களாக ஓமந்தை முற்றத்தில் அபயம் கேட்டு ஒதுங்கிய அப்பாவிகளிடம் ஏவி விட்டு கைகொட்டிச் சிரித்தது பேரினவாதம்.

வணங்காத வன்னி மண்ணின் புகைசூழ் பொழுதுகளில் சீருடைப் பேய்கள் ஆடிக்களித்த வெற்றுடல் வெறி நாடகங்கள் உலகின் அகலத் திரைகளில் இனபேதமில்லாது எல்லாக் கண்களிலும் நீர் வழிந்தோட வைக்கும் சாட்சியாகிப் போகும் என்பதைச் சற்றும் யூகிக்காத கெட்டிக்காரர்களின் 'மனிதாபிமான மீட்புப் போர்' குறித்த புளுகுகள், இலங்கையை முழு உலகும் எட்டிப்பார்க்கும் கேவலத்தினுள் வீழ்த்தின.

போர்க்குற்ற காணொலிகளும், இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றடையும் சாட்சிகளும், புகைப்படங்களும்தான், உலகரங்கில் இலங்கை பற்றிய இழுக்காறு அணையுடைத்துப் பாயக் காரணமென்று பலமாக நம்பிய, நம்புகின்ற ஆட்சியாளர்கள் இன்று வரைக்கும் தம் ஆக்கிரமிப்புக் கொள்கையினால் அவலங்களுக்குள்ளாகிப்போன தேசிய இனத்தை ஆசுவாசப்படுத்தவோ, தற்காலிக தீர்வுகளையாவது முன்வைக்கவோ பேச்சளவில்கூட, முன்வராமலிருப்பது யாராலும் கேள்விக்குட்படுத்த முடியாத இன்னுமொரு 'நிறைவேற்றதிகாரம்' என்று உறுதிபட நம்புகின்றார்கள்.

உலகத் தமிழர்களின் தோள்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட தேசிய விடுதலைப் போரின் 'தடையறத் தாக்கும்' தன்மை, பேரினவாதிகளின் தன்நம்பிக்கையில் தெரிந்தே விழுந்த பெருங்கல். அஞ்சலோட்டத் தடத்தில் கைமாறினாலும் வேகம் மாறாமல் பயணிக்கும் 'தனியரசு' என்கின்ற செவ்வர்ணக் கோலின் விரைவுக்கு எதிராக, எதையாவது தற்குறித்தனமாக முன்னெடுத்துத் தடுத்துவிட வேண்டும் என்கின்ற அழுக்காற்றை அழுந்தச் சுமக்கின்றார்கள் எம் எதிரிகள்.

உலகின் பல்தேசங்களிலும் தமது கோரிக்கையின் நியாயங் களை எடுத்தியம்பியபடி தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை



ஆதாரம் பிசகாமல் அடித்துச் சொல்லியபடி, தமக்கான எதிர்காலத் தேவையினை சட்டபூர்வமான போராட்டங்கள் மூலம் முரசறைந்தபடி 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்' வளரும் தீவுக்கு வெளியேயான ஈழத் தமிழரிடம் இருந்து இலங்கை வாசிகளை தொடர்பாடல் ரீதியில் தனிமைப்படுத்துவதன் மூலம், 'சிங்களத்தீர்வு' என்கின்ற மத்தியானக் கனவை வலுப்படுத்த முயலும், இலங்கையின் ஆட்சியாளர்கள் மீண்டும் மீண்டும் நிரூபிப்பது 'அவசரக்காரருக்கு புத்தி மத்திமம்' என்பதை மட்டுமே.

எகிப்திய மக்கள் போராட்டங்களின் போது தத்தமது அன்றாடக் கடமைகளையும் துறந்து வீதிகளே கதியென நிரவிக்கிடந்த மக்கள் கூட்டம், தமக்கான உலக அறைகூவலை வலுப்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ய் எழு!!

துவதற்காக இணையவழி ஊடகங்களை பெரிதும் பயன்படுத்தினர்.

மக்கள் சக்தி என்கின்ற மாபெரும் கிரட்சியினால் ஏறத்தாழ ஆட்சி கவிழும் நிலைக்கு வந்துவிட்ட தீவிரத்தினை தனது தேசத்தினரும் தவறான முன்னுதாரணமாக கையிலெடுத்து விடக்கூடாதென்கின்ற எச்சரிக்கை, சீனாவின் ஆட்சியாளர்களை பலமாக யோசிக்க வைத்தது. விளைவு 'எகிப்து' என்கின்ற சொல்லினை இணையத்தின் பயனீட்டுச் சொல்லாக பயன்படுத்த முடியாதபடி சீன இணையத்தளங்கள் அதிகாரபூர்வமாக முடக்கப்பட்டன. இதற்கான தொழில்நுட்ப சூட்சுமங்களுக்கும் எதிர்காலத்தில் இதேபோன்று தாம் விரும்பாதவற்றை மக்களும் பெற்றுவிடாதபடி தடுக்கும் மென்பொருள்களும் பெருமளவிலான பொருள் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டன.


அதே யுக்தியை தனது 'லேட்டஸ்ட்' நண்பனான சீனாவிடமிருந்து இறக்குமதி செய்த அடுத்த நொடியே இலங்கையில் வெகு சொற்பமாக மீதமிருந்த ஊடக சுதந்திரத்திற்கான கல்லறை மணியோசையும் எழுப்பப்பட்டது. சர்வதேச தமிழர்களினால் இயக்கப்படுகின்ற தமிழ் இணையத் தளங்களும், அரச எதிர்ப்பு கொள்கைகளையுடைய சிங்கள இணையத் தளங்களுமாக இணையச் செய்திகளை இலங்கை மக்களுக்கு விநியோகிப்பதை பரீட்சார்த்தமாக தடுப்பதில் வெற்றி கண்டதாக கொக்கரித்துக் கொண்டது அரச ஊடகத்துறை. 'நாளைய வரலாறாகும் இன்றைய செய்திகளை' நான்கு சுவர்களுக்குள் அடக்குவதன் மூலம், அடுத்து வரும் நாள்களில் தமது இனவாத நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தமிழின ஒடுக்கலுக்கான திட்டங்களை உராய்வின்றி முன்னகர்த்தவும் முன்னோடித்தது.

பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரைக்கென இணைய சமூகவலைத்தளங்களை பயன்படுத்தி பெருமளவான இளைஞர்களின் அபிமானத்தை வென்று ஆட்சியைப்



பிடித்தது போல தொழில்நுட்ப நுண்வளர்ச்சிகளை நன்நோக்கங்களையிட்டு பயன்படுத்தாமல் அரை நூற்றாண்டுக்கு மேலாக வெவ்வேறு ஆயுதங்களை பிரயோகித்தும் அடங்காத இனமொன்றின் வீழ்ச்சியை விரும்பியதாக மறைவெண்ணத்தில் பரிசீலிப்பதும், பயன்படுத்துவதும் சர்வதேச அரங்கில் சரிந்த தன் செல்வாக்கை நிமிர்த்தும் ஆழ் கிணற்றில் 'சாண் ஏற முழம் சறுக்கிய'தாகவே முடியும்.

தடுத்து விட்டோம்! முடக்கி விட்டோம்!! என்று வெற்றிக் குறிகளுடன் கொடுப்புக்குள் சிரித்து முடித்த மூன்றாம் நாள் முன்னிரவிலேயே, வேறொரு புதிய பயனீட்டுச் சொல் மூலம் சில தளங்கள் இலங்கைக்குள்ளான இணையத் திரைகளிலும் மெல்லத் துளிர்ந்திருந்தது, எம் நம்பிக்கைகளைப் போல. "நீங்கள் குகைகளில் கடிபட்டுக் கொண்டிருந்தபோதே, இஞ்ச கோயிலும் கோபுரமும் கட்டி கும்பாபிஷேகத்துக்காக சண்டையும் பிடிச்சவங்கள் நாங்கள்- எங்களுக்கேவா?" -தமிழேன்டா!!




பி.ஏ. அந்தோனிமார்ச்

# உலக சனத்தொகை அதிகரிக்கையில் தமிழரின் எண்ணிக்கை வீழ்கின்றது

இன்று உலக சனத்தொகை தினம் நாடுகள் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. மனிதன் என்று தோன்றினானோ அன்றிலிருந்து உலக சனத்தொகை அதிகரித்தே வந்துள்ளது. பின்நாள்களில் ஏற்பட்ட உலக யுத்தங்கள், ஜலப்பிரளயங்கள், சுனாமி, தொற்றுநோய்கள், வெள்ளங்கள் என்பவற்றால் பல லட்சக்கணக்கான மக்கள் அழிந்து போனாலும் சனத்தொகையின் ஏறுமுகம் ஒருபோதும் நின்றதில்லை.

இலங்கையைப் பொறுத்த வரையில் தொடர்ந்த இனக்கலவரங்கள், போர் இவற்றினால் பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் இறந்ததில் தமிழர் சனத்தொகை மட்டும் ஏறுமுகத்துக்குப் பதிலாக இறங்குமுகமாகவே மாறிவிட்டது. இருந்தபோதும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை இன்னமும் தொடர்கிறது.

1987 ஆம் ஆண்டு குடிசன கணக்கெடுப்பின்படி உலக சனத்தொகை, 500 மில்லியனையும் தாண்டியுள்ளது. அண்மைக் காலங்களில் உலக சனத்தொகையானது வேகமாக அதிகரித்து வருவதைக் காணலாம். ஆராய்ச்சியாளர்களின் கணிப்பின்படி 2050ஆம் ஆண்டில் உலக சனத்தொகை 900 மில்லியனையும்விட அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் கடந்த 30 வருடங்களுக்குப் பின்பு 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பின்படி இலங்கையின் குடிசனத் தொகை 20,277,597 ஆகும்.

இந்தத் தரவுகள் வழமையான வசிப்பிடங்களை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி 9 மாகாணங்களுக்குரிய 25 நிர்வாக மாவட்டங்களில், 331 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 14,022 கிராம சேவகர் பிரிவுகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. மொத்த சனத்தொகையில் 3,418 பேர் எந்தவிதமான வீடுகளும் அற்றவர்களாகி திறந்த வெளிகளில் வாழ்கிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகூடிய சனத்தொகை மேல் மாகாணத்தில் (5,837,294) காணப்படுகிறது. மொத்த சனத்தொகையில் அது 28.8 வீதமாகும். ஆகக் குறைந்த தொகை வடமாகாணத்தில் 1,060,023 ஆகும். அது 5.2 வீதம். கிழக்கு மாகாணம் 1,547,377 ஆகும். அது 7.6 வீதம்.

மாவட்ட அடிப்படையில் ஆகக்கூடிய சனத்தொகையை கொழும்பு மாவட்டம் (2,323,826) கொண்டுள்ளது. அது 11 வீதமாம். ஆகக் குறைந்த சனத்தொகை முல்லைத்தீவு மாவட்டம் 92,228 கொண்டுள்ளது. அது 5 வீதமாகும். இந்தக் கணக்கெடுப்பில் சனத்தொகை குறைந்த மாவட்டங்களாக வடமாகாணத்தில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா என்பன அறிவிக்கப்பட்டுள்ளன.

உலகில் நான்கில் ஒரு பங்கினரே இன்று சொந்த வீடுகளில் வாழ்கிறார்கள். ஏனையோர் வாடகை வீடுகளிலும், குடிசைகளிலும், சேரி வீடுகளிலும், பஸ் நிலையங்களிலும், தறப்பாள்களிலும், அகதி முகாம்களிலும், லயங்களிலும் வாழ்கிறார்கள்.

ஐக்கிய நாடுகளின் மனித குடியிருப்பு அமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிக்கையின்படி உலகத்தில் 6 கோடி மக்கள் வீடில்லாமல் வாழ்கிறார்கள். இவர்களுக்கு மிகவும் அவசரமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். இதற்கு அந்தந்த நாட்டு அரசுகள் தமது நாட்டு அரசமைப்பில் 'யாவருக்கும் வீடு' என்னும் செயல்திட்டத்தை சட்ட விதியில் வரையறை செய்து சகல மக்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க முன்வரவேண்டும்.

1978ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மனித குடியிருப்புகளுக்கான இந்த ஐக்கிய நாட்டு அமைப்பு இரண்டு முக்கிய விடயங்களை முன்னுரிமைப்படுத்தி செயற்பட்டு வருகின்றது. சகலருக்கும் முறையான இருப்பிட வசதி மற்றும் நிலையாக நிலைத்திருக்கக்கூடிய நகர அபிவிருத்தி என்பனவே அவை.

இந்த அமைப்பை நிர்வகிக்கும் 58 அங்கத்தவர்களைக் கொண்ட மனித குடியிருப்புக்கான ஆணைக்குழு, இரண்டு வருடத்துக்கு ஒரு தடவை கூடுகிறது. இந்த நிலையத்தில் 240 பேர் வேலை செய்கிறார்கள். இதற்கு மேலதிகமாக ஐ.நா. பொதுச் சபையின் முயற்சியினால் 1969 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் ஆரம்பிக்கப்பட்டு வளர்முக நாடுகளின் பொருளாதார மாற்றத்துக்கு உள்ளாகிவரும் நாடுகளுக்கும் சனத்தொகை விவகாரங்களில் உதவிகளை வழங்கி வருகிறது. இதுவும் ஒரு பெரிய சர்வதேச அமைப்பாகும்.

இனப்பெருக்க சௌக்கியம், குடும்பத்திட்ட சேவைகள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்கும், அபிவிருத்திக்கு வழிகோலக் கூடிய சனத்தொகைக் கொள்கைகளை வகுப்பதற்கும் இந்த நிதியம் உதவி செய்து வருகின்றது. அந்தந்த நாடுகளின் வேண்டுகோள்களுக்கு அமையவே இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. ஐ.நா. பொதுச் சபையின் உப-உறுப்பாண்மைகளில் ஒன்றாகவே இந்த நிதியம் செயல்படுகின்றது.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் ஆளுநர் சபையே இதனுடைய ஆளுநர்சபையாகவும் இயங்கிவருகின்றது. பல நாடுகளின் பண உதவிகள் மூலமாக இதற்கான நிதிகள் கிடைக்கப் பெறுகின்றன. ஒரு வருடத்தில் கிடைக்கும் நிதி 250 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இனப் பெருக்க சௌக்கியத் துறை, குடும்பத்திட்ட நடவடிக்கைகள், கர்ப்பிணித் தாய்மாரின் உடல் நலம், எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோய் எதிர்ப்பு நடவடிக்கைகள் என்பவற்றிற்கு மூன்றில் இரண்டு பங்கு பண உதவிகள் வழங்கப்படுகின்றன. சனத்தொகையும், அபிவிருத்தியும் சம்பந்தமான தகவல்களைப் பரப்புரை செய்வதற்கும் சனத்தொகைக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளை ஊக்குவிப்பதற்கும், சனத்தொகை நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரை முயற்சிகளுக்கும் எஞ்சிய பணத்தொகை செலவு செய்யப்படுகின்றது. இந்த அமைப்பில் 905 அலுவலர்கள் வேலை செய்கிறார்கள்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் மூன்று உள்ளன. அவை உணவு, உடை, உறையுள் என்பனவாகும். உணவு மனித உயிருக்கு ஆதாரமாக அமைகிறது. உடை உடலுக்கு ஆதாரமாக அமைகிறது. உறையுள்தான் இந்த உயிர் உடல் இரண்டுக்கும் ஆதாரமாக அமைகிறது.

சனத்தொகையின் அதிகரிப்பு இருப்பிடத் தேவைகளை அதிகரிக்கச் செய்கிறது. உலக நாடுகளில் பலர் இருப்பிடம் இல்லாது திறந்த வெளியில் பல்வேறு சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 120 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தண்ணீர் வசதியின்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பான இருப்பிடத்தையும் அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக விழிப்புணர்வை ஏற்படுத்தத்தான் சனத்தொகை தினம் கொண்டாடப்படுகிறது.

வன்னிப் பிராந்தியத்தில் கடந்த போரால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வீடுகளும், பொதுக் கட்டடங்களும் பாடசாலைகளும் அழிக்கப்பட்டுள்ளன. மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் கணிசமான அளவு வீடுகளும், பொதுக் கட்டடங்களும் அழிக்கப்பட்டுள்ளன. ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான மக்கள் முள்ளிவாய்க்கால் போரின் போது காணாமல் போய் விட்டார்கள் என அறிக்கைகள் கூறுகின்றன. பல்லாயிரக் கணக்கான பெண்கள் விதவைகளாக, ஊனமுற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

போரினால் ஒரு லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. இன்று வரை 16,000 வீடுகள் மட்டும் கட்டப்பட்டுள்ளன. மற்றவர்கள் அகதிகள் முகாம்களிலும், தற்காலிக கொட்டில்களிலும், தறப்பாள்களின் கீழும், தகரங்களின் கீழும், மரத்தின் கீழும் வாழ்கிறார்கள். இவர்களுக்குரிய மலசலகூட வசதிகள், தண்ணீர் வசதிகள் எதுவுமில்லை. சர்வதேசம் குடிமக்களை நினைவுகூரும் இன்றாவது இந்த மக்களுக்காகக் குரல்கொடுக்கக்கூடாதா?

இலங்கையில் 1948 ஆம் ஆண்டில் இருந்து தமிழ் சனத் தொகை குறைக்கப்பட்டு வருகின்றது. 10 லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையை உலக சனத்தொகை தினமான இன்றாவது தமிழ் மக்களின் குடியுரிமைகள், காணியுரிமைகள், கடல் உரிமைகளை பெற்றுத் தருமாறு அனைவரும் இணைந்து வலியுறுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடிமீதிருக்கும் மலைவாசி

பழநி! என்ன அருமையான தலம்! மலைச்சாதி மக்கள் மாதிரியே நீலமும் கறுப்பும் போர்வையாய்ப் போர்த்து நிற்கும் சித்தன் வாழ்வு. பலநூறு சித்தர்கள் பாதம் பட்டதால் அன்றும் இன்றும் பெருமையுடன் சித்தன் வாழ்வு எனப் பெயர் பெற்ற புண்ணிய பூமி. சித்தர் பெருந் தலைவர் போகர்,சித்தநாதன் என்ற பெயருடன் விளங்கிய பெருமை மிக்கது. தண்டம் தரித்தவனாய் ஒற்றைக் கோவணத்துடன் ஒரு கை இடுப்பில் ஊன்றி நிற்கும் தவராசனாய் தண்டபாணி தரிசனம் கொடுக்கும் தவபூமி. ஒன்றும் வேண்டாம் எனத் துறவுக் கோலத்தில் நிற்கும் தண்டபாணிக்குத்தான் உண்டியல் வருமானம் மிக அதிகம். பணக்கார சாமி,நமது தண்டபாணித் தெய்வம் !

அதிலும் ஓர் உண்மை இருக்கிறது!அது வேண்டும் இது வேண்டும் என்று பறக்கிறவனுக்கு எதுவும் கிடைப்பதில்லை. எல்லாமே இங்கு இருக்கிறது என்ற நிறைவு பெற்றவனிடம் எல்லாமே இருந்து விடுகிறது!எப்படி அமைப்பு பாருங்கள் இந்த தண்டபாணித் தெய்வ வடிவம் நவபாஷாணங்களைக் கட்டி போகரால் செய்யப்பட்டது என்பர். ஒன்பது விஷங்களை ஒழுங்குபடுத்திய மூலவருக்கான அபிஷேக தீர்த்தம்,பஞ்சாமிர்தம்,சந்தனம் எல்லாம் மருத்துவக் குணம் உடையவை.

பஞ்சாமிர்தப் புகழுக்கு என்ன காரணம்?பழம்,நெய்,வெல்லம் கொண்டு தயாரிக்கும் பஞ்சாமிர்தத்தில் உண்டாகும் புளிப்பு மெல்லிய அமிலத்தன்மை உடையது. நவபாஷாணத்தால் ஆன மூலவரை உடலில் தடவி எடுக்கும் போது பஞ்சாமிர்தப் புளிப்பு சுமந்து வருகிறது எனவே அபிஷேகப் பஞ்சாமிர்தம் ஒரு மண்டலம் உண்பவருக்கு கொடிய நோய்களும் குணமாகிவிடும். இரவு சுவாமி மீது சந்தனம் அரைத்துத் தடவி மறுநாள்விடியற் காலை பூஜையின் போது விநியோகம் செய்ய,அதைச் சிறிது உண்ணுவதாலும் தீராத நோய் தீர்ந்து விடும்.சித்தர்கள் செய்த மருத்துவ மதம் இந்து மகத்துவத்தலம்!

தமிழ் மக்கள் கேரளாவில் உள்ள ஐயப்பனைத் தரிசிக்க ஆர்வம் காட்டுவது போல் மலையாள மக்கள் விரும்பித் தொழும் மலைக் கொழுந்து பழநி ஆண்டவர். காரணம்,இத் தலத்தின் மூலவர் மேற்குப் பார்த்த நிலையில் இருக்கிறார். அவர் பார்க்கும் பகுதி மலையாள நாடு. தங்கள் நிலம் பார்க்கும் தலைவன் என்பதால் கேரள மக்கள் விரும்பித் தொழும் தலம் பழநி. இந்தப் பழநி என்ற பெயரைச் சொல்லுபவருக்கு நூறு கும்பிடு போட்டு வணங்க வேண்டும் என்கிறார் அருணகிரிநாதர்.

''படிக்கின்றிலை;பழநித் திருநாமம் படிப்பவர் தாள் முடிக் கின்றிலை'' என்று நெஞ்சை நோகிறார் அருணை முனிவர்.

இங்கு பங்குனி உத்தர விழா,சூர சம்ஹாரப்பெருவிழா.ஆனால் தைப்பூசம் தனிப் பெரும்விழாவாகும். கால்நடையாகவே பல லட்சம் பக்தர்கள் வந்து பங்கேற்கும் பெருவிழா தைப்பூசம்.தைமாதம் பூச நட்சத்திரத்தை ஒட்டியே பௌர்ணமி அமையும். தைமாதத்தில் அறுவடை முடிந்ததும்,முதல் விளைச்சலைக் காணிக்கையாகச் சுமந்து கொண்டு நடை பயணமாகப் பழநிக்கு வருவது பழைய வழக்கம். பகல் நேர வெயிலைத் தவிர்த்து,பௌர்ணமி நிலாக் குளியலில்,அரோஹரா போட்டபடி தங்களுக்குப் படியளந்த பகவானுக்குப் படியளக்க பக்தர்கள் வருகிற பழைய விழாவே தைப்பூசம். சங்க இலக்கியத்தில் முருகனுக்கு கடியுண் கடவுள் என்று ஒரு குறிப்பும் உண்டு. புதிய விளைவை (கடி) உண்பவன் என்று பொருள்.

காவடி என்பது பழநியின் தனிச்சிறப்பு. பால் காவடி,பன்னீர்க் காவடி மட்டும் அல்ல; - பாம்பு கொண்டு வரும் சர்ப்பக் காவடி கூட இருந்திருக்கிறது.

அந்தக் காவடி வந்த கதை ஒன்றும் உண்டு. அகத்தியர் ஆணைப்படி,இமயத்திலிருந்து சிவகிரி, சத்த கிரி என்ற இரண்டு மலைகளையும் காவடி மாதிரி கட்டி இடும்பன் சுமந்து வரும் போது இளைப்பாற,நெல்லிமரக் காடாய் இருந்த இவ்விடத்தில் வைத்தான்.பின்பு பெயர்த்தெடுக்க முடியவில்லை. காரணம்... சிவ மலையில் குரா மரத்தடியில் குமரக்கடவுள் நின்றதுதான். சண்டைக்குப் போன இடும்பன் மாண்டான். பின் இடும்பி வேண்ட ,இடும்பனை முருகன் உயிர்ப்பித்தான். மேலும் இடும்பன் வணங்கியதும்''உன் போல் காவடி சுமந்து நம்மிடம் வரும் பக்தர்களைக் காப்போம்.நீ எமது மலை வாயில் காவலனாய் விளங்கு''என வரமும் நல்கினான் வள்ளல். அது தவிர கைலாயத்தில் நாரதர் கொணர்ந்த பழத்துக்கு நடந்த பிரச்சினையில் முருகன் சினந்து வந்து இங்கு குடியேற, 'ஞானப் பழம் நீ' என அம்பிகை அழைக்க,பழநி ஆயிற்று என்கிறது தலபுராணம்.

உண்மையில்,பழனம் நிறைந்தது பழனி என்றொரு கருத்தும் உண்டு. பழனம் எனில் வயல்கள் என்று பொருள். ''பழனம் உழவர் கொழுவில் எழுதும் பழைய பழநி' என்பது திருப்புகழ். ஏர்முனை கொண்டு உழவர் எழுதும் பழனம் நிறைந்த பழநி என்பது அருணகிரி வாக்கு. 'பொதினி' என்ற மலைப் பெயர் மருவி பழநி என்றானது என்றும் ஒரு ஆராய்ச்சி உண்டு. பழநித் திருக் கோவில் சேர மன்னரால் கட்டப்பட்டது. என்பதற்கு ''சேரர் கோன் ஆலயத்துள் நின்றிலங்கும் பரஞ்சுடரை'' என்ற தலபுராண வரிகள் ஆதாரம்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நாடகங்களூடாக கலாசார விழுமியங்களை எடுத்தியம்பும் பரு. கிழக்கு மகளிர் கி.அ.சங்கம்



பருத்தித்துறை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் முதன் முதலாக மேடையேற்றிய ''புதுவாழ்வை நோக்கி'' என்னும் விழிப்புணர்வு நாடகத்தில் திருமதி மேரி ரஞ்சி திருச்செல்வம், திருமதி இராஜமரிய சுசிலா ஆகியோர் பங்கேற்றனர்.

## கர்ணன்

பருத்தித்துறை கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களான பெண்களுக்கு சுயதொழில் முயற்சிக்காக ஆரம்பத்தில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வந்த கடனுதவி தற்போது தலா 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சுயதொழில் சுழற்சி முறைக் கடன் திட்டம் சரிவரச் செயற்பட்டதால் இந்தக் கடன் திட்டத்துக்கென நெக்டெப் நிறுவனம் ஆரம்பத்தில் 3 லட்சம் ரூபாவை வழங்கியிருந்தது. காலப்போக்கில் ஒவ்வொரு ஆண்டும் மேலதிக நிதியை வழங்கி மொத்தமாக 16 லட்சம் ரூபாவை நெக்டெப் நிறுவனம் இந்தச் சங்கத்துக்கு வழங்கியுள்ளது. இந்த நிதியை வைத்துக் கொண்டு சுழற்சிமுறைக் கடன்களை குறைந்த வட்டிக்கு வழங்கி தற்போது 35 லட்சம் ரூபாவை இந்தச் சங்கம் மூலதனமாகப் பெற்றுக் கொண்டுள்ளது. தொடர்ந்தும் இந்தக் கடன் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு, கிராம அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கடந்த காலங்களில் இந்தச் சங்கத்தைச் சேர்ந்த பெண்களுக்கு பற்றிக் உடை தயாரித்தல், பழப்பாகு உற்பத்தி, மிக்ஷர் தயாரித்தல், இறால் உள்ளிட்ட மீன்களை பதனிட்டு கருவாடு உற்பத்திசெய்தல், கேக் ஐசிங், சாறி பிறிண்ரிங், அழகுக் கலை, தையல் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. மாதக் கணக்கில் இந்தப் பயிற்சிகளைப் பெற்ற பெண்களே சுய தொழில் கடன்களைப் பெற்று, பெற்ற பயிற்சிகளை வைத்து சுயதொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சுயதொழில்களைப் புரிவோரில் சிற்றுண்டிகள், மிக்ஷர்களை தயாரித்து விற்பனை செய்வோர், கருவாடு பதனிட்டு விற்பனை செய்வோர், அழகுக் கலைகளைச் செய்து வருமானம் ஈட்டுவோரே அதிகமான பெண்களாவர்.

இந்தச் சங்கத்தில் நிதிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு சங்கத்திற்கென உள்வரும் நிதி, கடனாக வெளியே செல்லும் நிதி போன்றவற்றை சிறந்த முறையில் கையாண்டு வருகின்றது. இதனால் சங்கத்தின் நிதிநிலைமை ஆண்டு தோறும் அதிகரித்து வருகின்றது. இந்நிதி அனைத்தும் வலுவிழந்த பெண்களின் வாழ்வாதார கிராம அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த மகளிர் அமைப்பு கலாசாரக் குழு ஒன்றை ஏற்படுத்தி அந்தக் குழு ஊடாக கலை, கலாசாரம், பண்பாடு, ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. மதுபாவனையிலிருந்து ஆண்களை விடுவித்தல், பெண்களிடையே ஒழுக்கம் பண்பாடுகளை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் வேகமாக ஈடுபட்டு வரும் இந்தச் சங்கம் பல நாடகங்களைத் தயாரித்து மேடை ஏற்றி அந்த நாடகங்கள் மூலம் இந்த விழுமியங்களை மக்களுக்கு எடுத்துக் கூறிவருகின்றனர். இந்தச் சங்கம் மேடை ஏற்றும் நாடகங்களுக்கு எங்கும் பெரு வரவேற்புக் கிடைப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக இந்த நாடகங்களில் கலாசாரச் சீரழிவுகள் பற்றி எடுத்துக் கூறி அதனால் உண்டாகும் விபரீதங்களையும் விளக்கி வருகின்றது.

முதன் முதலில் கடந்த வருடம் இந்தச் சங்க மகளிர் தயாரித்து நடித்த 'புதுவாழ்வை நோக்கி' என்னும் நாடகமும், பருத்தித்துறை சென்தோமஸ் மகளிர் பாடசாலையில் மேடை ஏற்றப்பட்டது. தொடர்ந்து புதுவாழ்வை நோக்கி 'திசைமாறும் பறவைகள்' ஆகிய நாடகங்களும் மேடை ஏற்றப்பட்டன. இந்த வருட ஆரம்பத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் 'பெண்ணே விழித்தெழு' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. அந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்த அப்போதைய யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நாடகத்தை வெகுவாகப் பாராட்டியதுடன் நாடகம் முடிந்த கையோடு அந்த நாடகத்தில் கலந்து கொண்ட பெண் கலைஞர்களை ஆரத்தழுவி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

இவர்களால் தயாரிக்கப்பட்ட மற்றொரு நாடகமான 'திசை மாறிய பறவைகள்' என்னும் நாடகம் கடந்த மாதம் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற மது போதைப் பொருள் ஒழிப்பு தினக் கூட்டத்தில் மேடை ஏற்றப்பட்டது. இந்த விழிப்புணர்வு நாடகத்தை கூட்டத்திற்கு தலைமை தாங்கிய பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் மற்றும் விருந்தினர்கள் பலரும் அந்த நாடகத்துக்கு அசத்தலான தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

சங்கத்தின் செயற்பாடுகளில் நம்பிக்கை வைத்துக் கொண்ட நெல்லியடி கொமர்ஷல் வங்கிக் கிளை சங்க அங்கத்தவர்களான 35 பெண்களுக்கு தலா 2 லட்சம் ரூபா வீதம் 70 லட்சம் ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது. இந்தச் சங்கத்தைச் சேர்ந்த பெண்கள் பெறும் சுயதொழில் முயற்சிக் கடன் மூலம் குடும்பத்தலைவர்களான ஆண்களும் தொழிலில் மேம்பாடு அடையக் கூடியதாக இருக்கின்றது.

பருத்தித்துறை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் இதுவரை மூன்று விழிப்புணர்வூட்டும் நாடகங்களைத் தயாரித்து பல்வேறு இடங்களில் மேடை ஏற்றி பெருவரவேற்பைப் பெற்றுள்ளது. ஒரு மணிநேரத்திற்குட்பட்ட இந்த நாடகங்களில் அனைத்துப் பாத்திரங்களிலும் பெண்களே நடித்துள்ளார்கள். மேடை அலங்காரங்கள் எதுவுமின்றி எடுத்த எடுப்பில் தமது இயற்கைக் கோலத்துடன், அந்தந்தப் பாத்திரங்களுக்கேற்ப உடுப்புகளை உடுத்திக் கொண்டு இயற்கையான பாவனையுடன் அவர்களின் நடிப்பு அமைந்துள்ளது. எந்த இடத்திலும் எந்தநேரத்திலும் அந்த நாடகங்களை நடிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்த நாடகங்களில் முக்கிய பங்கெடுத்து நடிக்கும் இரு பெண்களே இந்த நாடகத்தை தயாரித்து இயக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களாவர். காலத்திற்கும், சமூகத்திற்கும் ஏற்ப கலாசாரச் சீர்கேடுகள், பெண்விடுதலைகளை முன்வைத்து அவற்றிற்கான கதைகளை சங்க உறுப்பினரான திருமதி மேரி ரஞ்சி திருச்செல்வம் எழுதி வழங்க சங்கத்தின் தலைவியான திருமதி ராஜமரிய சுசீலா இயக்கி வருகின்றார்.

சங்கத்தின் செயற்பாடுகளில் நம்பிக்கை வைத்துக் கொண்ட நெல்லியடி கொமர்ஷல் வங்கிக் கிளை சங்க அங்கத்தவர்களான 35 பெண்களுக்கு தலா 2 லட்சம் ரூபா வீதம் 70 லட்சம் ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது. இந்தச் சங்கத்தைச் சேர்ந்த பெண்கள் பெறும் சுயதொழில் முயற்சிக் கடன் மூலம் குடும்பத்தலைவர்களான ஆண்களும் தொழிலில் மேம்பாடு அடையக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான பணிகளை பருத்தித்துறை கிழக்கு கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கமும் அதனுடன் இணைந்த மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கமும் மேற்கொண்டு கிராம மக்களின் வாழ்வாதாரம் பொருளாதாரம், கல்வி, சுகாதார மேம்பாட்டுக்கு உழைத்து வருகின்றன. ஏனைய கிராமங்களுக்கு முன்மாதிரியான இந்தப் பணி தொடர வேண்டும் என்பதே இந்தக் கிராம மக்களின் எதிர்பார்ப்பாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொரட்டுவ பல்கலை மாணவிகள் 9 பேர் எங்கே?

கொழும்பு,ஜூலை11

நேற்றுமுன்தினம் மாலை ஹந்தான மலைக்கு சென்ற மொரட்டுவ பல்கலைக்கழக 9 மாணவிகள் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

காணாமற்போனதாகக் கூறப்படும் 9 மாணவிகளைத் தேடும் பணியில் கண்டி விசேட பொலிஸ் குழுவொன்று ஈடுபட்டு வருவதாக அவர் கூறினார்.

இதேவேளை, ஹற்றன் பிரதேச மகளிர் பாடசாலையில் காணாமற்போன 6 மாணவிகள் குறித்த தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அவர்களில் ஒரு மாணவி அம்பாறையில் உள்ள தனது வீட்டுக்குச்சென்றுள்ளதாகவும், ஏனைய ஐவர் மின்னேரியா பிரதேசத்தில் உள்ள தமது நண்பர்கள் வீட்டுக்குச் சென்றிருந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்ததாக அவர் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் ஹற்றன் பிரதேச மகளிர் பாடசாலை மாணவிகள் அறுவர் காணாமற்போனதாக ஹற்றன் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரசு வலியுறுத்தினால் தேர்தலில் குதிப்பேன்

## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தகவல்

மட்டக்களப்பு,ஜூலை11

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுமாறு அரசு வலியுறுத்திக் கோருமாயின், நிச்சயமாக நான் தேர்தல் களத்தில் குதிப்பேன் என்று பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து இதுவரை நான் சிந்தித்துக்கூடப் பார்க்கவில்லை. அவ்வாறான எந்தவொரு எண்ணமும் எனக்குக் கிடையாது.

பல்வேறு வகைப்பட்ட செய்திகள் கசிந்த வண்ணமுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரதி அமைச்சர் பதவியை நான் இராஜினாமா செய்யப்போகிறேன் என்றும் செய்திகள் வெளிவருகின்றன.

எந்த அடிப்படையில், எங்கிருந்து, எவரால் இவ்வாறான செய்திகள் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை நான் நன்கு அறிவேன்.



அரசு என்னை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுமாயின், இறைவனது நாட்டம் இருந்தால் நிச்சயமாக நான் தேர்தலில் போட்டியிடுவேன்.

இருந்தபோதிலும், அரசு என்னை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுமாயின், இறைவனது நாட்டம் இருந்தால் நிச்சயமாக நான் தேர்தலில் போட்டியிடுவேன்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐ.ம.சு. முன்னணியே வெற்றிபெறும். அதிக ஆசனங்களுடன் அரசு மாகாணசபையைப் பொறுப்பேற்கும் - என்றார். (ச)

## மட்டு. மாமாங்கேஸ்வர விநாயகருக்குக் கொடி



மட்டக்களப்பு,ஜூலை11

இலங்கையில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

அன்றையதினம் காலை விநாயக வழிபாட்டுடன் உற்சவ நிகழ்வுகள் ஆரம்பமாகி யாகபூசை, கும்ப பூசை என்பன இடம்பெற்றன. தொடர்ந்து மூல மூர்த்திக்கு விசேட அபிசேக, ஆராதனை இடம்பெற்றது. பின்னர் கொடித்தம்ப பூசைகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் உள்வீதியுலா வந்தார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ச)



இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 59 இராஜதந்திரிகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை மட்டக்களப்புக்குச் சென்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

## ஹற்றனில் மண் சரிவு; போக்குவரத்து பாதிப்பு

ஹற்றன்,ஜூலை11

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஏற்பட்ட மண்சரிவினால் ஹற்றன் - கொட்டகலை பிரதேசத்துக்கான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன.

ஹற்றனிலிருந்து நுவரெலியாவுக்குச் செல்கின்றவர்கள் மாற்றுப்பாதையாக டிக்கோயா, போடைஸ், அக்கரப்பத்தனை வழிபாதையை பயன்படுத்துமாறு நுவரெலியா மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இணைப்பாளர் ஹேரந்தன ஹேமவர்த்தன அறிவித்துள்ளார். மண்திட்டை அகற்றும் பணிகளில் வீதி போக்குவரத்து அதிகார சபையினர் ஈடுபட்டுள்ளனர். (ச)

## பன்விலையில் தீ அணைப்பு பிரிவு; உடன் அமைக்குமாறு கோரிக்கை

நுவரெலியா,ஜூலை11

மலையக தோட்டப்புற நகரங்களில் ஒன்றான பன்விலை பிரதேசத்தில் அடிக்கடி இடம்பெற்று வரும் தீ விபத்துகளை தவிர்க்கும் முகமாக இங்கு தீயணைப்பு பிரிவு ஒன்றை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று பன்விலை பிரதேசசபையின் தவிசாளர் வீ.எஸ்.அரிய நாயகம் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்குள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் உட்படபல அரச தனியார் கட்டடங்களும் தினமும் தீ விபத்துக்களைச் சந்திக்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சுமார் 50 கிலோமீற்றர்களுக்கு அப்பாலுள்ள கண்டி நகர தீயணைப்பு பிரிவின் உதவியையே நாடவேண்டிய நிலை உள்ளது.

இறுதியில் இது சாத்தியமற்ற வீண் முயற்சியாகி விடுவதோடு கட்டடங்களும் சாம்பலாகி விடுகின்றன.

இதன் காரணமாகவே குறித்த பிரதேசத்துக்கு பிரத்தியேகமான தீயணைப்பு பிரிவு அவசியமாகும். அரசு இதனை ஏற்றுக்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்- என்றார். (ச)

## அஷ்ரப் கலாசார மண்டப நிர்மாணப் பணிக்கு நிதி

அம்பாறை,ஜூலை11

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காஸிமின் வேண்டுகோளின் பேரில் நிந்தவூர் அஷ்ரப் ஞாபகார்த்த கலாசார மண்டப நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷக்கு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காஸிம், மறைந்த அமைச்சர் அஷ்ரப்பினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிந்தவூர் கலாசார மண்டபத்தை முழுமையாக நிர்மாணித்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதைத்தொடர்ந்தே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்த நிதியைஒதுக்கீடு செய்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்களுள் நிந்தவூர் அஷ்ரப் ஞாபகார்த்த கலாசார மண்டப நிர்மாணப் பணிகளையும் உள்ளடக்குமாறு மாவட்ட அரச அதிபருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

நிந்தவூரின் நீண்ட காலத் தேவையாக இருந்து வருகின்ற கலாசார மண்டபமொன்றை நிர்மாணிப்பதற்காக 1994 ஆம் ஆண்டு தனது சொந்த நிதியில் காணி ஒன்றைக் கொள்வனவு செய்த பைசால் காஸிம், அவரது தொடர்ச்சியான முயற்சியால் அப்போதைய அமைச்சர் அஷ்ரப்பின் நிதி ஒதுக்கீட்டில் மண்டப நிர்மாண வேலைகள் 1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது அவரது திடீர் மறைவு காரணமாக இடை நடுவில் கைவிடப்பட்டு இன்றுவரை பூர்த்தி செய்யப்படாமல் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஆலையிலிருந்து தவறி விழுந்த தொழிலாளி சாவு

பதுளை,ஜூலை11

பதுளை, ஹாலிஎல பிரதேசத்தில் கல்உடைக்கும் ஆலையொன்றில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பதுளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

300 அடி உயரத்தில் இருந்து இவர் விழுந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலிஎல பிரதேசத்தைச் சேர்ந்த ஜி.எச்.அசங்க (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## ஆஸ்திரேலியா செல்ல முயன்ற இருவர் கைது

### பொலிஸாரால் பொருள்களும் மீட்பு



திருகோணமலைஜூலை11

திருகோணமலை, சாம்பல்தீவிலிருந்து சட்ட விரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்குக் காத்திருந்ததாகத் தெரிவிக்கப்படும் ஆண்கள் இருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களிடமிருந்து 8 சோடி செருப்புக்களும், உலர் உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இந்த நபர்களிடம் உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## குண்டு வெடித்து வான் பலத்த சேதம்

### மற்றொரு குண்டும் மீட்பு

அக்கரைப்பற்று பிரதேசத்தில் வீதி ஒன்றில் மரத்தில் பொருத்தப்பட்ட குண்டு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வெடித்ததில் வான் ஒன்று பலத்த சேதமடைந்துள்ளதுடன் வெடிக்காத நிலையில் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர் சம்பவ இடத்துக்கு பொலிஸார் உடனடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை பொலிஸார் மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட தேடுதல் மற்றும் விசாரணையின் மூலம் மரத்தில் பொருத்தப்பட்ட குண்டே வெடித்துள்ளது என்று கண்டறியப்பட்ட அதேசமயம் அதன் அருகே உள்ள பனைமரத்தில் பொருத்தப்பட்டிருந்த மற்றொரு குண்டையும் மீட்டுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராத வகையில் சிலரின் சந்திப்புகள் இருக்கும். அவர்களின் ஆலோசனைகளும், உதவிகளும் பயனுள்ளதாக இருக்கும். புதிய தொழில் ஒன்றையும் செயற்படுத்தத் திட்டமிடுவீர்கள். அரச உதவி ஒன்றுக்காக அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் புதிய நபர்களின் வருகை இருக்கும்.

**இடபம்:** நேற்றைய குழப்பங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். மன நிலையில் நிலவும் மாற்றமான சிந்தனை அமைதியை ஏற்படுத்தும். நட்பு மற்றும் உறவு வகையில் ஆறுதலான வார்த்தைகள் கிடைக்கப் பெறுவீர்கள். பணநிலையில் நெருக்கடிகளை சாதுரியமாகச் சமாளிப்பீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சி ஒன்றுக்காக சற்று கூடுதலான அலைச்சல் இருக்கும். பெற்றோருக்காக மருத்துவச்செலவு ஏற்படும். குடும்ப விடயங்களில், பட்டும் படாமல் இருந்து கொள்ளுதல் நல்லது. தொழில் வகையில், இயந்திர பராமரிப்புச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**கடகம்:** செல்வாக்கு அதிகரிக்கும். நட்புகளின் உதவிகள் மிகுந்த பயன் தரும். புதிய வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் வெற்றி தரும். சகோதர வகையில் ஏற்பட்ட சச்சரவுகளுக்கு தீர்வு ஏற்படும். அலுவலகப் பணிகளில் சில சலுகைகள் கிடைக்கப்பெறும்.

**சிங்கம்:** மனம் தெளிவு பெறும், எண்ணங்கள் வெற்றி பெறும், பணியில் தடங்கல்கள், தாமதங்கள் ஏற்பட்ட போதும் விடாமுயற்சியோடு செய்து முடிப்பீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட வகையில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் விளையாட்டான ஒரு வார்த்தை மன உளைச்சலை ஏற்படுத்தும், இருந்தாலும் சமாளித்துக் கொள்வீர்கள்.

**கன்னி:** மனநிலையில் தேவையில்லாத பயம், குழப்பத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். விரும்பிய தெய்வ வழிபாடு மனக்குழப்பத்தை அகற்றும். குடும்ப நலனில் அக்கறை கூடும். புதிய அறிமுகங்கள் ஓரளவுக்கு பயன்தரும். தொழில் தொடர்பாக பிரயாணங்கள் ஏற்படும்.

**நாளை**

ஆனி 28 வியாழக்கிழமை 12.07.2012
திதி: நவமி பி.இ 01.06 வரை
நட்சத்திரம்: பரணி பி.இ 01.17 வரை
சுபநேரம்: 06.00- 07.30 வரை
ராகு காலம்: 10.30- 12.00 வரை

**துலாம்:** உங்களின் பொறுப்பான செயற்பாடுகள் பிறரால் பாராட்டப்படும். இதுவே சில பணிகளைச் செய்ய உங்களைத் தேர்ந்தெடுக்கக் காரணமாக இருக்கும். பண நிலையில், பற்றாக் குறையான போக்கு காணப்பட்டபோதும் சாதுரியமாகச் சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்:** தாமதப்பட்ட பணிகளைச் செய்து முடிக்க முழுத் திறமையையும் வெளிப்படுத்துவீர்கள். நிதி நிலையில் நிலவும் பற்றாக்குறையைச் சமாளித்துக்கொள்ள சிலரின் உதவியை நாடுவீர்கள். தொழில் தொடர்பான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவீர்கள்.

**தனுசு:** உங்களின் கவனக்குறைவால் சிரமத்திற்கு உள்ளாவீர்கள். குடும்பத்தில், தான் என்ற பேச்சுக்களால், வீண் வாக்குவாதங்கள் அதனால் மனவருத்தங்கள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்க்கும் தகவல்கள் சற்று தாமதமாகும். யோசனை அதிகரிக்கும். அதற்கு நீங்கள் பதில் கொடுக்க முடியாத சூழ்நிலையும் நிலவும். தொழிலில், புதிய ஒப்பந்தங்களால் லாபம் அதிகரிக்கும். பயணங்களை திட்டமிட்டுக் கொள்ளுதல் நல்லது.

**கும்பம்:** குடும்பத்தில் கோபதாபங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அலுவலகத்தில் சக ஊழியர் ஒருவரின் செயற்பாடு அதிகம் யோசிக்க வைக்கும். பெரிதுபடுத்திக்கொள்ளாதீர்கள். புதிய தொழில் முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை.

**மீனம்:** சில காரணங்களால் மன அமைதி குறையும். குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகள் யோசிக்க வைத்தபோதும், வெளிக்காட்டிக் கொள்ளாதீர்கள். கடன்களில் கூடுதல் கவனம் தேவை. பிறருக்காக மேற்கொள்ளும் பணிகளில் கவனம் இருக்கட்டும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | | | | 3 |
| | | 1 | | 2 | | | 8 | |
| | 3 | | 4 | 7 | 6 | 9 | | 5 |
| 3 | | | | 9 | | | 6 | 2 |
| | 6 | 4 | 2 | | 3 | 1 | 7 | |
| 2 | 9 | | | 1 | | | | 8 |
| 9 | | 6 | 8 | 3 | 1 | | 4 | |
| | 4 | | | 6 | | 8 | | |
| 1 | | | | | 5 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 6 | 8 | 9 | 1 | 2 | 5 | 7 | 4 |
| 9 | 2 | 4 | 7 | 3 | 5 | 8 | 6 | 1 |
| 5 | 1 | 7 | 6 | 8 | 4 | 2 | 9 | 3 |
| 1 | 5 | 9 | 3 | 6 | 7 | 4 | 8 | 2 |
| 2 | 7 | 3 | 8 | 4 | 1 | 6 | 5 | 9 |
| 8 | 4 | 6 | 2 | 5 | 9 | 1 | 3 | 7 |
| 7 | 9 | 1 | 5 | 2 | 8 | 3 | 4 | 6 |
| 6 | 8 | 2 | 4 | 7 | 3 | 9 | 1 | 5 |
| 4 | 3 | 5 | 1 | 9 | 6 | 7 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
23
★
04
★
1951



மறைவு
11
★
06
★
2012

## அமரர் சொக்கலிங்கம் தங்கராசா

கடந்த 11.06.2012 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் சொக்கலிங்கம் தங்கராசா அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்தியகிரியைகள் இன்று (11.07.2012) புதன்கிழமை மு.ப. 10 மணியள வில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத் தருணம் தாங்கள் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணேஸ்வரம்
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி

குடும்பத்தினர்
(20292)(6-8)



**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**MEDIA RESOURCE AND TRAINING CENTRE (MRTC)**

The Media Resource and Training Centre is a **joint venture** of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden.

Applications are invited from suitable candidates for the post of **Producer on Contract basis** at the Media Resource and Training Centre, University of Jaffna upto **27.07.2012**

**Qualifications**

1. Three (3) G.C.E (Advance Level) passes in one sitting
2. Credit pass in English at G.C.E.(O/L)
3. At least two years experience in Printing Electronic Media, related to Audio, Video recording and editing
4. The age limit is 18-35 years
5. Working knowledge in Sinhala Language

Salary: **Rs.22,370/- (All inclusive and fixed per month)**

Selection by **Practical Test and Interview**

**General Conditions:**
This is a **full-time assignment** initially for a period of **five months** from the date of commencement of the assignment. The assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satisfactory.
The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute to EPF and the Employees Trust Fund.
Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Academic Establishments**, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of **Rs.100/-** per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.
Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna**.
Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

**Registrar**
2012.07.10

(அ/1411)(6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாவனைக்கு உதவாத பேக்கரி உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற வான் ஒன்றைச் சோதனையிட்ட பொலிஸாரும் கொழும்பு மாநகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர்களும் அதில் காணப்பட்ட பாண் மற்றும் உணவுப் பொருள்களை மண்ணெண்ணெய் ஊற்றி அழித்தனர்.

# உணவகங்களில் திடீர் சோதனை

## கொழும்பு மாநகரில் நடவடிக்கை

கொழும்பு,ஜூலை11

கொழும்பு மாநகரசபையினால், அதன் எல்லைக்குட்பட்ட உணவகங்களில் தர நிர்ணய அடிப்படையில் உணவு மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பொதுச்சுகாதாரப் பிரிவின் பிரதான மருத்துவ அதிகாரி பிரதீப் காரியவசம் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட உணவு மாதிரிகளின் பரிசோதனைகளில், பெரும்பாலான உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவு வகைகள் தரத்தில் சிறந்தவை அல்லவென உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உணவு மாதிரிகளின் தரங்களை 80 சதவீதத்துக்கும் மேலாக உறுதிசெய்ய முடியாத எந்தவொரு உணவக உரிமையாளரும், தர நிர்ணயங்களுக்கு உள்ளடக்கப்பட மாட்டார் என்று கொழும்பு மாநகரசபை பொதுச்சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

# வடக்கு மாகாணத் தேர்தலை கவனமாக நடத்த வேண்டும்

## அமைச்சர் பஸில் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை11

வடக்கில் நடைபெறும் முதலாவது மாகாணசபைத் தேர்தல் மிகவும் சிறந்த முறையில் கவனமாக நடத்தப்பட வேண்டும். தேர்தல்களை நடத்தி குற்றச்சாட்டுக்களை சுமக்க நாம் தயாரில்லை என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் வடக்கில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தக்கூடிய சாத்தியம் ஏற்படும்.

வடக்கில் தேர்தல்களை நடத்தவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் விரும்புகின்றனர்.

தேர்தல்களை நடத்தத் தேவையான சூழ்நிலையை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

போர் இடம்பெற்ற காலத்தில் இடம்பெயர்ந்த மக்களில் 95 வீதமானவர்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

தேர்தல்களை நடத்தத் தேவையான சூழ்நிலையை உருவாக்க வேண்டியது அரசின் கடமையாகும். இல்லையென்றால், இடம்பெயர்ந்த மக்களின் வாக்குரிமையை அரசு முடக்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்படும்.கடந்த மூன்று தசாப்தகாலமாக வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன.

சகல அரசியல் கட்சிகளும் நியாயமான முறையில் பிரசாரங்களை மேற்கொள்ளக்கூடிய ஓர் பின்னணியை உருவாக்க வேண்டியது அவசியமானது - என்றார். (ச)

# தேர்தல்களை கண்காணிப்பதற்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்

## தேர்தல் ஆணையாளரிடம் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு,ஜூலை11

மாகாணசபைத் தேர்தல்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், அதனைக் கண்காணிப்பதற்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.



வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை தேர்தல் கடமையில் ஈடுபடுத்தக்கூடிய சாத்தியங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.




வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை தேர்தல் கடமையில் ஈடுபடுத்தக்கூடிய சாத்தியங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அரசின் நடவடிக்கைகளில் நம்பிக்கை இல்லை. நியாயமான முறையில் தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியமும் இல்லை என்று திஸ்ஸஅத்தநாயக்க கூறினார்.

எனவே வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்துவதன் மூலம் நியாயமானதும், சுதந்திரமானதுமான தேர்தல் முடிவுகளை எதிர்பார்க்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# அதிவேக வீதியில் பயணித்த வான் திடீரென பற்றி எரிந்தது



கொழும்பு,ஜூலை11

தெற்கு அதிவேக வீதியில் காலியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வான் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.20 மணிக்கு களனிகம பகுதியில் திடீர் தீ விபத்துக்கு உள்ளானது.

இந்தத் தீ விபத்தால் வான் முழுமையாகச் சேதமடைந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. வானில் பயணித்த இருவர் காயங்கள் எதுவுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இந்த விபத்துக் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ச)

# அதிகாரிகளுக்கு கட்டளை இடுவதற்கு முடியாத நிலையில் இராணுவத் தளபதி

## இயலாமையைக்கூறி வருந்துகிறார் அவர்

கொழும்பு,ஜூலை11

இராணுவத் தளபதியாக பதவி வகிக்கின்ற போதிலும் அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பிக்க முடியாத நிலையில் இருப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய கவலை தெரிவித்தார் என இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கீழ் இராணுவத் தளபதியாக செயற்படும் தனக்கு, இராணுவத்தின் மகளிர் படையணிக்கும், நிர்வாகப் பிரிவுக்கும் கட்டளையிடும் அதிகாரம் மாத்திரமே தற்போது எஞ்சியிருக்கின்றது. தற்போது இராணுவத் தளபதியாக பதவி வகிக்கின்ற போதிலும் ஓர் அதிகாரிக்குக்கூட கட்டளை பிறப்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இராணுவத்திலுள்ள மேஜர் ஜெனரல்களான தயா ரத்நாயக்க, மஹிந்த ஹத்துருசிங்க, அருண ஜயதிலக்க, சந்தன ராஜகுரு, சவேந்திர சில்வா, கமல் குணரத்ன, சுமேத பெரேரா, ஜகத் டயஸ், பிரசன்ன சில்வா, வாகி கால்லகே, லலித் தவுலகல ஆகியோர் நேரடியாக பாதுகாப்புச் செயலாளருடன் தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.

நான் எதைப் பற்றி அவர்களிடம் விசாரித்தாலும், பாதுகாப்புச் செயலாளரின் அனுமதியுடனேயே, அதைச் செய்ததாகச் சொல்கிறார்கள். இப்போது நான் எதைப் பற்றியும் அவர்களிடம் கேள்வி கேட்பதில்லை. என்ன நடக்கிறது என்று மட்டும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். - எனவும் இராணுவத் தளபதி கூறினார் என்று அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

# தப்பிச் செல்ல முற்பட்ட கைதி மீது துப்பாக்கிச் சூடு

தப்பிச் செல்ல முற்பட்ட கைதி ஒருவர் மீது சிறைச்சாலை அதிகாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து ஹோமாகம நீதிவான் நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளை குறித்த சந்தேகநபர் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த கைதி தற்போது ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கைபேசியில் 'பூச்சி': பாவித்தவருக்கு காது வலி

8 கையடக்கத் தொலைபேசிகளிலிருந்து தூசிப்பூச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

கையடக்கத் தொலைபேசியில் பேசிய பின்னர் காது வலிப்பதாக மனைவி தெரிவித்துள்ளதாக ஒருவர் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே இந்தத் தூசிப்பூச்சிகள் குறித்து கண்டறியப்பட்டன.

இதன்படி, கையடக்கத் தொலைபேசிகளில் ... குறித்த ... மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் அனில் சமரநாயக்க, கையடக்கத் தொலைபேசியில் தூசிப்பூச்சிகள் காணப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளார்.

காதுவலி தூசிப்பூச்சிகளினால் உண்டானது என்பதைக் கண்டறிய பெண்ணின் பாதிக்கப்பட்ட காதைப் பரிசோதிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

இது தொடர்பான பல முறைப்பாடுகள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்குக் கிடைத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். கையடக்கத் தொலைபேசியொன்றிலிருந்து தூசிப்பூச்சிகள் முன்பும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துமிந்தவின் உடல்நிலை குறித்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு,ஜூலை11

பாரத லக்ஷ்மன் பிரேம சந்திர கொலை தொடர்பில் உடனடியாக கைது செய்யும்படி நீதிமன்றால் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ள சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் தற்போதைய உடல்நிலைமை தொடர்பான சரியான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூருக்குச் சென்று அவரை நேரில் பரிசோதித்து அறிக்கை பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன அல்விஸ் குற்றத்தடுப்புத் திணைக்களத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

பாரத லக்ஷ்மன் பிரேமச் சந்திர கொலை வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குற்றத் தடுப்புத் திணைக்களம் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான பதில் பொலிஸ் அதிகாரி ஷானி அபேசேகரவுக்கு நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

துமிந்த சில்வாவின் உடல் நிலை குறித்து பலரும் பலவாறு கருத்து வெளியிட்டு வரும் நிலையில், அவருடைய உடல் நிலை குறித்த உண்மையான அறிக்கை இதுவரை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி உபுல் குமாரப் பெரும தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதிவான் பிரசன்ன அல்விஸ் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்தக் கொலை வழக்குடன் தொடர்புபட்டதாக கைது செய்யப்பட்டுள்ள 18 சந்தேகநபர்கள் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புடன்நேற்று நீதிமன்றுக்கு அழைத்துவரப் பட்டனர். சந்தேகநபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று குற்றத் தடுப்புத் திணைக்களத்தினர் நீதிமன்றில் தெரிவித்தனர். இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச)

## கெருடாவில் பகுதிக்கு வீதி மின்விளக்குகள்

வடமராட்சி ,ஜூலை 11

புலோலி வடகிழக்கு சந்தாதோட்டம், புலோலி வடமேற்கு முருகையன் கோயிலடி, கெருடாவில் ஆகிய இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட இடங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பருத்தித்துறை பிரதேச சபை ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் எடுத்துக் கொண்ட முயற்சியினால் இந்த வீதியின் விளக்குகள் பொருத்தப்பட்டன.(வ-8)





உங்கள் வாழ்நாள் முழுவதும் 24 மணி நேரமும்
எவ்வித செலவும் இல்லாமல்
**Solar**
மூலம் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்

01) 4,200/= செலவு செய்தால்
1 மின்குமிழ் Phone Charger பயன்படுத்தலாம்
02) 15,000/= செலவு செய்தால்
3 மின்குமிழ் Phone Charger பயன்படுத்தலாம்
03) 32,000/= செலவு செய்தால்
5 மின்குமிழ் Phone Charger பயன்படுத்தலாம்
04) 75,000/= செலவு செய்தால்
6 மின்குமிழ், TV, Phone Charger பயன்படுத்தலாம்
05) 160,000/= செலவு செய்தால்
6 மின்குமிழ், TV, குளிர்சாதனப்பெட்டி Phone Charger பயன்படுத்தலாம்
07) 325,000/= செலவு செய்தால்
6 மின்குமிழ், TV, மோட்டார், குளிர்சாதனப்பெட்டி Phone Charger பயன்படுத்தலாம்


மேலதிக விபரங்களுக்கு:

**NEW ASIAN CENTER**

56/ 15 B ஸ்ரான்லி வீதி, (சம்பத் வங்கி அருகில்),
யாழ்ப்பாணம். T.P.0778249949, 0718561654



குறிப்பு:-
எமது நிறுவனத்தில்
*Mobile Phone,*
*Digital Camara*
உடன் திருத்திக்
கொடுக்கப்படும். (சி/1410)(2-6)




## முதலை இறைச்சிக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்

கொழும்பு,ஜூலை11

ஆறு கிலோகிராம் முதலை இறைச்சியை தன்வசம் வைத்திருந்த பொல்கொடை பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்கு பாணந்துறை நீதிவான் ஆர். எஸ். ஏ.திஸாநாயக்க 25ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

மாபலனகே விஜயானந்த என்ற மீனவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

பொல்கொட வாவியில் மீன் பிடிப்பதற்காக வலை வீசியிருந்த போது சிறிய முதலையொன்று வலையில் சிக்கியுள்ளது. மீனவர் அதை இறைச்சிக்காக வெட்டிய சமயம் பொலிஸாரிடம் சிக்கினார்.

## சிறுவர் மீதான துஷ்பிரயோகத்துக்கு பெண்கள் அமைப்பு கடும் கண்டனம்

கொழும்பு,ஜூலை11

சிறார்கள் மீதான துஷ்பிரயோகங்களை நிறுத்துவதற்கு அதிகாரத்திலுள்ளோர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது அமைப்பின் தலைவி சமன்மலி குணசிங்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

நாட்டில் 90 நிமிடங்களுக்கு ஒரு சிறுவன், அல்லது சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

குற்றவாளிகளை அரசு பாதுகாப்பதால் இவ்வாறான குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
06 ★ 06 ★ 1956

உதிர்வு
16 ★ 06 ★ 2009

அமரர் **இரத்தினம் ஜெகநாதன்**

திதி : அட்டமி

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வமே
அன்பாலே எமை அரவணைத்து
பண்பாலே எம்மை வழி நடத்தி
நிலையில்லா வாழ்வுதன்னில் நீங்காத
நினைவுகளைத் தந்து
நிலையான வாழ்வுதனை தேடிச் சென்றீரோ

23, கோப்பாய் வீதி,
உரும்பிராய் (20273)(6-8)

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## போதைப் பொருள்களை பாணாந்துறையில் விற்ற கணவன், மனைவி கைது

கொழும்பு,ஜூலை11

போதைப்பொருள்களை விற்பனை செய்து வந்த தம்பதியினரை பாணந்துறை தெற்கு பொலிஸார் மோதரவில் சுனாமி வீடமைப்புத் திட்டத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

160 போதை பொருள் பைக்கற்றுகளைப் பொலிஸார் அவர்களிடமிருந்து கைப்பற்றினர். கணவரிடம் 80 பைக்கற்றுகளும் மனைவியிடம் 80 பைக்கற்றுகளும் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் பாணந்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**கிட்டிணன் காந்தமலர்**

தோற்றம்
05★08★1955

மறைவு
11★07★2007

*ஐந்தாண்டு சென்றாலும் - அம்மா*
*உங்கள் நினைவுகள் என்றும்*
*எம்மைவிட்டு அகலா*
*உங்கள் நினைவுகளின் நிழல்களில் தான்*
*நாங்கள் இளைப்பாறுகின்றோம் - அம்மா*
*உங்கள் பிரிவால் நாளும் குமுறுது எங்கள் நெஞ்சம்*
*உங்களின் நினைவே எங்களின் தஞ்சம்*
*உங்கள் புதியதொரு வரவுக்காகக் காத்திருக்கும்..*

(மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்)

தங்கபுரம், அளம்பில், முல்லைத்தீவு.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(20811)(2-6-22)

## மரண அறிவித்தல்

### நடராசா இரத்தினேஸ்வரன் (சந்துரு)



நீர்வேலி வடக்கு,நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இரத்தினேஸ்வரன் நேற்று(10.07.2012) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசா- காலஞ்சென்ற தவமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிங்கராசா மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் விக்கினேஸ்வரி (வவா) அவர்களின் அன்புக்கணவரும் அனோராஜ் (நில்சன் லேணர்ஸ்,கச்சேரி), விமல்ராஜ்(USA),யாமினி(யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவி)ஆகியோரின் பாசமிகு தந்தையும் மல்லிகாதேவி(கனடா), சாரதாதேவி(நீர்வேலி), இராசேஸ்வரன் (பிரான்ஸ்), சந்திராதேவி(பிரான்ஸ்)ஆகியோரின் அன்புச் சகோதரனும் லிங்கேஸ்வரி(புத்தளம்), ரவிச்சந்திரன் (இத்தாலி), வரதேஸ்வரி(உரும்பிராய்), மங்களேஸ்வரி (இத்தாலி), வத்சலா (சுண்டுக்குளி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2012)புதன் கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.(மாசுவன் சந்தி)

தகவல்:
(20294)(5-6) குடும்பத்தினர்

## தவறிவிட்டது

137/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மாணிக்கம் ஜீவானந்தன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (490143505V) (10/1, ரக்கா வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தையுடையது) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.இல. 077 1336 399

## விற்பனை

**பாவித்த வீட்டுத்தளபாடங்கள் (மேசை, கதிரை, வாங்கு, சோக்கேஸ்) இன்னும் பல. வெஸ்பா ஸ்கூட்டர் (Vespa Scooter) விற்பனைக்குண்டு.**

**99, பலாலி வீதி, (இலுப்பையடிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம்.**

(20223)(6-22-8)

## பாடசாலை அதிபர்களுக்கு

பாடசாலையின் விடைத்தாள்கள் அச்சிடப்படுகின்றன

1 றீம் விடைத்தாள் 750/= இல.02

1 றீம் விடைத்தாள் 850/= இல. 01

உடன் தொடர்புகொள்ளவும்.

தொ.பே. 021 4902 905

(20222) (4-6-22)

## மரண அறிவித்தல்

### திருமதி செபமாலைமுத்து றீற்றம்மா



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செபமாலைமுத்து றீற்றம்மா (09.07.2012) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலைமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற றெஜினோல்ட் (முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர்- வவுனியா), றொபின்சன் (ஜேர்மனி), மேரி றூபி(கொழும்பு), றொபட் (கொழும்பு), றிச்சாட்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் மல்லிகா, கிளி, தேவா, பரிமளா, சுமித்திரா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது சொந்த ஊரான ஊர்காவற்றுறையிலுள்ள தேவமாதா ஆலயத்தில் 16.07.2012 திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக ஊர்காவற்றுறை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.


**இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தேவமாதா கோயிலடி,
மண்குழி வீதி, ஊர்காவற்றுறை.

தகவல்:
மகன்,மகள்,மருமகள்,
றொபட்,றூபி,தேவா.

(2030)(5-6-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலை நிலவும்.

# கடல் வழியாக வெளிநாடு செல்ல முயன்ற 600 இலங்கையர்களை காணவில்லை

### ஈழ அகதிகள் புனர்வாழ்வளிப்பு நிலையத்தின் தலைவர் தெரிவிப்பு

தென்னிந்தியா மற்றும், இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக வெளிநாடு களுக்குச் செல்ல முற்பட்ட 600 இற்கும் அதிகமானவர்கள் காணாமற் போயுள்ளனர் என்று ஈழ அகதிகள் புனர்வாழ்வளிப்பு நிலையத்தின் தலைவர் எஸ்.சி.சந்திரஹாசன் தெரிவித்துள்ளார் என்று த ஏசியா நிவ்ஷ் ஏஜ் இணையத்தளம் தகவல் வெளியிட்டது.

இதுகுறித்து மேற்படி இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்திய மத்திய அரசும் தமிழக அரசும், தென்னிந்தியாவில் உள்ள அகதிகளுக்கு முழுமையான சேவையை வழங்கி வருகின்றன. எனினும், முகாம்களில் உள்ள அதிகாரிகளே அகதிகளுக்கு பெரும் நெருக்கடிகளைக் கொடுப்பவர்களாக உள்ளனர்.

**இதன் காரணமாகவே அதிக அளவான அகதிகள் அங்கி ருந்து ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன், நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு தப்பிச் செல்ல முயற்சிக்கின்றனர்.**

இதன் காரணமாகவே அதிக அளவான அகதிகள் அங்கி ருந்து ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன், நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு தப்பிச் செல்ல முயற்சிக்கின்றனர். பெரும்பாலானவர்கள் இடையிலேயே கைது செய்யப்பட்டு விடுகின்றனர்.

எனினும் 600இற்கும் அதிகமானவர்கள் இதுவரையில் காணாமல் போயுள்ளனர் என்று ஈழ அகதிகள் புனர்வாழ்வளிப்பு நிலையத்தின் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# தெல்லிப்பழை பொலிஸாரால் டெங்கு ஒழிப்பு சிரமதானம்



வலி. வடக்கு ஜூலை 11

டெங்கு ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு தெல்லிப்பழைப் பொலிஸாரால் இடம்பெயர்ந்தோர் நலன்புரிமுகாம்களில் சிரமதானப் பணிகள் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் தெல்லிப்பழைப் பொலிஸார் வலி. வடக்குப் பிரதேச சபையினர் மற்றும் மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலைய மக்கள் ஆகியோர் இணைந்து முகாம்பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதியில் உள்ள பற்றைகள், குப்பைகள் அகற்றப்பட்டதுடன் கழிவு நீர் தேங்கும் வாய்க்கால்களும் துப்புரவு செய்யப்பட்டன. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா, காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரத்ன, தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரி ஆராச்சி, மற்றும் வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் கோ.சுகிர்தன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (வ-86)

## சமய சந்நிதிகளில்

உடுப்பிட்டி தெற்கு, கெருடாவில் மருதங்குளம் ஸ்ரீ ஞான வைரவர் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபிஷேகக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும். மறுநாள் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குளிர்த்தி அபிஷேகம் இடம்பெறும். (வ-8)

* * *

வடமராட்சி,ஜூலை 11

புலோலி வடமேற்கு, காந்தியூர் ஞானவைரவர் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (வ-8)

# நவாலியில் பெண்களிடம் சங்கிலிகள் அபகரிப்பு

நவாலி, ஜூலை 11

நவாலியில் கடந்த திங்கட்கிழமை வீதியால் சென்றுகொண்டிருந்த இரு இளம் பெண்களின் தங்கச் சங்கிலிகள் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களால் பட்டப் பகலில் அறுத்தெடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் பணிபுரியும் நவாலி கலையரசு வீதியைச் சேர்ந்த சுந்தரம் சர்மிலா என்பவர் கடமை முடித்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சமயம் வீட்டுக்கு மிக அண்மையாக யாரும் இல்லாத நேரம் மிக வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் அவர் அணிந்திருந்த ஒன்றரை பவுண் நிறையுடைய சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

இதனால் திகிலடைந்த நிலையில் அவ்விடத்தில் நின்ற பெண்ணிடம் இது பற்றிக் கூறி உள்ளார். சில விநாடிகளில் அந்த நபர்கள் திரும்பி வந்து அப்பெண்ணைத் தள்ளி விழுத்தி அவரிடமிருந்த கைப்பையை பறித்தெடுத்துச் சென்றுள்ளனர்.

அவரது கைப்பைக்குள் ஒரு தொகைப் பணம், வங்கிப் புத்தகம், தேசிய அடையாள அட்டை மற்றும் பல ஆவணங்களும் இருந்துள்ளன.

இதேவேளை அன்றைய தினம் முற்பகல் 11 மணியளவில் நவாலியைச் சேர்ந்த மற்றொரு பெண் பிரதான வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த சமயம் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடியில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் மக்கள் நெருக்கமாகச் சென்று கொண்டிருந்த வேளை அவர்களை விலத்திச்சென்று மிகத் துணிகரமாக அப்பெண் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

சங்கிலியை பறி கொடுத்தவர்கள் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் இது சம்பந்தமாக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (வ-100)

# சாவகச்சேரி வைத்தியசாலை விடுதிகளில் டெங்கு ஒழிப்பு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் விடுதிகள் அனைத்திலும் அண்மையில் வைத்தியசாலை வைத்திய அதிகாரி எஸ்.குகதாசன் தலைமையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நடைபெற்றன.

வைத்தியசாலை நிர்வாக அலகு உட்பட விடுதிகள், மற்றும் ஏனைய பகுதிகள் யாவும் வைத்தியர்கள், தாதியர்கள், பரிசாரகர்கள், ஊழியர்கள் , விடுதியில் குழந்தைகளை சிகிச்சைக்காக பராமரிப்பில் நின்ற பெற்றோர்கள், ஆண்கள் விடுதியில் தங்கியிருந்தவர்கள் அனைவரும் இணைந்து மேற்படி துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர். (வ-131)

**உணவு பரிமாறுபவர் தேவை**

பிரபல Restaurant ஒன்றுக்கு உணவு பரிமாறுபவர் தேவை.
தொடர்பு: 021 222 1322
077 7741 750
(20298) (45-6-22)

**தவறிவிட்டது**

புத்தூர் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த செல்லத்துரை சிவசந்திரராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (591351290 V), காப்புறுதி பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய கவர் ஒன்று கோண்டாவிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். 077 7666 746
(சன்மானம் வழங்கப்படும்) (20297) (45.6.22)

**வீடு வாடகைக்கு**

யாழ். பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 774 1750, 021 222 6266
(20299) (45-6-22)

# சான்றிதழ் வழங்கல்

பளை, ஜூலை 11

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினரால் நடத்தப்பட்ட இரண்டாம் கட்ட கணினிப் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் போது மூன்றாம் நான்காம் கட்ட கணினிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பித்தலும் இடம்பெறும். அத்துடன் பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கலும் சோரன் பற்றைச் சேர்ந்த குடும்பத் தலைவரை இழந்த குடும்பத்துக்கு தையல் இயந்திரம் வழங்கலும் இடம்பெறவுள்ளன.

மேலும் பேரவையினால் முன்பள்ளிகளின் சிறார்களுக்கு வழங்கப்படும் சத்துணவு தொடர்பாக பெற்றோர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெறுமென பேரவைச் செயலாளர் க.சண்முகதாஸ் அறிவித்துள்ளார். (வ-9)

**மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்**

திரு .குமாரவேலு
சரவணபவானந்தன் J.P.
B.A.PGDE SLPS I SLEAS
( கோட்டக்கல்விப் பணிப்பாளர் – வேலணை)



மண்கும்பான் அரசினர் தமிழ்க் கலவன்
பாடசாலையின் அதிபராகவிருந்து
கல்வித் தாகத்தை இதமாக ஊட்டிய
கலங்கரை விளக்கே
பள்ளிப் பருவத்தில் பக்குவமாய்
பழகவைத்த ஆசானே
மணிவிழாக் காணும் மகத்தான வேளையில்
இலங்கை கல்வி நிர்வாக சேவையெனும்
மணி மகுடம் சூட்டி மகிழ்ந்திடும் வேளையில்
தங்கள் பணியின் சேவைக்குக் கிடைத்த
பரிசாகப் பாராட்டுகின்றோம்.
மண்கும்பான் அபிவிருத்திச் சங்கம்.
இணைப்பாளர் தி.பாஸ்கரன், மண்கும்பான்.
(20296) (2-6-22)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



திரு.சதானந்தன்
இராகவானந்தன்
B.A.(Hons), LLB, Dip.in.S.W)
கற்கோவளம் பருத்தித்துறையைச் சேர்ந்த
அமரர் மு.சதானந்தன் (ஆசிரியர்,
யாழ்/ஹாட்லிக் கல்லூரி) மற்றும் செல்வம்
தம்பதியரின் புத்திரன் இன்று (11.07.2012)
உயர்நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில்
சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்கிறார்.
இவர் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக,
அதிபராகத் தனது பதவியில்
மேன்மையடைந்தது போலவே சட்டத்துறை
யிலும் சிறப்புகள் பெற்று மேன்மையடைய
மனமார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:- குடும்பத்தினர்.
(ச/1412) (2-6-22)



**கயிலாயபிள்ளை வேலாயுதபிள்ளை ஆகிய எனது பவள விழாவை சிறப்புற நடத்திய உள்ளங்களுக்கு எனது நன்றிகள்**

கடந்த (04.07.2012) புதன்கிழமை வவுனியா பூந்தோட்டத்தில் நடைபெற்ற எனது 75 ஆவது அகவை நிறைவு விழாவில் (பவளவிழா) கலந்து சிறப்பித்த கோப்பாய், அச்சுவேலி, பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் வாழும் உறவினர்கள், நண்பர்களுக்கும் கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையம், முன்பள்ளி, கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவு, வவுனியா லக்சுமி சமேதர நரசிங்கர் ஆலயபரிபாலன சபையினர், பூந்தோட்டம் பிரதேச கட்டமைப்பு முன்பள்ளிகளின் நிர்வாகத்தினர், பூந்தோட்டம் கலைமகள் முன்பள்ளி நிர்வாகத்தினர், பூந்தோட்டம் இந்துமயான அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர், வவுனியா மாவட்ட நலனுபாய ஒய்வூதிய சங்கநிர்வாகத்தினர், பூந்தோட்டம் சனசமூக நிலைய நிர்வாகத்தினர், பூந்தோட்டம் அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர், பூந்தோட்டம் மகளிர் அமைப்பு ஆகியோர் கலந்து சிறப்பித்து வாழ்த்தி, வாழ்த்து மடல்கள் வழங்கி பரிசுகள் அளித்துப் பொன்னாடைகள் போர்த்திக் கௌரவித்தமைக்காக எனது சார்பிலும் எனது குடும்பத்தினர் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

க. வேலாயுதபிள்ளை,118/8, ஆறுமுக நாவலர் வீதி, பூந்தோட்டம், வவுனியா.
[20289][45.6.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்பரப்பில் கடும் காற்று வீசக்கூடும்

## எச்சரிக்கிறது இடர்முகாமைத்துவ நிலையம்

கொழும்பு, ஜூலை11

தென்மேற்கு பருவப் பெயர்ச்சி கால நிலை வலுவடைந்துள்ளதால் நாட்டை சூழவுள்ள கடற்பரப்பில் கடும் காற்று வீசுவதற்கான சாத்தியம் உள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 100 கிலோமிற்றர் வரை அதிகரிக்கலாம் என நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மாவட்டங்கள் தோறும் உள்ள இடர் முகாமைத்துவ நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

# கிறீஸ் வங்கிகளில் முதலிட்ட ரூ.340 கோடி பணம் எங்கே?

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. கேள்வி

கொழும்பு,ஜூலை11

கிறீஸ் வங்கிகளில் முதலீடு செய்யப்பட்ட 340 கோடி ரூபா பணம் குறித்து மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கொண்டுள்ள நிலைப்பாடு என்ன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோப் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது போன்று கிறீஸ் வங்கிகளில் முதலீடு செய்யவென 340 கோடி ரூபா பொதுமக்களின் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது.

கணக்காளர் நாயகம் அலுவலகம் ஊடாக அப்பணத்தை முதலீடு செய்ய வேண்டாம் என வலியுறுத்தி வந்தபோதும் மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் அந்தப் பணத்தை முதலீடு செய்துள்ளனர்.

வேறு முதலீட்டு வழிமுறைகள் மூலம் அப்பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மத்திய வங்கி ஆளுநர் கூறியுள்ள போதும் பொருளாதார வீழ்ச்சி கண்டுள்ள நாட்டில் முதலீடு செய்யுமாறு ஆலோசனை வழங்கியது யார் என்று கூற வேண்டும்.

அரசு வெளிநாட்டுப் பணத்தில் மாத்திரமல்ல பொதுமக்கள் பணத்திலும் இவ்வாறு விளையாடுகின்றது.- என்றார். (ச)

சிறப்புத்தன்மையை புரிந்துக்கொண்ட
வாடிக்கையாளர்களான உங்களுக்காகவே
பஜாஜ்
RE 205
முச்சக்கர வண்டி
ரூ.450,100/-* ம் விசேட விலைக்கு!
முந்துங்கள்! இவ் விசேட விலை குறிப்பிட்ட கால வரையறைக்கு மட்டுமே.



* 2012 ஜூன் 22 முதல் நடைமுறைக்கு வரும் வகையில்
* இவ் விலைக்கு சகல வரிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு முன்னறிவித்தல்களின்றி எவ் வேளையிலும் மாற்றமடையலாம்.
tradlanka
DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

# 10 அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள்

கொழும்பு,ஜூலை11

அமைச்சுக்கள் பலவற்றுக்கு புதிய செயலாளர்கள் அடுத்த வாரம் அளவில் நியமிக்கப்படவுள்ளனர் என்று அரசு அறிவித்துள்ளது. 10 அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர் . அதற்கான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருகிறது என்று ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

அமைச்சுக்கள் பலவற்றிலுள்ள செயலாளர்களின் பதவிக்காலம் நிறைவு பெறுகின்றமை மற்றும் செயலாளர் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றமை போன்றவையே புதிய செயலாளர்களின் நியமனத்துக்கான காரணம் என்று அவர் தெரிவித்தார்.

சிவில் விமானசேவை, கலாசார மற்றும் கலை விவகாரம், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரம், சமூகசேவை, நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தகம், தொழில் மற்றும் வணிக விவகாரம், இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி, பொதுமக்கள் தொடர்பு மற்றும் பொதுமக்கள் விவகாரம், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு உள்ளிட்ட அமைச்சுக்களுக்கே புதிய செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பருத்தித்துறை நீதிமன்ற வளாக சுத்திகரிப்புப்பணி தனியாரிடம்

பருத்தித்துறை நீதிமன்ற வளாகச் சுத்திகரிப்பு பணி ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒருவரிடம் இம்மாதம் முதல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் செயற்படும் நாள்களில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்ற வளாகச் சுத்திகரிப்புப் பணியில் தனியார் நிறுவனத்தினால் 7 தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

அரச திணைக்களங்கள் நிறுவனங்களின் சுத்திகரிப்புப் பணிகளை தனியாரிடம் கையளிக்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை நீதிமன்ற வளாகச் சுத்திகரிப்புப் பணியும் கையளிக்கப்பட்டுள்ளது. இதேபோல் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை சுத்திகரிப்புப் பணியும் தனியாரிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-8)



சரவணா ரெக்ஸ்
பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
( விடுமுறை நாள்களிலும் மலிவு விற்பனை நடைபெறும் )
இடம் : சரவணா ரெக்ஸ் (களஞ்சியசாலை)
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
(கெங்காதரன் மருத்துவமனை அருகில்)
காலம் : 07.07.2012 முதல்
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 7 மணி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகளுக்கு குறைந்த வட்டியில் கடன்

*வவுனியா, ஜூலை 11*

***புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் புலி உறுப்பினர்கள் 2 ஆயிரம் பேருக்கு அவர்களின் தகுதி அடிப்படையில் சுயதொழில் கடன் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான பயனாளிகள் தெரிவு நேற்று முன்தினம் வவுனியா அரச செயலகத்தில் இடம்பெற்றது.***

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு மற்றும் புனர்வாழ்வு சபை என்பன இதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளன.

பயனாளிகள் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு புனர்வாழ்வு சபையின் பணிப்பாளர் ஜீ.டி.ஜனதாஸ் தலைமையில் நடைபெற்றது.

அரச திறைசேரியிலிருந்து 300 மில்லியன் ரூபா இந்தக் கடன் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 10 வருட செலுத்துகைக் காலத்தை உள்ளடக்கியதாக அரச வங்கிகள் மூலம் இந்த கடன் தொகை பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச வங்கிகளில் கடனுக்கான வட்டி வீதம் 12 வீதமாகக் காணப்படுகிறது. இதன் முழுத் தொகையையும் முன்னாள் போராளிகள் செலுத்த வேண்டியதில்லை. பதிலாக 8 வீதத்தை திறைசேரி செலுத்துவதுடன் ஏனைய 4 வீதத்தை மட்டுமே கடன் பெறும் பயனாளிகள் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் குறித்த கடன் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

குறித்த கடன் திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் பயனாளிகள் தெரிவில் கலந்துகொண்ட முன்னாள் போராளிகள் பலர், இந்தக் கடன் திட்டம் கைக்கெட்டினால் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த பெரும் உதவியாக இருக்கும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தாமாக வங்கிகளுக்குச் சென்று கடன் பெறுவதில் நடைமுறைச் சிக்கல்கள், கெடுபிடிகள் இருப்பதால் இந்தத் திட்டம் தமக்கு வசதியாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.(10-16-400)

## தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் இலக்கியக் கருத்தரங்கு



அக்கராயன், ஜூலை 11

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னாள் அரச அதிபர் கந்தையா பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக தமிழ் இலக்கியக் கருத்தரங்கு நேற்றுக் காலை மணியளவில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

பொன்னம்பலம் நினைவுரையைக் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் நிகழ்த்தினார். தொடர்ந்து இடம்பெற்ற 'தமிழ் இலக்கியங்களில் தமிழ்ச் சுவை' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் 'திருக்குறளின் தமிழ்ச் சுவை'யைக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் தமிழ்ப் பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பிறேமா மதுரநாயகம் நிகழ்த்தினார். 'சிலப்பதிகாரத்தில் தமிழ்ச்சுவை' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸும், நள வெண்பாவில் தமிழ்ச்சுவை என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவபீடத் தலைவர் பேராசிரியர் தி.நல்லதம்பியும், கம்பராமாயணத்தில் தமிழ்ச் சுவை எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் ச.லலீசனும், 'பாரதி, பாரதிதாசன் பாடல்களில் தமிழ்ச்சுவை' என்ற தலைப்பில் கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு அலுவலர் கு.ரஜீவனும் கருத்துரைகளை வழங்கினர்.

தொடர்ந்து தமிழ்க் காவலர் வே.இறைபிள்ளை, இறஞ்சிதமலர் அருணாசலம் ஆகியோர் எழுதிய 'சிந்திக்க செயற்பட' எனும் வினாவிடைத் தொகுதி நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் மதிப்பீட்டுரையை கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-6)

## பூநகரி ஜெயபுரத்தில் மருத்துவமனை

பூநகரி, ஜூலை 11

பூநகரி ஜெயபுரத்தில் அடுத்த ஆண்டு மருத்துவமனையொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பா.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் மருத்துவர்களில் ஒரு பகுதியினரையாவது கிளிநொச்சி மாவட்டத்தில் சேவையிலீடுபடுத்துவதற்கான முயற்சிகளும் இடம் பெறுகின்றன. இது வெற்றியளிக்கும் பட்சத்தில் அடுத்த ஆண்டில் பூநகரி ஜெயபுரத்தில் மருத்துவ மனை அமைவது சாத்தியமாகும்.

அத்துடன் அக்கராயன் போன்ற இடங்களிலுள்ள மருத்துவமனைகளையும் நவீனமயப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டிய முக்கிய தேவைகளும் உள்ளன.

மேலும் பளை, முழங்காவில், பூநகரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகள் அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## சிதம்பரபுரம் திருப்பழனி முருகனுக்கு கொடியேற்றம்

வவுனியாவில் புகழ்பெற்ற ஆலயமான சிதம்பரபுரம் திருப்பழனி முருகன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் அமைந்துள்ள திருப்பழனி முருகன் ஆலயம் உயர்ந்த குன்றுப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் முருகனைத் தரிசிக்கவென பல இடங்களில் இருந்தும் பக்தர்கள்வருகை தருவது வழக்கமாகும். (க-421)

**மணல் விற்பனைக்கு**

கட்டட வேலைக்கான கண்டாவளை மண், பூநகரி மண் நேரடியாக டிப்பர் மூலம் உடன் அனுப்பப்படும்.

தொடர்புகளுக்கு:- 0771988980

## கிடைக்குமா குடிதண்ணீர்?

### அக்கராயன் பகுதி மக்கள் கேட்கின்றனர்

அக்கராயன், ஜூலை 11

அக்கராயன் மகாவித்தியாலயச் சூழலில் பெரும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மேட்டுப் பாங்கான இடத்திலேயே இந்தப் பாடசாலை அமைந்துள்ளது. இதனால் வழக்கமாக ஜூலை மாதத்தில் இந்தப் பகுதியில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவது வழக்கமாகும்.

ஆனால் இந்த வருடம் கடும் வெப்பமும், வரட்சியும் நிலவுவதால் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அக்கராயன் குளத்திலிருந்து வயல்களுக்கு வாய்க்கால்கள் மூலமாக நீர் பாய்ந்து செல்வதால் மக்கள் குளிப்பதற்கும், ஏனைய பிற தேவைகளுக்கும் இந்த நீரை உபயோகித்து வருகின்றனர். ஆனால் குடிதண்ணீர்தான் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அரச அதிபர் உரிய நடவடிக்கையை விரைவில் மேற்கொண்டு தமது குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்குமாறு அக்கராயன் மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை அக்கராயன் மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அக்கராயன் மத்திய பகுதியில் நீர்த்தாங்கி அமைக்கும் பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்தினுள் பூர்த்தியாகிவிடும் எனவும் அவர்மேலும்தெரிவித்துள்ளார். (க-18)

## கண்ணீர் அஞ்சலி

### *சின்னையா சதானந்தம்*



முன்னாள் சிவசக்தி சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும், செயலாளர், பொருளாளர், போசகர் நிலைய பாடசாலை ஆசிரியராகவும் செயற்பட்ட சின்னையா சதானந்தத்தின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

***உங்கள் பிரிவால் துயருறும்
தாவடி ஊர் சிவசக்தி
சனசமூக நிலைய மக்கள்***

(20235) (15)

## மரண அறிவித்தல்

### *திருமதி இரத்தினம் வேலாயுதம்*



(முன்னாள் ஆசிரியை, யா/வட. இந்துமகளிர் கல்லூரி, பருத்தித்துறை)

இரட்ணவேல் வாசா புலோலி தெற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கண்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் வேலாயுதம் கடந்த (08.07.2012) ஞாயிற்றுக்கிழமை கண்டியில் அவரது மகனின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் வேலாயுதத்தின் (எழுதுவினைஞர்-நீர்ப்பாசனத்திணைக்களம்) அன்புத் துணைவியும், இரவீந்திரன் (கணினி விரிவுரையாளர்-இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பொல்கொல்ல), இராதாகிருஸ்ணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், குமுதினி இரவீந்திரனின் (கண்டி வலய வளவாளரும் தலாத்தோயா த.ம.வி ஆசிரியை) அன்பு மாமியும், இரதினி இரவீ ந்திரன் (மாணவி-மோபிறே கல்லூரி, கண்டி), இரகுமாரன் இரவீந்திரன் (மாணவன்-அசோகா வித்தியாலயம், கண்டி) ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2012) புதன்கிழமை புலோலியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10 மணிக்கு பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*தகவல்:*
*வேலாயுதம்-இரவீந்திரன் (மகன்)*

*புலோலி தெற்கு,*
*கிராமக்கோடு, பருத்தித்துறை.*

(சி/1431) (15)

## பதவி வெற்றிடம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியர் நலன்புரி சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத்திற்கு கீழ்க்காணும் பதவிக்கு வெற்றிடம் உள்ளது. பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**பதவி:- கணக்காளர்**

**தகைமைகள்:-**

***1) பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம்.***

***2) வயதெல்லை:- 20 - 35 வரை***

***3) வசிப்பிடம்:- வைத்தியசாலையில் இருந்து 7 கிலோமீற்றர் சுற்றுவட்ட பிரதேச எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.***

***4) கல்வித் தகைமைகள்:***

***1) க.பொ.த உயர்தரத்தில் வணிகப்பிரிவில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியெய்தி இருக்கவேண்டும்.***

***2) கணினி அனுபவம், கணினி சான்றிதழ், சேவை அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.***

***5) வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.***

***6) நியமனம்:- ஒப்பந்த அடிப்படையிலானது.***

மேற்குறிப்பிட்ட விவரங்களை உள்ளடக்கியதாக சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடனும் சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளுடனும் 13.07.2012 ஆம் திகதி காலை 9 மணிக்கு வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் நேர்முகத்தேர்வில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

*தலைவர்*
*ஊழியர் நலன்புரி சிக்கனக் கடன் கூட்டுறவுச்சங்கம்*
*ஆதார வைத்தியசாலை,*
*பருத்தித்துறை*

(சி/1430) (15-22)

## கும்பாபிஷேகம்

நெடுங்கேணி மாறாயிலுப்பை நாகதம்பிரான் ஆலயத்தில் கும்பாபிஷேக நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. மறுநாள்ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேக நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம குருவாகிய சிவஸ்ரீ வை.கு.ஜெயசுதக் குருக்கள் கும்பாபிஷேக நிகழ்வை சிறப்பாக நிறைவேற்றி வைத்தார்.

கும்பாபிஷேக நிகழ்வில் மாறாயிலுப்பைக் கிராம மக்களும், பண்டாரக் குளம் [illegible] கலந்து கொண்டனர்.(க-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கோவன், றுக்ஸ்மன் அதிரடி யாழ். இந்து வரலாற்று வெற்றி


கல்கோவன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இடையிலான ஒரு நாள் துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 433 ஓட்டங்கள் வித்தியாசத்தில் யூனியன் கல்லூரி அணியை வீழ்த்தி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி அதிரடி வேட்டை நடத்தி 491 ஓட்டங்களைக் குவித்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் துடுப்பாட்டத்தில் கல்கோவன் 77 பந்துகளைச் சந்தித்து ஒரு சிக்ஸர், 21 பவுண்டரிகள் அடங்கலாக 115 ஓட்டங்களையும் அவருக்கு இணையாக ஆடிய றுக்ஸ்மன் 66 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடங்கலாக 106 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இவர்களுடன் சஜீகன் 61 பந்துகளில் 89 ஓட்டங்களையும், பிருந்தாபன் ஆட்டமிழக்காது 63 பந்துகளில் 86 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 491 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்து வீச்சில் யூனியன் கல்லூரி சார்பாக லனுசன் 4 இலக்குகளைச் சரித்தார்.

492 என்னும் இமாலய இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் துல்லிய பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் வெறும் 58 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து 433 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.


றுக்ஸ்மன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சார்பாக துடுப்பாட்டத்தில் நிதர்ஷன் 17, அனிஸ்ரன் 14 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் யாழ். இந்து சார்பில் சாரங்கன் 3, சிந்துஜன் 2 , வைகரன் 2 இலக்குகளை கைப்பற்றினர்.

இலங்கைப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் வரலாற்றில் ஆகக்கூடிய ஓட்டங்களால் வெற்றியீட்டிய அணி என்ற சாதனையை யாழ். இந்துக் கல்லூரி அணி பெற்றுள்ளது. (5)

# மாகாணக் கூடைப்பந்தாட்டத்தில் யாழ். அணி வெற்றி வாகை



வலி.வடக்கு, ஜூலை 11

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி மாகாணச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி மோதிக் கொண்டது.

நான்கு கால் பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் யாழ்.மாவட்ட அணியின் கையே மேலோங்கிக் காணப்பட்டது.

எனினும் யாழ்.அணியின் வெற்றியை இலகுவாக்க வவுனியா அணி விடவில்லை. அவர்களும் தம்பங்குக்கு போராடினார்கள். எனினும் புள்ளிகளை அவர் களால் பெற முடியவில் லை.

எனவே முதல் கால் பாதி ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணி 26:0 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாம் கால்பாதி ஆட்டத்திலும் யாழ்.மாவட்ட அணி 14 : 2 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றபோது போட்டி முடிவடைந்தது.

**யாழ் அணி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி வவுனியாவை இலகுவில் வீழ்த்தி, வெற்றிமகுடத்தை சூடிக் கொண்டது**



இதேபோன்று மூன்றாம் கால் பாதி ஆட்டத்தையும் யாழ்.மாவட்ட அணி 11:2 புள்ளி கள் என்ற அடிப்படையில் தன் வசமாக்கியது. நான்காம் கால் பாதி ஆட்டத்தை யாழ். மாவட்ட அணி 12 : 0 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

ஆட்ட இறுதியில் யாழ். மாவட்ட அணி 63:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று வட மாகாணச் சம்பியனாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டது.

(ந-86)



## எவரெஸ்ட் வி.க வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை 11

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் பி அணி மோதிக் கொண்டது. இதில் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (23)

## 'எச்.பி.எல்' கரப்பந்தாட்டம்

**இன்று மோதும் அணிகள்**

- ஜப்னா கிங்ஸ் யுத் ஸ்ரார்ஸ்
- ஜப்னா பிரண்ட்ஸ் எதிர் றோயல் லீடர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்னா லயன்ஸ், சுப்பர்கிங்ஸ் எச்.பி.எல்.லில் வென்றன

பண்டத்தரிப்பு,ஜூலை 11

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஏனைய விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து 'உதயனின்' ஊடக அனுசரணையுடன் ஏற்பாடு செய்துள்ள எச்.பி.எல். கரப்பந்தாட்டப் போட்டிகளின் 4 ஆவது நாள் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

**வென்றது ஜப்னா லயன்ஸ்**

முதல் போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணியும், ஜப்னா லயன்ஸ் அணியும் மோதிக்கொண்டன. போட்டியின் முதலாவது சுற்றில் ஜப்னா கிங்ஸ் அணி 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றது. எனினும் பின்னர் சுதாரித்துக் கொண்ட ஜப்னா லயன்ஸ் அணியினர் இரண்டாம் சுற்றை 25:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் தம் வசமாக்கினர்.

எனினும் மூன்றாம் சுற்றையும் ஜப்னா லயன்ஸ் அணி 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிக்கொண்டது. ஆனால் மூன்றாம் சுற்று 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா கிங்ஸ் அணி வசமானது. தீர்க்கமான 5 ஆவது சுற்றின் இறுதி நேரத்தில் ஜப்னா லயன்ஸ் அணி அடுத்தடுத்து புள்ளிகளை பெற ஐந்தாம் சுற்று 15:11 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா லயன்ஸ் வசமானது. எனவே 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் போட்டியில் ஜப்னா லயன்ஸ் வெற்றி பெற்றுக்கொண்டது.

**சுப்பர்கிங்ஸ் சாதித்தது**

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் றோயல்லீடர்ஸ் அணியும், சுப்பர்கிங்ஸ் அணியும் மோதிக்கொண்டன. முதலாவது சுற்றில் 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் றோயல்லீடர்ஸ் அணி வெற்றி பெற்றுக்கொண்டது. எனினும் இரண்டாவது சுற்றில் போராடிய சுப்பர்கிங்ஸ் அணி 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மூன்றாவது சுற்றும் 25:13 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் மிக இலகுவாக சுப்பர்கிங்ஸ் அணி வசமானது. 4 ஆவது சுற்றில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்று களமிறங்கிய றோயல்லீடர்ஸ் அணி வெற்றிக்காக போராடியது. ஆனாலும் இறுதி நேரத்தில் சிறப்பாக விளையாடிய சுப்பர்கிங்ஸ் அணியினர் 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 4 ஆவது சுற்றைக் கைப்பற்றிக் கொள்ள 3:1 சுற்று என்ற அடிப்படையில் சுப்பர்கிங்ஸ் அணி போட்டியில் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. (ந-130)

## தடகளப் போட்டியில் வெற்றி பெற்றோர்

வவுனியா,ஜூலை11

வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மாவட்ட மட்ட தடகளப் போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீர வீராங்கனைகளின் விவரம் வருமாறு,

**தட்டு எறிதல்**

- ரி.றேகன்-வவுனியா பிரதேச செயலகம்
- ரி.காண்டீபன்-வவுனியா பிரதேச செயலகம்
- ஆர்.தர்ஷன்-வவுனியா பிரதேச செயலகம்

**ஈட்டி எறிதல்**

- எஸ்.அருண்குமார்-வவுனியா பிரதேச செயலகம்
- எஸ்.சுஜீவன்-வவுனியா பிரதேச செயலகம்
- ஏ.சத்தியராஜா-வவுனியா பிரதேச செயலகம்

**பெண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

- ஜே.றொஜிற்கா-வவுனியா பிரதேச செயலகம்
- ஆர்.தனுசியா-வவுனியா பிரதேச செயலகம்
- பி.கிருஷாந்தினி- வவுனியா பிரதேச செயலகம்

**200 மீற்றர்**

- கே.லேகாசினி- வவுனியா பிரதேச செயலகம்
- ஜே.றொஜிற்கா-வவுனியா பிரதேச செயலகம்
- எம். அம்பிகாதேவி-வவுனியா பிரதேச செயலகம்

தொடரும்...

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவ கழகங் களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு,

**பி.ப 4 மணி**

- மயிலங்காடு ஞானமுருகன் வி.க எதிர் பாரதி வி.க

**பி.ப 5 மணி**

- ஊரெழு றோயல் வி.க எதிர் உரும்பிராய் சென்.மைக்கல் வீ.க (ந-23)




# திணறுகிறது பாகிஸ்தான்

இலங்கையுடனான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி திணறி வருகின்றது. மழை காரணமாக நேற்று முன்தினம் ஆட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்த இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பத்த பாகிஸ்தான் அணி நேற்றைய நாள் நிறைவில் 27 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினை இழந்துள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்ற பாகிஸ்தான் அணி, 3 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் தற்போது விளையாடி வருகின்றது. இதில் முதலாவது டெஸ்டில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளதுடன், இரண்டாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்திருந்தது. இந்த நிலையில் தொடரை சமன் செய்வதற்கு மூன்றாவது டெஸ்டில் வென்றாக வேண்டிய கட்டாயத்தில் பாக். களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி இலங்கையின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 226 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பாகிஸ்தான் அணி சார்பில் அதிகபட்சமாக அஷாட் சபக் 75, மிஷ்பா உல்ஹக் 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் திஸ்ஸர பெரேரா 4, ஹேரத் 3, குலசேகரா ஓர் இலக்கினை கைப்பற்றியிருந்தனர்.

இந்த நிலையில் தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பத்த இலங்கை அணிக்கு ஆரம்பம் ஏமாற்றமாக அமைந்தது. முதலாம் நாளின் நிறைவில் இலங்கை அணி 44 ஓட்டங்களுக்குள் 3 இலக்குகளை இழந்திருந்தது. சந்திமால் 8, சங்ககார 0, ஜெயவர்தன 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர். பரணவிதாரன 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

இரண்டாவது நாள் ஆட்டம் முற்றுமுழுதாக மழையினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மூன்றாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது.

தரங்க பரணவிதான, திலான் சமரவீர ஜோடி இலங்கையின் ஆரம்ப இழப்பை ஈடுகட்டியது. இருவரதும் நிதான இணைப்பில் இலங்கை அணி மீண்டெழுந்தது. இந்த ஜோடி 4 ஆவது இலக்குக்காக 143 ஓட்டங்களைப் பகிர்ந்தது. சமரவீர 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து இலங்கை அணி மீண்டும் தடுமாறத் தொடங்கியது. தொடர்ந்து நுழைந்த மத்தியூஸ் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 200 ஓட்டங்களுக்குள் 5 இலக்குகளை இழந்தது. தொடர்ந்து தரங்க பரணவிதான 75, பரசன்ன ஜெயவர்தன 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 236 ஓட்டங்களுக்குள் 7 இலக்குகளை இழந்து தடுமாறியது.

இதன் பன்னர் சுதாகரித்து ஆடிய திஸ்ஸர பெரேரா, குலசேகரா ஜோடி இலங்கை அணியை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றது. இவர்களின் பொறுப்பான ஆட்டத்தினால் இலங்கை அணி 300 ஓட்டங்களைத் தாண்டியது. பந்து வீச்சில் கலக்கிய திஸ்ஸர பெரேரா துடுப்பாட்டத்திலும் அசத்தி அரைச்சதம் கடந்தார். 8 ஆவது இலக்குக்காக 84 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் குலசேகரா 33 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார்.

தொடர்ந்து நுழைந்த ஹேரத் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியில் அணி 337 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் திஸ்ஸர பெரேராவும் 75 (86 பந்துகள்) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கையின் முதலாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பில் யுனைட்கான் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு 111 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பத்த பாகிஸ்தான் அணி ஆரம்பத்திலேயே அதிர்ச்சியை சந்தித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய தௌபீக் உமர் 4 ஓட்டங்களுடன் குலசேகர வேகத்தில் பவிலியன் திரும்பினார். நேற்றைய ஆட்டநிறைவில் பாகிஸ்தான் அணி ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து 27 ஓட்டங்களைப் [illegible] னர். இன்று ஆட்டத்தின் நான்காவது நாளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5)





# நாட்டுக்காக யாருடனும் இணைந்து விளையாடுவேன்

இந்தியாவின் முன்னணி ரென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா, லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இரட்டையர் பிரிவில் விளையாடத் தகுதி பெற்றார். இவர் கலப்பு இரட்டையர் பிரிவில் லியண்டர் பயசுடன்தான் விளையாட வேண்டும் என்று இந்திய ரென்னிஸ் சங்கம் அறிவித்தது. இது தொடர்பில் தனது ஏமாற்றத்தை வெளியிட்டிருந்த சானியா தான் பூபதியுடன் விளையாட எதிர்பார்த்திருந்ததையும் வெளியிட்டிருந்தார். இந்த நிலையில் நாட்டுக்காக யாருடனும் இணைந்து சேர்ந்து விளையாடத் தயார் என்று சானியா மிர்சா கூறியுள்ளார்.

சானியா மிர்சா இரட்டையர் பிரிவில் ருஷ்மி சக்கரவர்த்தியுடனும், கலப்பு இரட்டையர் பிரிவில் லியண்டர் பயசுடனும் இணைந்து விளையாடுகிறார். அணி தெரிவு தொடர்பாக இந்திய ரென்னிஸ் சம்மேளனம் மீது சானியா மிர்சா பாய்ந்து இருந்தார்.

லியண்டர் பயஸ், மகேஷ் பூபதி கருத்து வேறுபாட்டால் தன்னை பலிக்கடா ஆக்குவதாக கூறியிருந்தார். கலப்பு இரட்டையர் பிரிவில் மகேஷ் பூபதியுடன் இணைந்து சானியா சமீபத்தில் பிரெஞ்சு திறந்த பட்டத்தை வென்றிருந்தார்.

ஒலிம்பிக்கில் மகேஷ் பூபதியுடன் இணைந்தால் பதக்கம் வெல்லலாம் என்று நினைத்திருந்தார். லியண்டர் பயசுடன் விளையாட மாட்டேன் என்று மகேஷ்பூபதி கூறியதால் ரென்னிஸ் சங்கம் மாற்று ஏற்பாடு செய்து 2 அணியை அறிவித்தது.

அத்தோடு கலப்பு இரட்டையர் பிரிவில் பயசுடன்தான் சானியா ஆடவேண்டும் என்று அறிவித்தது. எனவே தான் ரென்னிஸ் சங்கம் மீது அவர் பாய்ந்து இருந்தார்.

இந்த நிலையில் இந்த விவகாரம் குறித்து சானியா மிர்சா கூறுகையில், ஒலிம்பிக் போட்டிக்காக நான் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறேன். எதிர் வரும் 23 ஆம் திகதி லண்டன் புறப்பட்டுச் செல்கிறேன். இரட்டையர் பிரிவில் ருஷ்மி சக்கரவர்த்தியுடன் இணைந்து ஆடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது.

கடந்த காலங்களில் நாங்கள் இருவரும் சிறப்பாக விளையாடி இருக்கிறோம். கலப்பு இரட்டையர் பிரிவிலும் எனக்கு விளையாட வாய்ப்புக் கிடைத்துள்ளது. நாட்டுக்காக ஆடுவதாக இருந்தால் யாருடன் வேண்டுமானாலும் விளையாடுவேன். இந்தியாவுக்காக ஆடுவதால் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

அதே நேரத்தில் ஒவ்வொரு வீரர், வீராங்கனைக்கு பலமும் பலவீனமும் உள்ளன. பதக்கத்தை வெல்வதற்காக உலகம் முழுவதிலிருந்து 10,500 வீரர், வீராங்கனைகள் லண்டன் செல்கிறார்கள்.

லண்டன் ஒலிம்பிக்கில் நான் 100 சதவீத திறமையுடன் விளையாடுவேன் என்றும் தன்னால் பதக்கம் வெல்ல முடியும் எனவும் சானியா தெரிவித்தார். (5)

# அணியில் யூவி இடம்பிடிக்க வேண்டும்

இந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் இலங்கையில் இடம் பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக்கான அணியில் இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் இடம்பெற வேண்டும் என்று எதிர்பார்ப்பதாக இந்தியக் கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.



புற்றுநோய் காரணமாக ஐக்கிய அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுப் பின்னர் இந்தியா திரும்பி பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ள சகல துறை வீரரான யுவராஜ் சிங் தொடர்பாகவே பிரதம தேர்வாளர் தனது நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

யுவராஜ் சிங் தற்போது பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்த ஸ்ரீகாந்த் அது மிகவும் சிறப்பான விடயம் எனத் தெரிவித்தார். இந்திய அணிக்காக உலகக்கிண்ணத்தை வென்றுகொடுத்த வீரர் திரும்பவும் அணிக்குத் திரும்ப வேண்டும் எனத் தெரிவித்த அவர், அவரது மீள்வருகைக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடருக் கான அணி இந்த மாத இறுதியில் தெரிவுசெய்யப்படும் எனத் தெரிவித்த அவர், இன்னமும் காலமிருப்பதாகவும் தெரிவித்தார். இலங்கை - இந்தியத் தொடருக்கான இந்திய அணியைத் தெரிவு செய்த பின்னரே ஸ்ரீகாந்த் இவ்வாறு தெரி வித்தார்.

கடந்த ஆண்டு உலகக் கிண் ணத்தை இந்திய அணி வெற்றி கொள்வதற்கு முக்கிய காரணியாக அமைந்த யுவராஜ் சிங், அந்தத் தொடரின் நாயகன் விருதையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(5)

# பிங்கியின் சர்ச்சை முடிவுக்கு வருமா?

பாலின சர்ச்சையில் சிக்கியுள்ள இந்திய தடகள வீராங்கனை பிங்கி பிரமானிக்கின் 'குரோமசம்' பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்பட இருக்கின்றது.

மேற்குவங்கத்தைச் சேர்ந்தவர் பிங்கி பிரமானிக். ஆசிய விளையாட்டு உட்பட பல போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். இவர் மீது பெண் ஒருவர் பாலியல் பலாத்கார முறைப்பாடு கொடுத்தார். பிங்கி ஓர் ஆண் என்று முறைப்பாட்டில் கூறியிருந்தார். இதன் அடிப்படையில் கைது செய்யப்பட்ட பிங்கிக்கு, தனியார் மருத்துவமனையில் பாலின பரிசோதனை செய்யப்பட்டது. இதில், ஆண் என்று தெரிய வந்தது. தொடர்ந்து இவருக்கு 'குரோமசம்' சோதனை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது குறித்து அரசு மருத்துவமனையின் பேராசிரியர் துகின் கன்டி கூறுகையில், பரிசோதனையின் அறிக்கை கிடைத்துள்ளது. பிரச்சினை நீதிமன்றில் இருப்பதால், நாங்கள் அறிக்கையில் பிரிக்க முடியாது. அறிக்கை தற்போது மருத்துவக் குழுவின் தலைவர் ககாலியிடம் உள்ளது. இதை பாராசட் தலைமை நீதிபதிக்கு, விரைவில் அனுப்பவுள்ளோம் - என்றார்.

தற்போது நீதிமன்ற காவலில் உள்ள பிங்கிக்கு ஆதரவாக மனித உரிமை அமைப்புகள் களமிறங்கியுள்ளன. இவரை பொலிஸார் மிகவும் மோசமாக நடத்துவதாக குற்றஞ்சாட்டியுள்ளன. இவரை உடனடியாக விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. இந்த நிலையில் இவரது 'குரோமசம்' சோதனையின் முடிவு இந்த வழக்கில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(5)


## அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

ஆசிரியராய், ஆசிரிய ஆலோசகராய், அதிபராய்ப் பணியாற்றி இன்று பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கும் கற்கோவளம் பருத்தித்துறையைச் சேர்ந்த சதானந்தன் இராகவானந்தன் [B.A, LL.B, Dip in S.W] அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இத்துறையிலும் இனிது துலங்க இறை அருள் வேண்டி நிற்கும்

தாய், மனைவி, மச்சான், மாமி, குடும்பத்தினர் (சி/120)(3-6-22)



## Bachelor of Information Technology (BIT) External Degree OF University Of Moratuwa

**Now In Jaffna** @ ESOFT Computer Studies (Pvt) Ltd

யாழ் மண்ணில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் ESOFT
புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நுழைவுத்தகுதிகள்

- உயர்தரத்தில் எந்தத்துறையிலாவது ஒரே தடவையில் 3 பாடச்சித்தி மற்றும் சாதரணதரப்பரீட்சையில் கணித பாடத்தில் "C" தரச்சித்தி.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நாளன்று

- ✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (ஆங்கிலம்)
- ✓ கல்விச் சான்றிதழ்கள் (O/L,A/L)
- ✓ NIC பிரதி என்பவற்றை உறுதிப்படுத்தி ஒப்படைக்கவும்.

அத்துடன்,
University of Moratuwa
Bank of Ceylon
A/C No 70993353 எனும் இலக்கத்திற்கு ருபா 750 செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டையும் இணைத்து எமது கிளையில் ஒப்படைக்கவும்.

Application Closing Date 15.07.2012

(சி/1401)

மேலதிக தொடர்புகளுக்கு : 077 990 5611

ESOFT Computer Studies [Pvt] Ltd
17/1,Brown Road, Jaffna.
Hotline:077 3099308 Tel:021 222 4142

ESOFT The Leader in Professional ICT Education

edexcel



(சி/1414)

## BTEC HND in Business Management

## Earn a UK Degree

உங்கள் தொழில் துறைகளில் உங்களது தகுதியையும் தராதரத்தையும் உயர்த்திக் கொள்ளவும், உங்களது முகாமைத்துவ புலமையையும் திறமையையும் நிரூபித்து காட்டவும் இக்கற்கை நெறி வழியமைத்து தருகின்றது.

| Batch 1 | Batch 11 |
|---|---|
| Saturday / Sunday — 8.30 to 12.30 | Saturday / Sunday — 1.00 to 5.00 |

புதிய பிரிவு ஆரம்பம் :14.07.2012 காலை 10.00 மணி

மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iis.edu.lk

விற்பனையாகின்றன
A/L-2012
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகளுக்குரிய
பொதுச் சாதாரணப் பரீட்சை வழிகாட்டி
தொகுப்பு:- த.தவசேகர்
விலை 250/=
பூபாலசிங்கம், அன்னை, ஸ்ரீலங்கா, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, கவிதா, கஜன் புத்தக நிலையங்களில்
(சி/1405)(15-6-22)

## விற்பனைக்கு

1) Machinary and Welding plants
2) China machinary, length, 2350 mm (8 Feet)
3) Russia Machinary length, 1700 mm (5 feet 7 inches)
4) Grinder
5) Welding machinary
6) Vice

போன்றவை விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0242221048
சூசைப்பிள்ளையார் கோயில் வீதி, வவுனியா
(20231) (6.22.15)

## பொருளியல் இறுதிச் சந்தர்ப்பம்

பொருளியலிலுள்ள அனைத்துக்
கணிதப் பகுதிகளுக்குமான
இலகு நுட்ப விளக்க வகுப்புகள் - 10 மணித்தியாலத்தில் முழுமையாக வழங்கப்படும் (தேசியப் பாடசாலை ஆசிரியர்)
தொடர்பு: 077 8780 814
(வசதிக்கேற்ப நேரம் வழங்கப்படும்.
(20225) (45.6.22)

## மணல் விற்பனைக்குண்டு

கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

4 டிரக்டர் - 21, 000/=

தொடர்புகளுக்கு : ரமேஸ்
072 2694462
(19737)(6,8,)

யாழ் குடாநாட்டில் முதன்முறையாக தன் செல்லக் குரலால் உலகத்தமிழர்களை வியக்க வைத்த விஜய் TV ஜூனியர் சுப்பர் சிங்கர் புகழ் பாடகி அல்கா அஜித்துடன் மற்றும் பல முன்னணிக் கலைஞர்கள் கலந்து கலக்கும்

மாபெரும் இசை நிகழ்ச்சி

21.07.2012 சனிக்கிழமை
வடமராட்சி
நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில்
மாலை 6.00 மணிக்கும்
22.07.2012 ஞாயிற்றுக்கிழமை
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்
பி.ப. 3.00 மணிக்கும்
நடைபெறவிருக்கும் அல்காவின் ஆனந்த ராகங்களைக் கண்டுகளிக்க இரசிகப் பெருமக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.



C.A.C.EVENT MANAGEMENT
(20293) (5-6-22)

## ஷாம்சன் இங்கிலிஷ் - 3மாத பயிற்சிநெறி

எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதுக்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக்கொள்கிறது. தமிழ்க்குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.

தவறான வழியில் ஆங்கிலத்தை கற்றுக்கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ எழுத்துப் பயிற்சியோ நாம் வழங்குவதில்லை மாறாக ஏனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்ததுவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப் படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய் மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகின்றனர். நீங்களும் இப் பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் (14.07.2012) இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணையுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 09 - 11
பிரிவு II 11 - 01
பிரிவு III 02 - 04

3 மாத பயிற்சி நெறிக்கட்டணம் ருபா 3000.00

பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம் (முதல் வகுப்பு இலவசம்)

SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி பின்புறம்) தொ.பே. 0776214567 (சி/1423)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உறுதியைப் போல
உழைப்பும்
இருந்தால் வெற்றி
காணுவாய்
-ஷெல்லி-

புதன் பொய்கை A

உதயன் | 11 ஜூலை 2012 புதன்கிழமை | பக்கங்கள்: நான்கு



# பழங்கதைகளின் உலகப் படைப்பு ஒரு கண்ணோட்டம்

**இணையவன்**

உலகம் படைக்கப்பட்ட விதம் பற்றி வரலாற்று முற்கால மக்கள் பல கதைகளைப் படைத்திருக்கிறார்கள். அவற்றுள் இருவிதமான வற்றை வேறுபடுத்திக் காணலாம். உலகைப் படைத்தது தாய்தான். அவளை உலக மாதாவாகக் கருதி படைக்கப்பட்ட கதைகள் ஒரு விதம். சில கதைகளில் தாய் கடலையும், வானையும், படைத்தாள் என்றும் பூமியையும், ஜீவராசியையும் அவளுடைய வழித் தோன்றலான ஓர் ஆண் மகன் படைத்தான் என்றும் கூறப்படுகிறது. உலக நாடுகளில் வழங்கி வரும் பழங்கதைகள் மூலம் உலகப் படைப்பு எவ்வாறு சொல்லப்பட்டு வந்தது என்பதை இந்தக் கட்டுரை விளக்குகிறது.

**வாய்மொழி வழிக் கதைகள்:-**

உலகப் படைப்புக் கதைகள் நாகரிக முற்கால மக்களின் வாய்மொழி வழிக் கதைகள் சொல்லப்பட்டு வந்துள்ளன. இவற்றை எழுத்துத் தோன்றிய பின்னர் கதைகளாகவும் காப்பியங்களின் பகுதியாகவும் சமய நூல்களின் பகுதியாகவும் ஆக்கிவிட்டார்கள். இவற்றுள் பழமையானவை, பாபிலோனிய சுமேரியக் கதைகள், கிரேக்கக் கதைகள், யூதர்களது கதைகள், ஆரியர்களது வேத புராணக் கதைகள் முதலியனவாகும். இந்தக் கதைகளின் மூலம் சமூக அடிப்படை வளர்ச்சி நிலையையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**உலகப் படைப்புக் கதைகளின் தோற்றம்:-**

புனை கதைகளின் தோற்றம் பற்றி ஆண்ட்டு லாங் கூறுவது. ''பண்டைய மக்களின் சடங்காசாரங்களினின்றும் இந்தக் கதைகள் எழுகின்றன. மனிதனது இயல்பு பற்றியும், பிரபஞ்சத்தின் மூலாதாரம் பற்றியும் தத்துவ பூர்வமான சிந்தனைகளாக இந்தப் புனை கதைகளைக் கருதமுடியாது பிரபஞ்சம் எப்படித் தோன்றியது என்ற வினாவிற்கு இவை கற்பனையான விடை என்று கொள்ளுவதற்கில்லை.''

ஈ.ஓ.ஜெம்ஸ் கூறுகிறார். ''படைப்புக் கதைகளும் சாவின் துவக்கமும் மனித இனத்தின் அழிவும் பல புனை கதைகளின் கருப்பொருள்களாக இருப்பினும் அவை தத்துவ விளக்கங்களாக இல்லை என்பது ஆண்ட்ரூ லாங் கூறுவது போல உண்மையே''.

''படைப்புக் கதைகளில் மிகப் பழமையானவை பாபிலோனிய சுமேரியக் கதைகள், கிரேக்கக் கதைகள் ஆகியவையாகும்.'' அதற்கடுத்த பண்பாட்டுக் கூட்டத்தில் யூதர்களது யெஹோவா - படைப்புக் கதையைக் கூறலாம். இதைப் பின்பற்றியே பைபிள் உலகப்படைப்பின் ''வரலாற்றைக்'' கூறுகிறது. ஏறக்குறைய அதே பண்பாட்டு வளர்ச்சி நிலையில் ரிக்வேதத்தில் காணப்படும் புருஷ சூக்தக் கதைகளைக் கூறலாம்''. பின்னர் விஷ்ணு புராணத்தில் கூறப்படும் நாராயணன் - உலகப் படைப்புக் கதையைக் குறிப்பிடலாம்.

**பாபிலோனிய உலகப் படைப்புக் கதை:-**

''பாபிலோனியாவின் பண்டைய தலைநகரான நினிவேயை ஜார்ஜ்ஸ்மித் 1873 இல் அகழ்ந்து ஆராய்ந்த பொழுது அஷீர் பானிபால் (கி.மு.2000) என்ற அரசனின் காலத்தில் எழுதப்பட்ட சுட்டமண் ஓட்டுச் சாசனங்கள் கிடைத்தன. அவற்றில் படைப்பு எழுதப்பட்டுள்ளது. சுட்டமண் ஓடுகளின் வாசகத்தை எல்.டபிள்யூ.கிங் என்ற ஆய்வாளர் படித்து 'படைப்புப்பற்றி ஏழு ஓடுகள்' என்னும் நூலை எழுதினார். அந்தச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு உலகப் படைப்பு எவ்விதம் தோன்றியது என்பதைப் பார்ப்போம்.

இந்தப் பிரபஞ்சத்தின் ஆரம்பகாலத்தில் கடல் மட்டுமே இருந்தது. மேலே இருக்கும் வானத்திற்கும், கீழே இருக்கும் பூமிக்கும் பெயர்களிடப்படவில்லை. இவற்றின் தந்தை ''அப்ஸ'' தாய் ''தியாமத்'' தரை இன்னும் உருவாகவில்லை. அவற்றில் விதியும் நிர்ணயிக்கப்படவில்லை. கடலில் ஓர் அசைவு உண்டாயிற்று. பல தேவதைகள் நீரில் இருந்து வெளிவந்தன. ''லக்மூ'' தேவனும் ''லச்சாமு'' தேவியும் தோன்றினார்கள். தேவர்களில் முக்கியமான தேவன் ''இயா'' என்பவன் எல்லாத் தேவர்களை விடவும் அறிவு மிக்கவனாகவும் வலிமை உடையவனாகவும் இருந்தான். இவனுடைய மகன் ''மொரோடாக்'' ஆவான்.

அப்ஸிமும் தியாமத்வும் இருளடைந்த கடலில் குழப்பத்தினுள் வாழ்ந்தார்கள். அவர்களின் வழித்தோன்றலான தேவர்கள் பிரபஞ்சத்தைத் தங்கள் ஆளுகைக்குட்படுத்திக் குழப்பத்திலிருந்து ஒழுங்கை நிலைநாட்ட முயல்வதைக் கண்டு மூலபிதாவும் மூலமாதாவும் கவலையுற்றார்கள். தியாமத் புயலைத் தோற்றுவித்தாள். அப்ஸ தேவர்களை அழிக்க முயற்சி செய்ய இதனை அறிந்த இயா அப்ஸவை அவன் மகன் மும்முவையும் அழித்துவிடுகிறான்.

இதனை அறிந்த தியாமத் பழிவாங்கப் புறப்படுகிறாள். கிங்குவை தளபதியாக்கிப் போர் தொடுக்கிறாள். தியாமத் வலிமை அறிந்த தேவர்கள் யாரும் போர் செய்ய விரும்பவில்லை. இயாவின் மகன் மொரோடாக் வீரத்துடன் எதிர்த்து தியாமத்தை வீழ்த்துகிறான்.

பின்பு தியாமத் உடலை இருபகுதியாக வெட்டி ஒருபகுதியைப் பூமியாகவும் மற்றொரு பகுதியை வானமாகவும் படைத்தான். சூரியன், சந்திரன், கோள்கள் போன்றவற்றைப் படைத்தான். பின்பு மனிதர்களையும் படைத்தான் என பாபிலோனிய உலகப் படைப்புக் கதை சொல்லப்படுகிறது.

**சுமேரிய உலகப் படைப்புக்கதை:-**

காடுகளிலும், கடலிலும், பயங்கர ராட்சஸ மனித விலங்குகள் இருந்தன. அவை மலையில் வாழ்ந்தன. அவை மலையில் வாழ்ந்த வீரர்களுடன் பகைமை கொண்டிருந்தன. வீரர்களின் மன்னன் இயா மனிதர்களின் விரோதிகளான இந்த விலங்குக் கூட்டத்தின் மீது படையெடுத்துச் சென்று அவற்றின் தலைவனான அப்ஸவையும் அவன் மகளான மும்முவையும் கொன்றான். ஆனால் மிகவும் சக்திவாய்ந்த தியாமத் என்னும் ''உலகமாதா'' இன்னும் உயிரோடு இருந்தாள். தனது உறவினர்களின் சாவிற்காக அவள் பழிவாங்கத் துடித்தாள். இயா அவளோடு போரிடத் தயாரிப்பு செய்தான். சாதாரண ஆயுதங்களால் அவளைக் கொல்லமுடியாது. அவள் உயிர் கல்லீரலில் உள்ளது என்றும் அவளை அழிக்க இயா, தன் மகன் மொரோடாக்கை அனுப்பி வெற்றி பெறுவதாகவும் பின்பு உலகம் படைக்கப்பட்டது என்றும் படைப்புக் கதை கூறப்படுகிறது.

**கிரேக்கப் படைப்புக் கதை:-**

கிரேக்க உலகப் படைப்புக் கதை நான்கு வகையாகக் கூறப்படுகிறது. அவற்றில் ஒன்றைப்பற்றிப் பார்ப்போம்.

ஆதியில் ''யூரிநோம்'' என்னும் உலக மாதா குழப்பத்திலிருந்து எழுந்தாள். தனது கால்களைப் பதிக்க இடமில்லாமல் கடலையும் வானையும் பிரித்தாள். கடலின் மீது தனியாகத் தாண்டவமாடினாள். அவள் தெற்கு நோக்கி ஆடிக்கொண்டே போனாள். காற்று புதிதாக எழுந்து அவளைப் பின்பற்றி வீசியது. அவள் காற்றை இரு கைகளாலும் பிடித்துத் தேய்த்தாள். ''ஒபியான்'' என்ற பெரும் பாம்பு தோன்றியது. ஒபியானுடன் ''யூரிநோம்'' சேர்ந்தாள். ''மோரியாஸ்'' என்ற வடகாற்று அவளைக் கர்ப்பம் கொள்ளச் செய்தது.

பின்னர் அவள் ஒரு புறாவின் உருவெடுத்துப் பிரபஞ்ச முட்டையிட்டாள். அவள் ஆணையை ஏற்று ''ஒபியான்'' அதனைச் சுற்றி ஒருவளையமாகத் தனது உடலை வளைத்துக் கொண்டான். அந்த முட்டையிலிருந்து சூரியன், சந்திரன், கிரகங்கள், பூமி, நட்சத்திரங்கள், பூமியிலுள்ள ஆறுகள், மரங்கள், தாவரங்கள், உயிரினங்கள் அனைத்தும் வெளிவந்தன. அதிலிருந்து அவள் ஏழு கிரகங்களையும் படைத்தாள். ஒவ்வொரு கிரகத்திலும் ஒரு ராட்சஸியையும், ராட்சஸனையும் வாழ அனுப்பினாள்.

இந்தக் கதை பிளினியின் இயற்கை ''வரலாறு'' ஹோமரின் ''பெலாஸ்கியர் வரலாறு'' கூறும் இலியாதின் பகுதி, ''அப்பலோனியஸ்'', ''ரோடியஸ்'' என்னும் பழம் புலவரது ''ஆர்கோ நாடிகா'' என்று நூல்களில், முந்தையர் செவிவழிக் கதைகளெனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பைபிளில் கூறப்படும் உலகப் படைப்புக் கதை:-**

இந்தக் கதையில் தேவன் ஆவியாக அசைந்தாடி வானையும் கடலையும் பிரித்தான், சூரியன், சந்திரன், நட்சத்திரங்களைப் படைத்தான், தாவரங்களையும், விலங்குகளையும், பறவைகளையும் படைத்தான். கடைசியில் தன்னுருவத்தில் மனிதனைப் படைத்தான். மண்ணால் உருவம் செய்து அதில் தனது மூச்சை ஊதினார். முதல் மனிதன் ஆதாம் உயிர் பெற்றான் என்று பைபிளில் கூறப்படும் உலகப் படைப்புக் கதையை அறியமுடிகிறது.

**இந்திய - ஆரியப் படைப்புக் கதைகள்:-**

வேதத்தில் முக்கியமாகக் கடவுளர்களே போற்றப்படுகின்றார்கள். முக்கிய கடவுளர்கள் இந்திரன், மித்ரன், வருணன், ருத்ரன், அக்னி இவர்கள் அனைவரும் ஆண் ஆற்றலுடைய தேவர்கள்.

''ரிக்'' வேதத்தில் புருஷசூக்தத்தில் கூறப்படும் உலகப்படைப்புக் கூறுகிறது. ''புருஷன்'' என்ற பெயரே ஆணைக் குறிக்கும். அவனைப் பற்றி ''ரிக்'' வேதம் கூறுகிறது.

''புருஷனுக்கு ஆயிரம் தலைகள், ஆயிரம் கண்கள், ஆயிரம் கால்கள் உலகம் முழுவதிலும் பத்து விரற்கடை இடத்தை அவன் உருவம் அடைத்துக் கொள்ளும். இந்தப் புருஷனே இப்பொழுது இருக்கும் எல்லாமாகவும் இனிவரப்போகும் எல்லாமாகவும் இருக்கிறான். அழிவில்லாத அவன் உணவால் பெருக்கமுற்று இருக்கிறான். அவனது பெருமை உயர்ந்தது. அதனினும் பெரியவன் ''புருஷன்'' முக்கால் பங்கு புருஷன் மேலே போய்விட்டான், கால் பங்கு இங்கேயிருக்கிறான். தின்பது, தின்னாதது எல்லாவற்றின் பக்கத்திலும் அவன் நடந்தான்''.

இவ்வாறு புருஷனை வர்ணித்துவிட்டு, அவனைத் தேவர்கள் பலியிட்டதாகவும், அவனுடைய உடலின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் சூரியன், சந்திரன் முதலிய கோளங்களும் உலகமும், விலங்கினங்களும் பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய சூத்திர இனங்களும் தோன்றின எனவும் இப் ''புருஷசூக்தம்'' விவரிக்கிறது.


நாராயணப் படைப்புக் கதைகளில் நாராயணன் பாற்கடலில் பாம்பின் மீது உறங்குகிறான். அவனது நாபியிலிருந்து ஒரு தாமரை தோன்றுகிறது. அதிலிருந்து லட்சுமியும், பிரமனும், சந்திரனும் தோன்றுகிறார்கள். பிரமன் உலகம் படைத்தான். இவ்வாறு இந்திய - ஆரிய உலகப் படைப்புப் பற்றிக் கதை வழங்கிவருகிறது.

உலகப் படைப்புக் கதைகளைப் பார்க்கும்போது மூன்று கருத்துக்களை அறிந்து கொள்ள முடிகிறது. 1. பெண்ணால் உலகம் படைக்கப்பட்டது. 2. ஆணால் உலகம் படைக்கப்பட்டது. 3. பெண் ஒரு பகுதியையும் ஆண் மற்றொரு பகுதியையும் படைத்தார்கள் என்பதைக் காண முடிகிறது.

சமூக அடிப்படை வளர்ச்சி நிலையை மறைமுகமாக நமக்கு விளக்குகிறது. விஞ்ஞான ஆய்வுகளும், சிந்தனை வளர்ச்சியும் ஏற்பட்டிராத காலத்தில் பண்டைய மக்கள் இயற்கையைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் இத்தகைய விடைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதை அறியும்போது வியப்பாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியத்தில் பயமுறுத்தும் அசுரர்கள்



# முட்டை வடிவிலான வீடு



கனடாவைச் சேர்ந்த ஒருவர் மரத்தின் நடுவில் முட்டை வடிவிலான வித்தியாசமான வீட்டை அமைத்து அதில் வசிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளையும் செய்துள்ளார்.

# பார்ப்பவர்களை மிரள வைக்கும் சாகசம்

பங்ஹீ ஜம் எனும் உயரமான பகுதிகளில் இருந்து குதிக்கும் சாகச விளையாட்டு ஒன்றில் சுமார் 135 பேர் கலந்து கொண்டு குதித்து பார்ப்பவர்களை மிரள வைத்துள்ளனர்.

இந்தச் சாகசமானது ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் அமைந்துள்ள மிக உயரமான புகையிரதப் பாலம் ஒன்றின் மேலிருந்து நிகழ்த்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.





# வித்தியாசமான வடிவங்களில் கணினி மவுஸ்

# செடியுடன் காணப்படும் கழுத்தணிகள்






# உடற் பயிற்சியில் ஈடுபடும் பாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

19




### ஆயுள்ரேகையின் குற்றங்குறைகளும் பலாபலன்களும் (தொடர்ச்சி)

16.ஆயுள் ரேகையில் கிளைகள் காணப்படின் உயிர்ப்புள்ள சக்திக்கு பிரி




வினை உண்டாகிறது. இவை கீழ்நோக்கியேனும் மேல்நோக்கியேனும் தோன்றும். பிரதம ஆயுள் ரேகை செம்மையாயிருந்து கிளைகள் மெல்லியதானால் ஆரோக்கியத்தைப் பாதிக்காது.

17.ஆயுள்ரேகையில் ஐம்பது வயதுக்கு கீழ் நோக்கிய கிளைகள் காணப்படில் தேகபலம் குன்றினாலும் காரியசித்தியைக் குறிக்கும். பிரபலமும் கீர்த்தியும் புகழும் உண்டாகும். உத்தியோகம் செய்து ஒய்வெடுத்த பின் உலகு, புகழ், கீர்த்தி காத்துக்கொண்டிருக்கும். வாழ்க்கையில் செய்யமுடியாதவைகளையெல்லாம் சுலபமாகச் செய்து வெற்றிபெறுவர். அநேகருக்கு ஐம்பதுக்கு மேல் யோகம் உண்டாவதைப் பார்க்கிறோம்.

18.ஆயுள்ரேகையின் உற்பத்தியில்




கிளை குருமேட்டை நோக்கிச் சென்றிருந்தால் விருப்பமும் நினைத்த காரியமும் கைகூடும் என்பதைக் குறிக்கும். ஆயுள்ரேகையின் கிளை சனிமேட்டை நோக்கியிருந்தால் சனி ஆதிக்கத்தில் பெரும் கீர்த்தி உண்டாகும். இப்படியே மற்றக் கிரகங்களையும் நோக்கிச் சென்றிருந்தால் நல்ல பலனைக் கொடுக்கும்.

19. ஆயுள்ரேகையில் புள்ளடிகளும் காணப்படும். இவைகளும் நோய் அல்லது ஆபத்துக்களைக் குறிக்கும்.

20.ஆயுள்ரேகையில் நட்ஷத்திரக் குறிகளும் காணப்படும். இவை அந்தக் கால அளவில் திடும் சம்பவமாய் மரணத்தைக் குறிக்கும். நட்சத்திரக் குறியில் உயிர்புள்ள சக்தி இடியைப் போல் திடுக்கிடச் செய்து ஆயுளை முடிக்கும்.

ஆயுள்ரேகையில் காணப்படும் குறிகள் மிகச் சிவந்து தோன்றினால் சச்சரவினால் ஏற்படும் ஆபத்தைக் குறிக்கும். ஆயுள்ரேகையை நிதானமாகக் கவனித்து குற்றங்குறைகளைப் பார்த்து கிரக நிலைமைகளையும் அவைகளில் உள்ள குறிகளையும் கொண்டு பலாபலன்களை அறிய வேண்டும்.

**விதிரேகையின் அமைப்பு**

ஏழு கிரக ரேகைகளில் இந்தச் சனி ரேகையை விதி ரேகை என்று சாஸ்திர விற்பன்னர்கள் கூறுவர். இதைத் தலைவிதி என்றும் சொல்லுவதுண்டு. விதிவசப்பட்ட மக்கள் பலவாறாய்க் காணப்படுவதற்கும் பல காரணங்கள் உள்ளன. இந்த விதி ரேகை கையின் அடிமட்டத்திலிருந்து உற்பத்தியாகி மேல்நோக்கிச் செல்லுகிறது.

இந்த விதிரேகைக்கும் மூளைக்கும் நெருங்கிய சம்பந்தமுள்ளதால், உயிர்ப்புள்ள மின்சாரசக்தி மூளையினின்றே செல்லுகிறது. இந்தச் சக்தி, விதி ரேகையின் இறுதியினின்று மேல் நோக்கிச் செல்வதால் விதியின் கால அளவை அடியிலிருந்து கணக்கிடப்படுகிறது. அதனால் விருத்ததசை சனிமேட்டில் கவனிக்க வேண்டியதாகிறது. இந்த ரேகை தேகாரோக்கியத்தைப் பற்றி எதுவும் தெரிவிப்பதில்லை.

இது உயர்வு தாழ்வுகளைக் காட்டிக் கொடுக்கிறது. எவர் கையைப் பார்க்கும் போதும் விதிரேகையை முதலில் பார்ப்பது வழக்கம். இது வாழ்வில் சுகமா துக்கமாவென்றும், கஷ்ட ஜீவனமா, சுக ஜீவனமா என்றும் புலப்படுத்துகிறது. எல்லாம் 'தலைவிதி' போல் நடக்குமென்ற பழமொழியில் இரு வினைகள் (நல்வினை தீவினை) கலந்திருக்கின்றன. ஒருவர் வாழ்க்கை சுமுகமாய் நடந்து வருவதாயின், நல்வினை அதாவது நல்ல அதிர்ஷ்டம் தொடர்ந்து வருவது அறியத்தக்கது.

இதனால் என்ன விளங்குகிறது? முற்பிறவியில் செய்த நற்கருமத்தின் பலனை அனுபவிக்கின்றனர் என்பதாகும். வாழ்வு மிகுந்து வரும்போது அறிவு, ஆரோக்கியம், செல்வம், சுகம் முதலிய எல்லாப் பாக்கியங்களும் உண்டாகின்றன. விதி ரேகை நன்கு அமைந்துவிட்டால் எல்லாச் சம்பத்தும் தானே வருமென்பதைக் குறிக்கும். இதெல்லாம் சனீஸ்வரன் ஆட்சிக்குள் இருந்து வருகிறது. நல்ல அதிர்ஷ்டம் பொங்கி வரும்போது விதி அல்லது அதிர்ஷ்டம் மிகுந்த மகத்துவமுள்ளதாய் அமைகிறது.

பாடுபடாமலும் சிரமமில்லாமலும் பொருள் குவிப்பதால் சோம்பேறிகள் தங்கள் காரியம் சித்தியாகாது போயின் மற்றவர்கள் நல்ல அதிர்ஷ்டமுள்ளவர்களென்றும், தாங்கள் துரதிர்ஷ்டசாலிகள் என்றும் சொல்லிக் கொள்கின்றனர். இதையே 'கொடுத்து வைத்தால்தானே கிடைக்கும்' என்று பொதுவாகச் சொல்லுவதுண்டு. சந்தர்ப்பங்களை நழுவவிடாமல் வேலை செய்வோருக்குத்தான் அதிர்ஷ்டமும் தொடர்ந்து வருகிறது.

(தொடரும்)

## பாடலில் ரசனையா?

பேருந்துகளில் பயணம் செய்கின்ற போது, அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பேருந்துகளில் பயணம் செய்கின்ற போது சனநெரிசலிலும் பலருக்கு பாட்டு வேண்டியிருக்கும். பேருந்துகளில் சில வேளைகளில் சத்தமாக பாடல்களை ஒலிக்க விடுவதால் பலவிதமான இடைஞ்சல்கள் ஏற்படும். பாடலை போட்டிருந்தால் 'இறக்கம்' என்று சொல்வது கூடக் கேட்காது. அந்தளவுக்கு சத்தமிருக்கும் அத்துடன் இறங்க வேண்டியவர்களும் கூட தாம் இறங்க வேண்டிய இடத்தை மறந்து பாடல் ரசனையில் ஊறியிருப்பர்.

கே.கே.எஸ், பலாலி வீதி மார்க்கங்களில் சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள், காலை மற்றும் மாலை வேளைகளில் விடுமுறையில் செல்லுகின்ற, விடுமுறை முடித்து திரும்புகின்ற இராணுவத்தினரை ஏற்றிச் செல்கின்றன.

ஏன்... எதற்கு... எப்படி?

இராணுவத்தினரை ஏற்றிச் செல்லும் போது இந்தப் பேருந்துகளின் பாடலின் மொழிகளும் மாறுகின்றன. சிங்கள பைலா பாடல்களை ஒலிக்கவிட்ட படியே இந்தப் பேருந்துகள் செல்கின்றன. இராணுவத்தினர் வற்புறுத்தி அவ்வாறு ஒலிக்க விடச் சொல்லிக் கேட்பதில்லை. சாரதிகளே அவ்வாறு பாடல்களை மாற்றி ஒலிபரப்புகின்றனர்.

தமிழர் பிரதேசத்தில், தமிழர்களுடன் பயணிக்கும் ஒரு சில இராணுவத்தினருக்காக இவ்வாறு ஏன் நடக்க முற்படுகின்றார்கள்? சிங்களவர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்த தமிழ்த் தலைவர்களே முயன்று தோற்றுப் போகின்ற நிலையில் இந்தப் பாடல்களை ஒலிபரப்பியாவது அவர்களைக் கவிழ்த்து விடலாம் என்று நினைப்பதிலும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது.

நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

உதயனில் வெளிவரும் அனைத்துப் பக்கங்களும் தரமாக உள்ளன. மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தொடர்பில் செய்திகளை வெளியிடும் உதயனுக்கு அந்த மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் வெளி உலகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டிய பொறுப்பு உள்ளது. புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னிப் பகுதி இருந்தபோது அந்த மக்கள் வாழ்வாதார முன்னேற்றத்திலும் கலாசார பண்பாட்டிலும் முன்னணியில் நின்றனர். இப்பொழுது அந்த மக்கள் தமது அன்றாட வாழ்வை நகர்த்த முடியாமல் சிரமப்படுகின்றனர்.

இவர்களின் பிரச்சினைகளை உதயன் முழுமையாக வெளியிடுமா? அந்த மக்களின் விடுதலையில் முன்னேற்றம் காணவும் உதயன் உழைக்க வேண்டும்.

உதயனை முழுமையாக நம்புகின்றோம். என்பதால் இதைக் கேட்கிறோம். ஆகவேதான் வன்னி நிலைமைகள் தொடர்பில் உதயன் முழுமை பெறவேண்டும் என விரும்புகிறோம்.

சுதன்,
கிளிநொச்சி

★ ★ ★

பல்லாயிரக்கணக்கான உதயன் வாசகர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். சுடச்சுட செய்திகளை வழங்கும் பத்திரிகை உதயன். இவன் ஒருபோதும் அதிகாரத்துக்கு அடி பணியான். அரசுக்கு வால் பிடிக்கும் பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தில் முளைவிட்டுள்ளன. ஆனால் உதயன் பத்திரிகையை எவராலும் அழிக்க முடியாது.

உதயன் மென்மேலும் வளர்ந்து கொண்டே செல்கிறது. வவுனியா சிறைச்சாலைக் கைதி ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட செய்தியை, அக்குவேறு ஆணி வேறாக வெளியிட்டமை பாராட்டத்தக்கது.

எவருக்கும் அஞ்சாது உதயன் பத்திரிகையில் மட்டும் இந்தச் செய்தியை முழுமையாக காணக்கூடியதாக இருந்தது. தமிழர்கள் வதைபடும் செய்திகளை ஒழிவு மறைவு இன்றி முழுமையாக வெளியிட்டு வருவதால் உதயன் நீடூழி வாழ்வான்.

கிருபன்,
வதிரி

★ ★ ★

தமிழர் விடுதலை
கைக்கெட்டும் வரைக்கும் உதயன்
இருளிலும் பிரகாசம் கொள்வான்
இருள் சூழ்ந்த
தமிழர் பகுதிகளில்
பாதுகாவலனாக உதயன்
இருக்கின்றான்
ஒவ்வொரு நாளும்
அதிகாலையில் வீட்டு வாசலில்
வந்து வாழும் உதயனே
உதயமாகும் நாளினை
விழாமல் பார்க்கிறாய்

யாழினி, புலோலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமலரூபன் ஒரு குட்டிமணி

திறந்த வெளிச்சிறைச்சாலைகளில் சிங்கள அரசால் தமிழ் மக்கள் படுகின்ற துன்பங்களை வார்த்தைகளால் சொல்லமுடியாமல் இருக்கும்போது, சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல்கைதிகளின் நிலமையும் படுமோசமாகவே இருக்கிறது. போர் இடம்பெற்ற மண் இது. இன்னும் சூடு அடங்கவில்லை.

இந்தப் போரில் லட்சக்கணக்கில் தமிழ் மக்கள் உயிரிழந்தும் ஆயிரக் கணக்கில் இளைஞர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டும். இன்றும் விடுதலையில்லாமல் சிறைகளில் தமிழ் இளைஞர்கள் வாடுகின்றார்கள். ஆயுதம் தூக்கினர், விடுதலைப்புலிகளின் போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்தனர் என்ற குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். இவர்களின் விடுதலை எப்போது? சிறைகளில் அடைபட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின், யுவதிகளின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது. போர் இடம்பெற்ற காலப் பகுதியில் பல தமிழ் இளைஞர்கள், யுவதிகள் சிங்களப் படைகளால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மீதான சித்திரவதைகள் குறையவில்லை. இதிலிருந்து ஒன்று மட்டும் தெரிகிறது. சிங்கள அரசால் தமிழர்களுக்கு என்றைக்கும் விடிவு கிடையாது என்பது. ஆகவே தமிழர்களுக்கு விடிவு என்பது போராட்டத்தில் தான் இருக்கிறது. அது ஆயுதப் போராட்டமாக இருக்கலாம். அல்லது அகிம்சைப் போராட்டமாக இருக்கலாம். போராட்டம் இல்லாமல் போயின் தமிழர்கள் சிங்களவர்களுக்கு என்றைக்கும் அடிமைகள். தொடரும் சிறைச்சாலை கொடூரங் களில் கடந்த வாரம் வவுனியா சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் 32 பேர் கொழும்பு மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு கடுமையான முறையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சேர்க்கப்பட்டவர்களில் கணேஷ் நிமலரூபன் [வயது 28] என்ற இளைஞர் சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார். நிமலரூபனின் சாவு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கும் ஏனைய தமிழ்க் கைதிகளுக்கு பயபீதியை ஏற்படுத்தியுள்ளது.

சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்க யாரும் இல்லாததால் நிமலரூபனுக்கு நடந்தது போல தங்களுக்கும் நடக்கலாம் என்ற பயத்தில் உறைந்து போயுள்ளனர். இறந்த தமிழ் அரசியல் கைதி நிமலரூபனின் சடலம் கூட நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறும் அரசு, பிள்ளையை இழந்து துடிக்கும் பெற்றோருக்குத் தமது மகனின் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கும் இடமளிக்க மறுக்கிறது. உலகில் வேறெந்த நாடுகளிலும் நடைபெறாத அவலநிலைதான் எமது நாட்டில் நடைபெறுகின்றதென மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அமைப்பு தெரி வித்தது. இறந்த தமது மகனின் சடலத்தைப் பெற்றுக் கொள்வதற்காகப் பெற்றோர் பொலிஸாரின் பின்னால் அலைந்து திரிகின்றனர். இறந்த ஒருவரின் உடலை அவரின் சொந்த மண்ணில் புதைப்பதற்குக்கூட இந்த அரசு அனுமதி மறுக்கிறது. கடைசித் தமிழன் இருக்கும் மட்டும் போராட வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

> படுகொலை செய்யப்பட்ட தமிழ் கைதி நிமலரூபனின் மரணம் கூட அடுத்த ஜெனிவா மாநாட்டில் அரசுக்கு மரணப் பொறியாக மாற்றம் பெறலாம். இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு அரசு பதிலளித்தேயாக வேண்டும். இதிலிருந்து விடுபட முடியாது.

தமிழர் போராட்டம் மௌனித்த நிலையில் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. ''சுயவிருப்பம் என்ற போர்வையில் அரசியல் கைதிகளைப் பலவந்தமாகப் புனர்வாழ்வு முகாம்களுக்கு மாற்றுவதை உடனடியாக நிறுத்துவதுடன் அவர்கள் அனைவரையும் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும்'' என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக கடிதம் ஒன்றை அந்த அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- 1971 கிளர்ச்சியில் பங்குபற்றி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிங்கள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்காகத் தென்னிலங்கை சமூகம் அன்று முன்வந்தது. அது சிங்கள சமூகத்தில் முக்கிய பங்கை வகித்தது என நாம் கருதுகின்றோம். 1971 இல் சிங்கள அரசியல் கைதிகளுக்கு அரசியல் அந்தஸ்து கொடுத்து விடுதலை செய்யப்பட்ட நாட்டில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு அதே போன்று விடுதலையைப் பெற்றுக் கொடுக்காததன் மூலம் இனவாத நிலைக்குள் கட்டுப்பட்டிருக்கின்ற தன்மையை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இது நாட்டின் அபிவிருத்திக்கும் இந்த நாட்டின் எதிர்காலத்துக்கும் பெரும் பிரச்சினையை எதிர்காலத்தில் ஏற்படுத்தக் கூடிய விடயமாக மாறிவிடும் என்றுள்ளது. எது எப்படியோ. குற்றச்சாட்டுகளை மேலும் மேலும் அரசு வாங்கிக் கொண்டிருக்கிறது. வவுனியா கைதியின் கொலை ஜெனிவா மாநாட்டில் மஹிந்த அரசுக்கு மரணப் பொறியாக மாறும் என்று ஐக்கிய சோஷலிஸக் கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதில்லை மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் அவசியம் என ஜெனிவாவில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. அடுத்த வருடம் அரசு மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும்போது அதைச் சர்வதேசம் ஏற்காது. நாட்டில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் சம்பவங்களே இதற்குப் பிரதான காரணமாகும். அடுத்து படுகொலை செய்யப்பட்ட தமிழ்க் கைதி நிமலரூபனின் மரணம் கூட அடுத்த ஜெனிவா மாநாட்டில் அரசுக்கு மரணப் பொறியாக மாற்றம் பெறலாம். இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு அரசு பதிலளித்தேயாக வேண்டும். இதிலிருந்து விடுபட முடியாது.

■ பித்தன்

# பள்ளிக்கூடமும், பாலும் முட்டையும்

போரால் ஏராளமான துயர்களைச் சுமக்க நேரிட்டாலும், ஒருசில நன்மைகளும் கிடைக்கத்தான் செய்கின்றன. மதிய வேளை உணவுக்காக மட்டுமல்லாமல் இடைநேரங்களில் சத்துணவுகளையும் மாணவர்கள் புசிப்பதற்கான திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதுதான் தரம் 9இற்கு உட்பட்ட மாணவர்களுக்கு தினமும், முட்டை, பால் வழங்கும் திட்டம்.

போர் தந்த பாதிப்புகளில் போசாக்கின்மையும் முக்கியமானது. பொருளாதாரத் தடை நீடிப்பு, தொழில் வாய்ப்பின்மை, தொடர்ச்சியான இடப்பெயர்வு போன்ற காரணங்களால் சத்தான உணவினைப் போர் தின்ற இடங்களில் வாழ்ந்த பிள்ளைகள் உண்ண முடியாமல் போனது. இதனால் போருக்குப் பின்னர் பல சிறுவர்கள் போசாக்கின்மை காரணமாக பல்வேறு நோய்களுக்கு ஆளாகியிருந்தனர். போர் முடிவுற்ற பின்னும் மக்களின் வாழ்வு இன்னமும் சீரான நிலைக்கு முற்றாகத் திரும்பவில்லை. அதனால் பலர் இன்னமும் தினக் கூலிகளாகவே இருப்பதால் சத்தான உணவுகளை பிள்ளைகளுக்கு இப்போதாவது கொடுக்கக் கூடிய சூழல் இருப்பதில்லை. இதன் காரணமாக சோர்வு, கல்வியில் நாட்டமின்மை, அடிக்கடி நோய்வாய்ப்படுதல், நிர்ப்பீடண சக்தியின் வீரியம் குறைதல் போன்ற தாக்கங்களை இளையோர் சந்திக்க நேரிடுகின்றது. இவற்றையெல்லாம் ஓரளவுக்கேனும் குறைக்கும் நோக்குடன் பால், முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது ஒரு வரவேற்கப்பட வேண் டிய விடயம் தான்.

## கோணல் கோலங்கள்

ஆனாலும் சில குறைபாடுகளையும் இந்தத் திட்டம் கொண்டிருப்பதாக ஆசிரியர்கள் கூறுகின்றனர். காலை 9.30 மணிக்கு முன்னர் மாணவர்களுக்கு பால் வழங்க வேண்டும். ஒரு பாடசாலையில் எப்படியும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்கள் இருப்பர். அவர்கள் அனைவருக்கும் பாலைக் காய்ச்சி, ஆற வைத்து, குவளைகளில் ஊற்றிக் கொடுக்க எப்படியும் ஒன்றரை மணித்தியாலமாவது தேவை. அதைவிட அங்குள்ள மாணவர்களுக்கு முட்டை அவித்து, அவற்றை ஒவ்வொன்றாக உடைத்து, பின்னர் அவற்றை பாதியாகப் பிளந்து வழங்க வேண்டும். அதற்கு பின்னர் மதிய உணவு கொடுக்க வேண்டும். ஆக மொத்தத்தில் இவற்றையெல்லாம் குறைவின்றிச் செய்ய வேண்டுமானால் ஆசிரியர்கள் வெண் கட்டிகளையும் பாடப் புத்தகங்களையும் தூர எறிந்து விட்டு கையில் அகப்பையோடு களத்தில் இறங்கினால்தான் சாத்தியம்.

உண்மையில் இப்போது வடக்கில் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து வருவதாக ஒப்பாரிகள் எழுந்துவரும் நிலையில், இதுபோன்ற திட்டங்களுக்காகவும் ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் நேரங்களை இழந்தால் இன்னமும் நிலைமை மோசமாகிவிடும். சில பாடசாலைகள் இத்தகைய திட்டங்களில் ஆசிரியர்களின் நேரம் விரயமாவதைத் தடுக்க பழைய மாணவர் சங்கங்கள், பெற்றோர் சங்கங்கள் என்பவற்றின் ஆளணி உதவியை நாடுகின்றனர். அப்படி குறித்த சங்கங்கள் ஆளணி உதவியைச் செய்ய முன்வந்தாலும்கூட பணிகள் சீராக நடைபெறுவதை பொறுப்பு வாய்ந்த ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும். அந்தப் பொறுப்பு வாய்ந்தவர்கள் பாடசாலையின் ஆசிரியர் குழாமைத் தவிர வேறு எவரும் இருப்பதில்லை என்பதால் அந்தப் பணியையும் அவர்களே செய்ய வேண்டியுள்ளது.

**ஓடுகாலி**

ஆனால் இத்தகைய சிக்கலுக்கு தற்காலிகமாக ஒரு நல்ல தீர்வு இருப்பதாக ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

"தற்போது வடபகுதியில் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டவர்கள் எந்தவித வேலையும் அற்று ஒவ்வொரு கிராம அலுவலகர்களுடன் பிரித்து விடப்பட்டுள்ளனர். தற்போது அவர்களுக்கு என்ன வேலை கொடுக்கலாம் என்று அரச உயர் அதிகாரிகள் தலையைப் பிய்த்து யோசிக்கின்றார்கள். எனவே இத்தகைய பட்டதாரிப் பயிலுநர்களுக்கு குறித்த பால், முட்டை வழங்கும் திட்டத்தை நெறிப்படுத்தும் பணிகளை வழங்கினால் ஆசியர்கள் நேரம் விரயமாகாது தடுப்பதோடு, பயிலுநர்களும் சமூகப் பெறுமதிமிக்க சேவையைப் புரிந்த திருப்தியை அடைய முடியும்".- இதுவே அவரது திட்டம். அதிகாரக் கதிரையில் உட்கார்ந்து இருப்பவர்கள் இத்தகைய வழிமுறைகள் பற்றியும் சிந்தித்தால் பால், முட்டை திட்டம் இன்னும் சுலபமாக நிறைவேற வாய்ப்புண்டு.

இதேவேளை இன்னொரு சிக்கலும் இந்தத் திட்டத்தில் உண்டு. ஒரு பிள்ளைக்கு தினமும் 150 மி.லீற்றர் பாலும், பாதி முட்டையும் வழங்க வேண்டும் என்பதே திட்டத்தின் நோக்கம். ஆனால் அதற்குரிய பண ஒதுக்கீடு குறித்த பொருள்களின் சந்தை விலையைப் பார்க்கிலும் குறைவாகவே வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பால், முட்டை என்பவற்றை பெருந்தொகையாக கொள்வனவு செய்யவும் முடியாதுள்ளதாக பாடசாலை அதிபர்கள் பலர் கவலை கொள்கின்றனர். குடாநாட்டில் மொத்தப் பால் உற்பத்தியை விடவும் இரு மடங்கு அதிகமான பால் இந்தத் திட்டத்துக்கு தேவைப்படுவதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் சைவசமய ஆசாரங்களை கடைப்பிடிக்கும் பாடசாலைகளில் மாணவர்களுக்கு எப்படி முட்டையை வழங்குவது. என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் வலி போக்கும் நந்தியாவெட்டை



அலங்காரத் தாவரமாக வீடுகளில் வளர்க்கப்படும் நந்தியாவெட்டை பல்வேறு மருத்துவ பயன்களைக் கொண்டுள்ளது. இலை, மலர், வேர், வேர்பட்டை, போன்றவை மருத்துவ பயன் கொண்டவை. கண்நோய், பல்நோய் ஆகியவற்றுக்கு நிவாரணமாக ஆயுள்வேத மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

அமினோ அமிலங்கள், கரிம அமிலங்கள், அதிக அளவில் காணப்படுகின்ற செயற்திறன் மிக்க வேதிப் பொருளா ம். இலைகளின் பால் சாறு காயங்களின் மேல் பூசப்படுவதால் வீக்கம் குறையும். கண்நோய்க்கும் ம ந்தாக உதவுகிறது.

நந்தியாவெட்டைப் பூவானது நேந்திரகாசம், படலம் லிங்க நாச தோஷங்கள், சிரஸ்தாப ரோகம், ஆகியவற்றை இல்லாமல் செய்யும். இதில் ஒற்றைப் பூ. இரட்டைப் பூ என்கின்ற இரண்டு இனமுண்டு. இரண்டும் ஒரே குணமுடையவை. கண்களில் உண்டான கொதிப்புக்கு இதை கண்களை மூடிக்கொண்டு மிருதுவாக ஒற்றடம் கொடுக்கக் கண் எரிச்சல் நீங்கி குளிர்ச்சியாகும்.

நந்தியாவெட்டைப் பூவும் தேள் கொடுக்கிலையும் கசக்கிக் கண்களில் இரண்டொரு துளி விட்டுக் கொண்டு வர சில தினங்களில் கண்களில் காணும் பூ எடுபடும்.

மலர்களின் சாறு எண்ணெய் கலந்து பயன்படுத்தும் போது எரிச்சல் உணர்வை மட்டுப்படுத்தும்.இதன் பூக்கள் வாசனையூட்டும் பொருளாகப் பயன்படுகின்றது. இது நிறத்திற்கும் பயன்படுகிறது.இதிலிருந்து மை தயார் செய்கிறார்கள்.

நந்தியாவெட்டைபூ 50 கிராமை போத்தலில் இட்டு நல்லெண்ணெயில் ஊற வைத்து 20 நாள்கள் வெயிலில் வைத்து வடிகட்டி ஓரிரு துளி காலை மாலை கண்ணில் விட்டுவர பூ, சதைவளர்ச்சி, பல வித கண் படலங்கள், பார்வை மந்தம் நீங்கும்.

நந்தியாவெட்டை வேரைக் கசாயமிட்டுக் குடிக்க வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு நீங்கும். கண் நோய் மற்றும் தோல் நோய்களை குணப்படுத்தும். வேர்ப்பட்டை வயிற்றுப் பூச்சிகளுக்கு எதிரானது.பல்வலி போக்கி வலிநீக்கி குளிர்மை தரும் . வேரை வாயிலிட்டு மென்று துப்பினால் பல் வலி நீங்கும்.

# பதற்றம் வந்தால் உடம்புக்கு ஆகாது!




இளைய தலைமுறையினர் பத்தில் ஒருவருக்கு ஹைபர் பதற்றம் எனப்படும் உயர் இரத்த அழுத்த நோய் ஏற்படுகிறது.இந்த உயர் இரத்த அழுத்த நோயானது மௌனமாக இருந்து ஆளைக் கொல்லும் ஆபத்தான நோய் என்று மருத்துவ உலகினர் எச்சரிக்கின்றனர். உயர் இரத்த அழுத்தத்தினால் பக்கவாதம், இதயபாதிப்பு, சிறுநீரகக் கோளாறுகளும் ஏற்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

**உயர் இரத்த அழுத்தம்**

இன்றைக்கு பெரும்பாலானோர் சத்தான உணவுகளைத் தவிர்த்து அதிக கொழுப்பு, பல்வேறு இரசாயனங்கள் உள்ள உணவு வகைகளை உட்கொள்வதால் உடலில் அதிக கொழுப்புக் கூடுகிறது. இதனால் உடல் பருமன் நோய்க்கு ஆளாகின்றனர். மேலும் பெண்களுக்கு ஹார்மோன்கள் மாற்றத்தினால் சோர்வு, நினைவாற்றல் குறைவு, படபடப்பு ஏற்படுகிறது.அதிகமான மன அழுத்தம், மன உளைச்சல் ஏற்பட்டாலும் உயர் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது. இதன் காரணமாகவே உடலானது நோய்களின் கூடாரமாக மாறுவதோடு இளம்வயதில் மாரடைப்பு உள்ளிட்ட பல நோய்கள் அழையா விருந்தாளியாக உள்ளே நுழைகின்றன.

**பாரம்பரிய உணவுகள்**

உடலில் பிரச்சினைகள் இருக்கும் போது அது மனதையும் பாதித்து ஓமோன்களையும் பாதிக்கச் செய்கிறது. இதனால் பதற்றம் அதிகரித்து மன அழுத்தத்தில் கொண்டுபோய் விடுகிறது.சிறு வயது முதல் எமது பாரம்பரிய



உணவுகளுக்கு முதலிடம் தர வேண்டும்.ஆவியில் வேக வைத்த உணவுகள் மற்றும் பருப்பு வகைகள், தானியங்கள் அதிகளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சத்தான கீரை, காய்கறிகள், பழங்கள் சாப்பிடும் பழக்கத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்த வேண்டும். பச்சைப்பயறு, கொள்ளு, கொண்டைக்கடலை மற்றும் பீன்ஸ் உள்ளிட்ட பயறு வகைகளைச் சாப்பிடுவதன் மூலம் உடலுக்கு தேவையான புரோட்டீன் கிடைக்கிறது.சத்தான உணவுகள் உடலையும், மனதையும் உற்சாகமாக வைத்திருக்கும்.

குழந்தைகள் குளிர்பான வகைகளை தொடர்ந்து குடிக்கக் கொடுக்கவேண்டாம். அதற்குப் பதிலாக இளநீர், பழரசங்கள் சாப்பிட பழக்கப்படுத்தலாம்.

**நெல்லிக்கனி ஜூஸ்**

ஹைபர் பதற்றம் ஏற்பட்டவர்களுக்கு பூண்டு சிறந்த மருந்தாக உள்ளது.வெறும் வயிற்றில் பூண்டு ஜூஸ் பருகலாம். இது உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை குறைக்கிறது. இதன் மூலம் உயர் இரத்த அழுத்தம் ஏற்படும் வாய்ப்புக் குறைகிறது.

தினமும் காலையில் நெல்லிக்கனி சாறில் ஒரு ஸ்பூன் தேன் கலந்து ஜூஸாகப் பருகலாம்.இதனால் உயர் இரத்த அழுத்தம் கட்டுப்படும்.

உயர் இரத்த அழுத்த நோய்க்கு தர்பூசணி சிறந்த மருந்தாக உள்ளது. தினமும் தர்பூசணி பழத்தைச் சாப்பிடலாம் அல்லது தர்பூசணி பழச்சாறுடன் கசகசா சேர்த்து அரைத்து தினமும் வெறும் வயிற்றில் சாப்பிடலாம். இதனால் உயர் இரத்த அழுத்தம் கட்டுப்படும்.

**துளசி, வேப்பிலை**

5 துளசி இலைகள் 5 வேப்பிலை சேர்த்து அரைத்து தண்ணீரில் கலந்து பருகவேண்டும். ஒரு வாரத்திற்கு தொடர்ந்து இதனைக் குடித்து வர உயர் இரத்த அழுத்தம் குணமாகும்.

# புகைப்பிடிப்பதால் புத்திக்கூர்மை பாதிக்கும்

புகை மனிதனுக்குப் பகை என்பது அனைவருக்கும் தெரியும், புகைப்பிடிப்பதால் புத்திக் கூர்மை பாதிக்கும் என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. மன அழுத்தம் அதிகம் உள்ள இளைஞர்கள் அதிகளவில் புகை பிடிப்பதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

20000 இளைஞர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வில் புகைப்பிடிக்காதவர்களைக் காட்டிலும் புகைப்பிடிப்பவர்களின் அறிவாற்றல் குறைவாக இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. தினமும் ஒரு பக்கெட் சிகரெட் பிடிப்பவர்களின் அறிவுத்திறன், சராசரி ஆண்களை விட எட்டுப் புள்ளிகள் வரை குறைவாக இருக்கின்றது. தினமும் அவர்கள் புகைக்கும் சிகரெட்டின் எண்ணிக்கைக்கு ஏற்ப அறிவாற்றல் குறைவதாக அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

புகைப்பழக்கம் இல்லாதவர்களுக்கு 101 புள்ளிகள் அறிவுத்திறன் இருக்கும் நிலையில் புகைப்பிடிப்பவர்களுக்கு 94 புள்ளிகள் மட்டுமே அறிவுத்திறன் இருக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கின்றனர் ஆய்வாளர்கள். மன அழுத்தம் அதிகம் உள்ள இளைஞர்களே அதிகம் புகைப்பிடிக்கின்றனர் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆனால் புகைப்பழக்கம் மன அழுத்தத்தை அதிகரித்து மனநல பாதிப்புகளுக்கு உள்ளாக்குகிறது மேலும் புகைப்பழக்கம் குடிப்பழக்கத்திற்கும் வழிவகுக்கிறது என்பது மருத்துவர்களின் எச்சரிக்கை.

புகைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மாரடைப்பு, புற்றுநோய், ஆண்மைக்குறைவு போன்ற நோய்களால் பாதிக்கப்படுகின்றனர் என்பது தெரிந்த விசயம். ஆனால் மனைவிக்கு நுரையீரல் புற்றுநோய், இதயநோய் போன்றவற்றையும், குழந்தைகளுக்கு காதுகோளாறு, போன்ற நோய்களும் ஏற்படவாய்ப்பிருக்கிறது. புகைப்பழக்கத்தில் இருந்து மீள மனரீதியான சிகிச்சைகளை மேற்கொள்ளலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

வேலையில் பதற்றம் ஏற்பட்டால் புகையை நாடாமல் நல்ல இசையை ரசிக்கலாம். உடற்பயிற்சி, தியானம் போன்றவையும் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுக்கும் என்பது மருத்துவர்களின் ஆலோசனை.







d by Noolaham Foundation.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04.11.1931

உதிர்வு
15.07.2009

## அமரர் சபாபதி வீரசிங்கம்

அன்பான அப்பாவே! நீங்கள் எங்களை
விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் ஆனாலும்
நூறு ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயத்தில் எப்போதும்
மலராய் மலர்ந்து நிற்கும்

நாவலடி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(20282)(45,6)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கார்த்தி பூபாலசிங்கம்



மலர்வு
04★01★1937

உதிர்வு
11★07★2010

நல்லதோர் வீணைசெய்தே – அதனை
நலம்கெட இடையில் பறித்ததேனோ!
சொல்லடி சிவசக்தி – சுடர்விட்ட எம்
குடும்பத்தின் விளக்கு இடையில் அணைந்ததேனோ
காலங்கள் உருள்கின்றன மாயமாக – ஆனால்
காலனவன் செய்த காயமோ– இன்னும் ஆறவில்லை
மனதில் என்றும் உம் மாறா நினைவினை
சுமந்து நிற்கும்

417, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(20218) (45.6)

# வீடு விற்பனைக்கு

பொன்னாலை வீதி மானிப்பாயில் 2 பரப்புக் காணியுடன் பயன்தரு மரங்கள் கொண்ட வீடு விற்பனைக்கு உள்ளது.

(20275)(5-6)

தொடர்பு: 077 477 9410

# விற்பனைக்கு

Mahendra Maxci, Track Bolero
உடன் விற்பனைக்கு

தொடர்பு: 077 458 8684

(20277)(5-6)

# இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது.சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம்

(20260)(6-8)

# பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய தேக ஆரோக்கியமுள்ள பொறுப்புக்களற்ற 55 வயதுக்கு மேற்படாத பணிப்பெண் தேவை.

சம்பளம் - ரூபா 10,000/=
தொடர்பு: 077 082 4931

# வீடு விற்பனைக்கு

கொக்குவில் சம்பியன் வீதியில்
ஐந்து பரப்புக் காணியில்
அமைந்துள்ள பெரிய வீடு
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 021 2250136,
077 2528968

(சி/1409)(6-8)

# வயல் காணி விற்பனைக்கு

கணேசபுரம் கிளிநொச்சியில் A9 பாதையில் உள்ள கந்தசாமி கோயில் முன் உள்ள கணேசபுரம் வீதியில் A9 பாதையில் இருந்து 1000 மீற்றருக்குள் உள்ள இரண்டு போக நீர்ப்பாசன வசதியும் மின்சாரம் எடுக்கக் கூடியதுமான (1½) ஒன்றரை ஏக்கர் வயல் காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 633 7307,021 492 1344




# மரண அறிவித்தல்

## சின்னையா கனகரட்ணம்



20/1, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கனகரட்ணம் (09.07. 2012) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் செல்லம்மாவின் அன்புக்கணவரும் சரஸ்வதி, யோகம்மா, லட்சுமி (ஜேர்மனி), யோகேஸ்வரி, காலஞ்சென்ற சடாசிவம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், திருச்செல்வம் (டென்மார்க்) திருஞானச்செல்வம் (டென்மார்க்), விவேகானந்தன்(கனடா), அகல்யா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் கஜேந்தினி (டென்மார்க்), சசிகலா (டென்மார்க்), கமலநாதன் (பிரான்ஸ்- உரிமையாளர் நியூ பிரசாந்தி ஜுவல்லறி-யாழ்) ஆகியோரின் மாமனும் பிரசாந்தி, பிறேமிலன், விதுஷன், றேவஜன், திகல்லியா, ரேணுதீசன், கஜிவ், சஞ்சீவ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

20/1, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(20287)(5-6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org